# மலர் காட்டும் வாழ்க்கை



டாக்டர் சி. பாலசுப்பிரமணியன்
எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி.

# மலர் காட்டும் வாழ்க்கை

டாக்டர் சி. பாலசுப்பிரமணியன்
எம். ஏ., எம். லிட்., பிஎச். டி.
தமிழ்த்துறைத் தலைவர்
சென்னைப் பல்கலைக் கழகம்

நறுமலர்ப் பதிப்பகம்
சென்னை. 29

முதற் பதிப்பு : ஏப்பிரல், 1980
இரண்டாம் பதிப்பு : டிசம்பர், 1982

விலை : ரூ. 7-00

விற்பனை உரிமை :
பாரி நிலையம்
184, பிரகாசம் சாலை,
சென்னை-600 001.

ஆசிரியரின் பிற நூல்கள் :

தமிழ் இலக்கிய வரலாறு
உருவும் திருவும்
கட்டுரை வளம்
வாழையடி வாழை
மனோன்மணீயம் (பதிப்பு)
காரும் தேரும்
முருகன் காட்சி
இலக்கிய அணிகள்
பெருந்தகை மு. வ.
சான்றோர் தமிழ்
இலக்கியக் காட்சிகள்
நல்லோர் நல்லுரை
The Status of Women in Tamilnadu during the Sangam Age
A Study of the Literature of the Chera Country.

மாருதி பிரஸ், 173, பீட்டர்ஸ் ரோடு, சென்னை-600 014.

# முன்னுரை

பழந்தமிழ் இலக்கியங்களைக் 'கொங்கு தேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி' யாக நின்று சுவைத்து மகிழ்ந்து அதன் வெளியீடாய்ச் சில இலக்கியக் கட்டுரைகள் முகிழ்த்தன. அவ்வப் போது சில இதழ்களுக்கும் கட்டுரை எழுத வேண்டிய இன்றியமையாமை ஏற்பட்டது. அம் முறையில் இந் நூலின் பல கட்டுரைகள் உருவாயின.

இலக்கிய இன்பத்திற்கு ஈடு இணை ஏது மில்லை. இதனாலன்றோ புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், 'கன்னல் தரும் தமிழே நீ ஒரு பூக்காடு; நானோர் தும்பி' என்றார். இலக்கிய இன்பத்தில் திளைக்கும்பொழுது எல்லையில்லா இன்பத்தினை எய்த முடியும். அறிவியல் வேக மாக வளர்ந்துவரும் இந்நாளில் மனம் பண்படு வதற்கும் அமைதி பெறுவதற்கும் இலக்கியக் காட்சிகள் வழங்கும் ஈடற்ற இன்பம் மாசு மறுவற்ற இன்பமாகும். 'யான் பெற்ற பேறு பெறுக இவ் வையகம்' என்னும் பெருநோக்கில் யான் சுவைத்து மகிழ்ந்த இலக்கியக் காட்சி களை இனிதுறக் கட்டுரைகளாக்கி இலக்கியப் பசி மிகுந்த தமிழ்கூறு நல்லுலகின் முன் படைக்கின்றேன்.

தமிழகம்<br>
சென்னை-600 029<br>
25—4—1980

சி. பா.

# உள்ளுறை


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | மலர் காட்டும் வாழ்க்கை | 1 |
| 2. | அன்பான வாழ்க்கை | 14 |
| 3. | மங்கல மனையறம் | 23 |
| 4. | தலைவியின் தவிப்பு | 33 |
| 5. | பொய் மழை | 38 |
| 6. | நல்ல குறுந்தொகை | 47 |
| 7. | புறநானூற்றில் நட்பு | 67 |
| 8. | பண்டைத் தமிழ்க் கல்வி | 77 |
| 9. | திருக்குறள்—ஓர் அறிவுக் களஞ்சியம் | 87 |
| 10. | சிலம்பில் வேடுவர் குறவர் | 103 |
| 11. | மணிமேகலை காட்டும் பண்புகள் | 117 |
| 12. | மகளிரும் விருந்தும் | 131 |

# 1. மலர் காட்டும் வாழ்க்கை

பழந்தமிழர் தாம் வாழ்ந்த நிலப்பகுதியினை 'நாவலந் தண்பொழில்' என வழங்கினர். இவ் வழக்கு, தாம் உறையும் நிலத்தினைப் பொழிலாக—சோலையாகக் கூறும் மரபு, பண்டைத் தமிழர் இயற்கைமாட்டுக் கொண்ட அன்பினை இனிதுறக் கிளத்தும். செடி கொடிகள் மிடைந்து, இலையுந் தழையும், பூவும் கனியும் நிறைந்து காணும் சோலையாகத் தாம் வாழ்ந்த நிலத்தினைக் கருதிய பான்மை உள்ளுதற்குரியது. மேலும், தாம் வாழ்ந்த பகுதியினை 'நானிலம்' என்று அழைத்தனர். மலையும் மலையைச் சார்ந்த இடமும் குறிஞ்சி என்றும், காடும் காட்டைச் சார்ந்த இடமும் முல்லை என்றும், வயலும் வயலைச் சார்ந்த இடமும் மருதம் என்றும், கடலும் கடலைச் சார்ந்த இடமும் நெய்தல் என்றும் கூறப்பட்டன. முல்லையும் குறிஞ்சியும் தத்தம் இயல்பு குன்றி, வளம் குறைந்து, வற்றிய நிலையிற் காணப்படுமேயாயின் அந் நிலப்பகுதி 'பாலை' எனப் பட்டது.[1] இவ்வாறு ஐந்நிலம், ஐந்திணை என்னும் வழக்கு ஏற்பட்டது.

## நிலங்களின் பெயர்க் காரணம்

தமிழ் மக்கள் வரலாற்றிற்கு எட்டாத காலந் தொடங்கியே நிலத்தை ஐந்திணையாகப் பிரித்து, அதன் இயற்கையே பண்பாட்டின் அடிப்படை எனவும் உணர்ந்திருந்த திறமும், ஒவ்வோர் நிலத்திலும் அவ்வச் சூழ்நிலைக்கு ஏற்ற

---

1. 'முல்லையுங் குறிஞ்சியும் முறைமையின் திரிந்து
நல்லியல் பிழந்து நடுங்குதுய ருறுத்துப்
பாலை யென்பதோர் படிவங் கொள்ளும்.'
—சிலம்பு. காடுகாண் காதை : 64-66.

பண்பாடே இயற்கையாய் அமையும் என்று கண்டு, அதன் அடிப்படையிலேயே நிலத்தினை ஐந்திணைகளாகப் பிரித்தனர் என்றும், அவ்வத் திணைகட்கு அவர் இட்ட பெயர்கள் அவரது இயற்கை அன்பினை நன்றாகத் தெளிவுறுத்துகின்றன என்றும், நாகரிகமற்ற மக்கள் அவ்வந் நிலங்களில் தோன்றும் பயிர் அல்லது உணவுப் பொருளின் பெயரை அத் திணைகளுக்குக் கொடுத்திருப்பர் என்றும், அவ்வாறு செய்யாமல் அவ்வந் நிலத்தில் சிறப்பாகக் காணக்கிடக்கும் மலரின் பெயர்களைக் கொண்டே அவ்வந்நிலத்திற்குப் பெயரிட்டுள்ள சிறப்புப் பெரிதும் பாராட்டத்தக்கது என்றும் அறிஞர் தனிநாயக அடிகளார் குறிப்பிடுவர்.[2]

ஒவ்வோர் நிலத்திற்கும் பெயர் அமைந்த காரணத்தைத் தொல்காப்பியத்தின் பண்டை உரையாசிரியராம் இளம் பூரணர் பின்வருமாறு கிளத்துவர் :

'முல்லை குறிஞ்சி என்பன இடுகுறியோ, காரணக் குறியோ எனின், ஏகதேச காரணம்பற்றி முதலாசிரியர் இட்டதோர் குறி என்று கொள்ளப்படும். என்னை காரணம் எனின்,

> நெல்லொடு
> நாழி கொண்ட நறுவீ முல்லை
> அரும்பவிழ் அலரி தூஉய்
>
> (முல்லைப்பாட்டு, 8—10)

என்றமையால், காடுறை உலகிற்கு முல்லைப்பூ சிறந்தது ஆகலானும்,

> கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
> பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே
>
> (குறுந். 3)

என்றவழி, மைவரை உலகிற்குக் குறிஞ்சிப்பூச் சிறந்தது ஆகலானும்,

---

2. தமிழ்த்தூது . பக்கம் 53—54.

இருஅல் அருந்திய சிறுசிரல் மருதின்
தாழ்சினை உறங்கும் தண்துறை ஊர

(அகநா. 286)

என்புழி, தீம்புனல் உலகிற்கு மருது சிறந்தமையானும்,

பாசடை நிவந்த கணைக்கால் நெய்தல்
இனமீன் இருங்கழி ஓதம் மல்குதொறும்
கயமூழ்கு மகளிர் கண்ணின் மானும்

(குறுந். 9)

என்றவழிப் பெருமணல் உலகிற்கு நெய்தல் சிறந்தமை யானும், இந் நிலங்களை இவ்வாறு குறிப்பிட்டார் என்று கொள்ளப்படும்.

பாலை என்பதற்கு நிலம் இன்றேனும், வேனிற்காலம் பற்றி வருதலின் அக்காலத்துத் தளிரும் சினையும் வாடுதலின்றி நிற்பது பாலை என்பதோர் மரம் உண்டாகலின், அச் சிறப்பு நோக்கிப் பாலை என்று குறிப்பிட்டார்'[3] என்பர்.

## மலர்கள் பெற்ற மதிப்பு

பண்டை உலக நாகரிகத்தில் பெயர்பெற்று விளங்கிய கிரேக்கர், உரோமர் முதலான பெருமக்கள் தம் வழிபாட்டு முறையிலும், தம்மை ஒப்பனை செய்துகொள்ளும் வகையிலும் மலர்களைப் பெரிதும் பயன்படுத்தினர் என்பர். வேள்விக்குரிய காளைகளும், விலங்குகளும் மாலை சூட்டப் பெற்ற பின்னரே வேள்வியில் பங்குபற்றின. விருந்தினர் கண்ணி சூடியே விருந்துண்டனர். ஓட்டப்பந்தயத்தில் வென்றவர்கள் இலை தழை மலர்களால் ஆகிய முடியே சூட்டப் பெற்றனர். இது போன்றே பண்டைத் தமிழரும் தம் வாழ்வின் எல்லாத் துறை களிலும் மலருக்குத் தனி மதிப்பளித்து இடம் பெறச் செய்தனர் என்பதனைப் பல்வேறு சான்றுகள் காட்டி நிறுவலாம்.

---

3. தொல்காப்பியம் : பொருளதிகாரம். நூற்பா : 5. உரை.

குறிஞ்சி மலர் மலைநாட்டில் பன்னீராண்டுகட்கு ஒருமுறை பூக்கும். நீலநிறமாய்த் தோற்றமளிக்கும் அம் மலர்களில் பெருந்தேன் இருக்கும். குறிஞ்சி கரிய கொம்புகளைக் கொண்டு விளங்கும். இதுபோன்றே முல்லைப்பூ வெண்மை நிறமும், நறுமணமும் நிறைந்த பூவாகும். மேலை நாட்டு இலக்கியங்களில் 'லில்லி' (Lily) மலர் பெறும் சிறப்பினும் மேலாக ஒருபடி தமிழ் இலக்கியங்களில் முல்லை மலர் பெற்று விளங்குகின்றது. கற்பின் சிறப்பினை விளக்கி முல்லைப் பூ சிறந்து நிற்கின்றது.

மருத நிலத்தே அணிபெற அமைந்துள்ள சோலைகள் 'பூவார் சோலை'யாகப் பொலிகின்றன; அங்கு மயிலாடுகின்றன; குயில் இசை கூட்டுகின்றன என்பர் இளங்கோவடிகளார்.[4] மேலும், அவர் வையை என்னும் பொய்யாக் குலக்கொடியை வருணிக்கு முகத்தான்,

கரைநின் றுதிர்த்த கவரிதழ்ச் செவ்வாய்
அருவி முல்லை அணிநகை யாட்டி
விலங்குநிமிர்ந் தொழுகிய கருங்கயல் நெடுங்கண்
விரைமலர் நீங்கா அவிரறற் கூந்தல்
உலகுபுரந் தூட்டும் உயர்பே ரொழுக்கத்துப்
புலவர் நாவிற் பொருந்திய பூங்கொடி
வையை யென்ற பொய்யாக் குலக்கொடி
..........................................
புனல்யா றன்றிது பூம்புனல் யாறென[5]

ஓடியதாகக் கூறுவர்.

---

4. 'பூவர் சோலை மயிலாலப்
புரிந்து குயில்கள் இசைபாட'
—சிலம்பு. கானல்வரி : 26

5. சிலம்பு. புறஞ்சேரி யிறுத்த காதை: 164—174.

பரிபாடற் புலவரொருவர் வையை தந்த வற்றாத நீரால் வளம் பெருக்கிய ஆற்றங்கரை மரங்கள் அதற்குக் கைம்மாறாக மலர்களைச் சொரிந்து நின்றன என்று பாடியுள்ளார்.[6]

## வழிபாட்டில் மலர்கள்

திருப்பரங்குன்றத்து முருகனை வழிபடச் செல்லும் மக்கள் பூக்களைத் தம்முடன் கொண்டு செல்கின்றனர்.[7] மலர்களால் இறைவனை வணங்கும் முறை திராவிடர் சிறப்பு முறை என்பர் ஆய்வாளர் சிலர். வைதிக வழிபாட்டில் மலர் வழிபாடு இடம் பெற்றிருக்கவில்லை என்றும், ஆரியர் திராவிடரிடமிருந்தே மலர் வழிபாட்டு முறையைக் கற்றனர் என்றும், 'பூஜை' என்னும் வடசொல் 'பூ செய்' என்னும் தமிழ்ச் சொல்லின் திரிபு என்றும், வேதகால ஆரியர் இறைவனுக்கு வேள்வியியற்றி அதில் மிருகங்களின் தசை முதலியவற்றைப் போட்டு வழிபாடியற்றினர் என்றும், திராவிடரே தொன்னெடுங் காலந்தொடங்கி மலர் வழிபாட்டு முறையினை மேற்கொண்டொழுகினர் என்றும் அறிஞர் எஸ். சுநீதகுமார சட்டர்ஜி குறிப்பிடுவர்.[8]

---

6. பரிபாடல்: 16 : 16.
'கரையொழுகு தீம்புனற் கெதிர்விருந் தயர்வபோல்'

7. பரிபாடல் : 8 : 96—101

8. S. K. Chatterji, Race Movements and Prehistoric Culture in the Vedic Age, London, 1951, p. 160.

"The characteristic offerings in the Puja rite Viz., flowers, leaves, fruits, water etc, are not known to the homa rite except in instances where it has been influenced by the puja. It has been suggested with good reason that puja is the pre-Aryan, in all livelihood the Dravidian from of worship, while the homa is the Aryan; and throughout the entire early Vedic Literature, the puja ritual with flowers etc., offered to an image or

## காதலர் வாழ்வில் மலர்

உடன்போக்கு மேற்கொள்கிறார்கள் தலைவனும் தலைவியும். ஒரு காலத்து இவர்கள் சிறுவர் சிறுமியராக இருந்தபொழுது சிறிதுகாலம் தங்களுக்குள் கலாம் விளைவித்துக் கொண்டவர்கள். காதற் செவிலியர் இடை நின்று தடுத்தபோதும் 'ஏதில் சிறு செரு' மேற்கொண்டவர்கள். ஆனால் அக்காலம் கழிந்தொழிந்தது. இப்போது மாலையிற்றொடுத்த இரட்டை மலர்கள் போன்று காட்சியளிக்கின்றனர் என்கின்றார் மோதாசனார் என்னும் புலவர்.[9]

## கபிலரின் குறிஞ்சிப்பாட்டு

ஆரியவரசன் பிரகத்தனுக்குத் தமிழ் அறிவுறுத்தற் பொருட்டுக் கபிலர் இயற்றிய குறிஞ்சிப் பாட்டில் ஏறத்தாழ முப்பத்தைந்து அடிகளில் தொண்ணூற்றொன்பது மலர்கள் சுட்டப்படுகின்றன.[10] இங்குச் சுட்டப்படும் மலர்களிற் பல இன்று நம்மால் அறிந்துகொள்ள முடியா நிலையில் உள்ளன. காரணம் நாம் தற்போது இயற்கையை விட்டு நெடுந்தொலைவு வந்துவிட்டோம். இலக்கியம் தோன்றுவதற்கு நிலைக்களனாய் அமையும் பொருள்கள் மக்களும் இயற்கையும். இயற்கையுளே இயற்கையை விடுத்து மக்களைப் பற்றியும், மக்களை விடுத்து இயற்கையைப் பற்றியும் புலவர் பாடினால் அவ்விலக்கியம் குறையுடைய இலக்கியமாக அமையும்

---

symbol is unknown. The word puja, from a root puj appears like the thing it connotes, to be of Dravidian origin also. This word or root is not found in any Aryan or Indo-European language outside India."

9. 'துணைமலர்ப் பிணைய லன்னஇவர்
மணமகிழ் இயற்கை காட்டி யோயே'
—குறுந். 229 : 6—7.

10. குறிஞ்சிப் பாட்டு : 62—96.

என்பர்.[11] பண்டைத் தமிழ்ப் புலவரோவெனில் இயற்கையின் இனிய சூழலில்—பின்னணியில் மனித வாழ்வினைச் சித்திரித்துக் காட்டினர். முதற்பொருள் நிலமும் பொழுதுமாய் அமைய, கருப்பொருள்கள் மக்களும், இயற்கை— செயற்கைப் பொருள் களாய் அமைய, குறிப்பிட்ட வாழ்வுமுறை உரிப்பொருளாய்த் துலங்கக் காணலாம்.

## மங்கையரும் மலரும்

மலர்மாட்டுப் பெரிதும் காதல் கொள்வர் மங்கையர். 'தலைவாரிப் பூச்சூட்டிக்' கொள்வதில் தனி விருப்பங்காட்டுவர்; பின்னி முடித்துப் பிச்சிப்பூ சூடிக் கொள்வதில் ஆர்வம் காட்டுவர். அழகுள்ள மலர் கொண்டு வந்து குழலில் சூடி இன்புறுதலில் ஆசை கொள்வர். இத்தகு இளம் மகளிர் வேங்கை மரத்தினிடம் சென்று 'புலி, புலி' எனக் குரல் எழுப்புவர். அவ்வாறு கூச்சலிடின் வேங்கை மரம் கிளைகளைத் தாழ்த்திப் பூக்களைக் கொடுக்கும் என்று சங்ககால மகளிர் நம்பினர். மேலும், வேங்கை மலரும் பருவமே திருமணத்திற் குரிய காலம் என்றும், வேங்கை மலர்கள் விழுந்து கிடக்கும் முன்றிலே திருமணம் நிகழிடம் என்றும் கலித்தொகை குறிப் பிடுகின்றது:

**வருமே தோழி நன்மலை நாடன்**
**வேங்கை விரிவிட நோக்கி**
**வீங்கிறைப் பணைத்தோள் வரைந்தனன் கொளற்கே[12]**

---

11. "There are two great subjects of Poetry; the natural world and the human nature. It is a terrible business for poetry when it is wholly employed on men wholly employed on nature."

—Stopford Brooke.

12. கலித்தொகை, குறிஞ்சி, 2 : 25—26

புனவேங்கைத் தாதுறைக்கும் பொன்னறை முன்றில்
நனவிற் புணர்ச்சி நடக்குமா மன்றே.[13]

## திருமணத்தில் மலர்கள்

சிலப்பதிகாரம் கானல்வரியில் யாழினைக் குறிப்பிட வரும் இளங்கோவடிகள் அது மணமகள்போல் மலர் சூடிக் காணப் பட்டது என்கின்றார்.

'பண்டைத் தமிழ்க்கன்னி மலர் சூடாள் என்பதும், மலர் சூடின் கன்னியாகாள், ஒருவனை வரித்தாள் என்பதும் நம் பழஞ் சமுதாய வழக்கு' என்று கூறிச் சில இலக்கியச் சான்று கள் காட்டி நிறுவுவர் பண்டாரகர் வ. சுப. மாணிக்கம் அவர்கள்.[14]

பண்டைத் திருமண நிகழ்ச்சியினைக் குறிப்பிடும் விற்றூற்று மூதெயினனார் பாடிய அகநானூற்றுப் பாடலில், ஆம்பற்பூவின் முறிக்கப்பட்ட இதழ்களால் ஆகிய பருத்த நிறம்பொருந்திய மாலையை நீக்கி, வண்டுகள் ஒலிக்கும் ஆராய்ந்த மலர்களைச் சூடிய வதுவை மண்ணிய மணமகள் குறிக்கப் பெறுகின்றாள்.

பரூஉப் பகை ஆம்பல் குரூஉத்தொடை நீவிச்
சுரும்பிமிர் ஆய்மலர் வேய்ந்த
இரும்பல் கூந்தல்.[15]

மேலும் மணமக்களை வாழ்த்தும் பெருமக்கள்,

நீரொடு சொரிந்த ஈரிதழ் அலரி
பல்லிருங் கதுப்பின் நெல்லொடு தயங்க[16]

---

13. கலித்தொகை, குறிஞ்சி, 13 : 33—34.
14. தமிழ்க் காதல், பக்கம் 159.
15. அகநானூறு, 136 : 27—29.
16. அகநானூறு, 86 : 15—16.

மணமக்கள் தலையில் மலர்தூவி வாழ்த்துகிறார்கள். இளங்கோவடிகளும் கோவலன் கண்ணகி திருமணத்தைக் குறிக்கும் பொழுது,

> காதலற் பிரியாமல் கவவுக்கை ஞெகிழாமல்
> தீதறுகென வேத்திச் சின் மலர் கொடு தூவி[17]

என்று மலரிட்டு வாழ்த்தும் நிலையினை மறவாது குறிப்பிட்டுள்ளார்.

களவுக்காலத்தில் தலைமகளுக்குத்தலைமகன் தரும் கையுறைதழையும், மலருங் கொண்ட கண்ணி என்பதும் நினைவுகூரத்தக்கது. தலைமகன் தரும் கையுறை மறுக்கும் தோழி ஒருத்தி, தன் மலைமுழுதும் குருதிபோல் பூக்கும் காந்தட் பூக்கள் மிகுந்து காணப்படுகின்றன என்று கூறிக் கையுறை மறுக்கின்றாள்.

> கழல்தொடி சேஎய் குன்றம்
> குருதிப் பூவின் குலைக்காந் தட்டே.[18]

## புறத்திணையிலும் பூக்கள்

'வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு' எனப் பண்டையாசிரியர் தமிழ்கூறு நல்லுலகத்தினைக் குறிப்பிட்டார். 'படைப்புக் காலந் தொட்டு மேம்பட்டுவருங் குடி' யெனச் சேர சோழ பாண்டியர்தம் குடியின் பழமையினைப் பாராட்டுவர் பரிமேலழகர்.[19] முடியுடை மூவேந்தர்க்கு அடையாளப் பூமாலையாக விளங்கிய பூக்கள் பனம்பூ, ஆத்திப்பூ, வேப்பம் பூவாகும்.

---

17. சிலம்பு. 1 : 61—62.
18. குறுந்தொகை, 1 : 3—4.
19. திருக்குறள், 995 : உரை.

போந்தை வேம்பே ஆரென வரூஉம்
மாபெருந் தானையர் மலைந்த பூவும்.[20]

மேலும் அகத்திணைக்கு ஈடான புறத்திணைகளும் மலர்ப் பெயர்களைக் கொண்டே அமைந்துள்ளன. பகைவர் பசுநிரைகளைக் கவர வெட்சிப்பூவினை வீரர் சூடிச் சென்றனர்; பசு நிரையினை மீட்கக் கரந்தைப்பூச் சூடி நின்றனர். மாற்றார் மண்ணைக் கவர வஞ்சிப்பூ மலைந்து வீரர் அணிவகுத்துச் சென்றனர்; தம் மண்ணைக் காக்கக் காஞ்சி சூடி நின்றனர். மதிலை வளைக்க உழிஞைப் பூச்சூடியும், மதிலைக் காக்க நொச்சிப் பூச் சூடியும் தமிழ் வீரர் நின்றனர். போர்க்களத்தே தும்பைப் பூவைச் சூடினர்; போரில் வெற்றிபெற்றவர் வாகைப் பூ மலைந்தனர்.

போர்க்காலங்களில் மகளிர் பூ அணிந்து பொலியாமல் வருந்தினர்.[21] கணவனைப் பிரிந்து வாழும் தனிப்படர்மிகுந்த நிலையிலும் பூச்சூடிக் கொள்ளாமல் வாளா விருந்தனர். எனவே, பூவெனப்படுவது மகிழ்ச்சிக் காலங்களில் இன்பத்தை மிகுவிக்கும் மங்கலப் பொருளாயிற்று..ஒல்லையூர்கிழான் மகன் பெருஞ் சாத்தன் இறந்தபோது, குடவாயிற் கீரத்தனார் பாடிய கையறுநிலைப் பாடலும் இங்குக் கூறப்பட்ட கருத்தினை விளக்கும்.

இளையோர் சூடார், வளையோர் கொய்யார்,
நல்லியாக் மருப்பின் மெல்ல வாங்கிப்
பாணன் சூடான், பாடினி அணியாள்,
ஆண்மை தோன்ற ஆடவர்க் கடந்த
வல்வேற் சாத்தன் மாய்ந்த பின்றை
முல்லையும் பூத்தியோ ஒல்லையூர் நாட்டே?[22]

---

20. தொல்காப்பியம் : பொருளதிகாரம் ; புறத் திணையியல், 3. 4—5
21. 'பூவில் வறுந்தலை முடிப்ப'—புறநானூறு — 44 : 7
22. புறநானூறு— 242.

'பெருவீரர் சாத்தன் இறந்துபட்ட பிறகு முல்லைப் பூவினை இளைய வீரர் சூடார்: வளையலணிந்த இளைய மகளிர் கொய்யார்: பாணன் தன் நல் யாழ் மருப்பினால் மெல்ல வளைத்துப் பறித்துச் சூடிக்கொள்ளான்; பாடினி அணியாள். இந் நிலையில் முல்லைக்கொடியே, நீ பூத்துக் குலுங்குகின்றாயே, அவ் வள்ளலை யிழந்து இறக்காமல் இன்னும் வாழ்ந்துகொண்டிருக்கும் எம் வாழ்வுபோலவே அவன் வாழ்ந்த ஒல்லையூர் சூழ்ந்த நாட்டில் நீ பூத்துக்குலுங்கும் பூப்பும் கொடுமையே யாகும்' என்று பாடும் கையறுநிலைப் பாடல் தமிழர்தம் புறவாழ்விலும் மலர்கள் பெற்ற இடத்தினை உணர்த்தி நிற்கும்.

மேலும் அந்நாளைய அரசர்கள் தம்மைப் பாடிய புலவர் பெருமக்களுக்குப் பரிசுகள் நல்கும்போது, பொன்னாற் செய்த தாமரைப் பூவினையும், வெள்ளி நாராற் கட்டிய பூங்கொத்தினையும் வழங்கினர். பாணர்கள் தம் இசைக் கருவிகளுக்கு மலர் சூட்டி, இசைகருவிகளைத் தெய்வமென மதித்தனர்.

மேலும் போர்வீரன் மனைவி, ஆண் குழந்தையை ஈன்றெடுத்ததும் அவள் கணவன் போர்க்குரிய மாலைகளையும் உடைகளையும் (Uniforms) அணிந்து முதற்காட்சி அளிப்பான் என்பதனைப் புறப்பாடல் கொண்டு தெளியலாம். சிறுவர் சிறுமியரும் பூச்சூடிக் கொள்வதனைச் சிறப்பாகக் கருதினர். மங்கையரும் மலரும் சொல்லும் பொருளுமாக அமைந்து நின்றனர்.

## மலரும் வாழ்வும்

மலைவாழ்நர் உணவினைப் பலரோடும் பகுத்துண்ணும் போது அதற்கு அவர்கள் தேர்ந்தெடுத்த இடம், மலை மல்லிகை கமழும் அழகிய முற்றமாக அமைந்திருக்கக் காண்கிறோம்.

**கூதளங் கவினிய குளவி முன்றில்**
**செழுங்கோள் வாழை அகலிலைப் பகுக்கும்[23]**

---

23. புறநானூறு, 168 : 12—13.

முல்லைப்பாட்டில் வினை முடித்துத் தலைமகளை நாடி, வீடு திரும்பும் அரசனின் செலவு சுட்டப்படுகின்றது. அவன் வினை முடித்து மீளும் செந்நிலப் பெருவழியினைக் காட்டும் ஆசிரியர் நப்பூதனார், காட்டுநிலப் பூக்கள் காட்டி நிற்கும் கோலத்தினை அழகுறப் புனைந்துள்ளார் :

செறிந்த இலைகளையுடைய காயாம்பூ மலர்கள் அஞ்சனம் போன்று மலர்ந்துள்ளன; மெல்லிய கொத்துகளைக் கொண்ட கொன்றைப் பூக்கள் ஒளிவிடும் பொன்போல் பூத்துக் குலுங்குகின்றன; கோடற்பூவின் குவிந்த மொக்குகள் உள்ளங் கைகள் போன்று மலர்ந்துள்ளன. கொத்துக் கொத்தாய்த் தோன்றும் தோன்றி மலர்கள், இரத்தச் சிவப்பாகப் பூத்துள்ளன :

> **செறியிலைக் காயா வஞ்சன மலர**
> **முறியிணர்க் கொன்றை நன்பொன் காலக்**
> **கோடற் குவிமுகை யங்கை யவிழத்**
> **தோடார் தோன்றிக் குருதி பூப்ப**[24]

கண்ணையும் கருத்தையும் ஒருங்கே கவரும் காட்சியன்றோ இது!

## முடிவுரை

இவ்வாறு பழந்தமிழ் இலக்கியங்களைப் படிப்போர் மலர்கள் தமிழர் வாழ்விற்பெற்ற மதிப்பிற்குரிய மாண்புறு நிலையினை நன்குக் காண்பர். காதலைக் குறிக்க வந்த திருவள்ளுவர் 'மலரினும் மெல்லிது காமம்' என்றார். விருந்தினரை ஓம்ப வேண்டிய பான்மையினைக் குறிப்பிடும் பொழுதும், 'மோப்பக் குழையும் அனிச்சம்' என்று மலரையே உவமித்துக் காட்டினார். மகளிர் உறுப்புநலனை வருணிக்கும் கவிஞர்களும், 'தாமரை போன்ற முகம்' என்றும், 'குவளை மலர் போன்ற கண்கள்' என்றும், 'எட் பூ நாசி' என்றும்,

---

24. முல்லைப்பாட்டு, 93—96.

'முருக்க மலர் போன்ற இதழ்கள்' என்றும், 'குமுத மலர் போன்ற வாய்' என்றும், 'வாழைப் பூப் போன்ற கூந்தல்' என்றும், 'காந்தள் போன்ற கைகள்' என்றும், 'நொச்சி மலர் போன்ற அடிகள்' என்றும் மலர்களுடன் ஒப்பிட்டே மங்கையர் எழிலைப் பாராட்டியிருக்கின்றனர்.

முகை, மொட்டு, போது, மலர், வீ, செம்மல் என்னும் பல்வேறு பெயர்கள் மலரின் பல்வேறு நிலைகளை உணர்த்துவனவாகும்.

இதுகாறும் கூறப்பெற்ற செய்திகள் கொண்டு, பழந் தமிழர் தம் வாழ்வில்—அகவாழ்வாயினும் சரி, புற வாழ்வாயினும் சரி,—மலர்கள் பெற்றிருந்த இடம் மாணப் பெரிது; மாண்புடையது; போற்றத் தக்கது என 'அங்கை நெல்லிக்கனி' யென அறியலாம். மலர்கள் வாழ்க! மலர்கள் காட்டும் நாகரிகம் வாழ்க!

# 2. அன்பான வாழ்க்கை

'கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன்தோன்றி மூத்த குடி' என்று தமிழ்க்குடியின் பழமை பேசப்படுகின்றது. பழமை வாய்ந்த பழந்தமிழர் வாழ்க்கை, குறிக்கோளும் பண்பாடும் அமைந்த வாழ்க்கையாகும். குறிக்கோளில்லாத வாழ்வு, கடிவாளம் இன்றிக் குதிரையில் அமர்ந்து 'சவாரி' செய்தலை ஒக்கும். வயலுக்கு வரப்பும் வேலியும் அமைந்து கிடப்பது போல, வாழ்க்கைக்குக் குறிக்கோளும் பண்பாடும் துணையாக—காவலாக அமையவேண்டும். வழுக்கு நிலத்தில் ஊன்று தடியின்மேல் கால் வழுக்கி விழுதல்போல, குறிக்கோளற்ற வாழ்கையில் துன்பமுற்றுச் சாய்தல் நிகழும்.

பழந்தமிழர் வாழ்க்கைக் கலையில் வல்லவர்கள். நல்ல வாழ்க்கைக்கு அடிப்படைத் தேவைகள் அன்பும் பண்பும், அறவுணர்வும் பொருள் முயற்சியும் எனக் கண்டனர். இவ்வுயரிய பண்புகள் தங்கள் வாழ்க்கையில் இயைந்து நிற்க, அவர்களின் வீட்டு வாழ்வு—இல்வாழ்வு இன்பமும் அமைதியும் கொண்டதாகத் துலங்கியது.

அன்பே இல்வாழ்க்கையின் அடிப்படையாக அமைகின்றது. அன்பு அகத்தில் இல்லாத வாழ்க்கை வற்றிய பாலை நிலத்தில் வற்றல் மரம் தளிர்த்ததைப் போன்றிருக்கும் என்பர் திருவள்ளுவர் :

> **அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்**
> **வற்றல் மரந்தளிர்த் தற்று.**

(திருக்குறள், : 78.)

தலைவனும் தலைவியும் 'ஈருடற் புள்ளின் ஒருயிராக' அமைந்து இனிய இல்லற வாழ்வில் தலைப்படும்பொழுது ஒருவரை புரிந்து

கொண்டு ஒருவருக்காக ஒருவர் உளம் நெகிழும் பண்பு இல்வாழ்க்கையின் இனிமைக்கும் சிறப்பிற்கும் அடிப்படையாகின்றது. 'தலைவர் மாறாத சொல்லையுடையவர்; நீண்ட காலம் நிலைக்கத்தக்க இனிய பண்புகள் வாய்ந்தவர்; எக்காலத்திலும் என் தோள்களைப் பிரியமாட்டார்' என்று தலைவி ஒருத்தி, தலைவன் ஒருவன் தன் மாட்டுக்கொண்ட காதற் சிறப்பினைக் கவினுற எடுத்துரைக்கின்றாள்:

நின்ற சொல்லர் நீடுதோன் றினியர்
என்றும் என்தோள் பிரிபறி யலரே.

(நற்றிணை, 1 : 1—2)

தலைவனும், தலைவிபோன்றே, தலைவிமாட்டு நிறைந்த காதல் நெஞ்சம் வாய்ந்தவனே. கடலால் சூழப்பட்ட நிலவுலகத்தையே பரிசாகப் பெறுவதாக இருந்தாலும், தலைவியின் காதலை விட ஆற்றாத உள்ளங்கொண்டவன்:

கடல்சூழ் மண்டிலம் பெறினும்
விடல் சூழலன் நான் நின்னுடை நட்பே.

(குறுந்தொகை, 300 : 7—8.)

மேலும், தலைவன் வேந்தனால் ஏவப்பட்டு வெளியூருக்கு வினையாற்றச் சென்றாலும், தலைவியை விட்டுப் பிரிந்திருக்க ஆற்றாமல், சென்ற ஊரிலே தங்கிப் பின் வருதலை யறியாது உடனே தன் தேரில் வந்துவிடுகின்றான்:

..................................வேறூர்
வேந்துவிடு தொழிலொடு செலினும்
சேந்துவர லறியாது செம்மல தேரே

(குறுந்தொகை: 242 : 4—5.)

இவ்வாறு அன்பால் இணைந்து காதல் வாழ்வு வாழும் கணவன் மனைவியரின் வாழ்க்கை பல்லாற்றாலும் நனி சிறந்ததாகும்.

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது

(திருக்குறள் : 45.)

என்று திருவள்ளுவர் கூறும் இல்வாழ்க்கைச் சிறப்பு,

மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை

(திருக்குறள் : 51.)

என்றபடி இல்லாளைக் கொண்டே அமையும். இதனையே வள்ளுவப் பெருந்தகை,

மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை
எனைமாட்சித் தாயினும் இல்

(திருக்குறள் : 52.)

என்று குறிப்பிடுவர்.

குடும்பக் கடமையினை, வீட்டுப் பொறுப்பினைப் பழந் தமிழர் பெண்ணிற்கே வழங்கிப் பெருமை பெற்றனர். 'இல்லாள்', 'மனையோள்', 'மனைமுதல்' முதலிய சொற்கள் வீட்டுத் தலைமை மகளிர்க்கே தரப்பட்டது என்பதனை உணர்த் தும். மேலும் இச் சொற்களுக்கு நேரான ஆண்பாற் சொற்கள் தமிழில் இல்லை யென்பதும் அறியத்தக்கதாம்.

தலைவனும் தலைவியும் அன்போடு இணைந்து இனிதுற நடத்தும் இல்லறக் காட்சி யொன்றனைக் கூடலூர்கிழார் என்னும் சங்கச் சான்றோர் இனிதுறக் கிளத்துவர்.

இறுகிய, கெட்டியான தயிரினைப் பிசைந்து புளிக்குழம்பு வைக்க எண்ணினுள் தலைவி. அவளுடைய காந்தள் மெல் விரல்களால் கட்டித் தயிரைப் பிசைந்தாள். விரைவில் தயிர்க் குழம்பு வைத்துக் கணவனை விருப்புடன் உண்ண வைக்க வேண்டும் என்ற விருப்பினளாதலின், தயிர் பிசைந்த கையைத் தன் ஆடையிலேயே துடைத்துக்கொண்டாள். இவ்வாறு அவள் கையை ஆடையில் துடைத்துக் கொண்ட செயல்

அநாகரிகமாகாது; அஃது அவளின் செல்வச் சிறப்பினைக் குறிக்கும் குறிப்பாகும். கபிலரும் பாரியைப் பற்றித் தாம் பாடும் புறநானூற்றுப் பாடலில், பறம்பு மலையில் வாழும் குறத்தியர் தங்கள் வீட்டில் அடுப்பெரிப்பதற்குச் சந்தனக் கட்டைகளைப் பயன்படுத்துகின்றனர் என்று குறிப்பிட்டுள்ளார்:

**குறத்தி மாட்டிய வறற்கடைக் கொள்ளி**
**ஆரம் ஆதலின் அம்புகை அயலது**
**சாரல் வேங்கைப் பூஞ்சினைத் தவழும்**
**பறம்பு........**

*(புறநானூறு : 108 : 1—4)*

புளிகூட்டிய தயிர்க் குழம்பினை ஒரு பாத்திரத்தில் வைத்து அடுப்பில் ஏற்றுகின்றாள். அப்போது தாளிப்புச் செய்ய வேண்டிய நேரம் வந்துவிட்டது. எனவே குவளை மலரைப் போன்ற தன் மையுண்ட கண்களில் தாளிப்பினது புகை மணப்பத் தானே துழவிச் செய்த இனிய புளிப்பையுடைய குழம்பைத் தன் கணவனுக்கு மகிழ்ச்சியுடன் பரிமாறினாள். கணவனும் இனிதாக இருக்கின்றது என்று சொல்லி உண்டான். அப் பாராட்டைக் கேட்டதும், இயல்பாகவே பொலிந்து விளங்கும் அவள் நெற்றி, உவகையால் மேலும் பொலிவு சிறிது கூடுவதாயிற்று. (மகிழ்ச்சியை அவள் மிகுதியாக வெளிப்படுத்தியிருப்பின் அது தருக்கின்பாற்படும்; மகிழ்ச்சியைப் புலப்படுத்தாமலே இருந்திருப்பின் உணர்வு சான்ற பெண்ணாகமாட்டாள். எனவேதான் 'நுண்ணிதின் மகிழ்ந்தன்று' என்றார் புலவர்.)

இவ்வினிய இல்லறக் காட்சியினைப் புலவர் சொற்களாற் காண்போம்:

**முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்**
**கழுவுறு கலிங்கங் கழாஅ துடீஇக்**

குவளை யுண்கண் குய்ப்புகை கமழத்
தான்துழந் தட்ட தீம்புளிப் பாகர்
இனிதெனக் கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே.

*(குறுந்தொகை : 167.)*

குடும்பத் தலைவன் தன் மனைவி மக்கள் என்று மட்டும் காப்பாற்றி நின்றால் அது போதாது. 'செல்வர்க் கழகு செழுங் கிளைத் தாங்குதல்' என்பர். 'அன்பெனப்படுவது தன்கிளை செறாஅமை' எனக் குறிப்பிடும் 'கற்றறிந்தார் ஏத்தும் கலி.' பழந் தமிழகத்தில் ஆடவர் பண்பே பொருள் தேடிவருவதற்குப் பிரிந்து சென்று பொருளீட்டி வருவதே என்று நற்றிணைப் பாட்டொன்று நவிலும்.

செயல்படு மனத்தர் செய்பொருட்கு
அகல்வர் ஆடவர் அதுஅதன் பண்பே

*(நற்றிணை : 24 : 8—9.)*

மேலும் வழிவழி வந்த குடும்பப் பொருள் கொண்டு வாழ் வதனைப் பழந்தமிழர் உயர்ந்த வாழ்க்கையாகக் கொள்ள வில்லை. அவ்வாறு முன்னோர் தேடிவைத்த பொருளைச் செலவு செய்து அழிப்பவர்களைச் சமூகமும் சான்றோர்களும் பொருட் படுத்துவதில்லை. பொருளற்றோரின் வாழ்க்கையோ இரந்து உயிர் வாழ்தலினும் இழிவானதாகும்.

உள்ளது சிதைப்போர் உளர்எனப் படாஅர்
இல்லோர் வாழ்க்கை இரவினும் இளிவு.

*(குறுந்தொகை : 283 : 1—2.)*

மேலும் ஆடவர்க்குக் கடமையே உயிர் என்பதும், மகளிர்க்கு அவ் ஆடவரே உயிர் என்பதும், அக்காலத்துக் கோட்பாடாக இலங்கியது:

வினையே ஆடவர்க்கு உயிரே; வாணுதல்
மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர்.

(குறுந்தொகை : 135 : 1—2.)

திருவள்ளுவரும் விருந்து போற்றலும், பிறர்க்கு உதவி செய்தலும், இல்வாழ்வோர்க்கு இயைந்த சீரிய கடமைகள் என்பதனை,

இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு

(திருக்குறள் : 81)

என்று குறிப்பிட்டுள்ளார். மற்றவர்களின் நல்வாழ்விற்காக என்று பொருள்தேடக் கொடிய பாலை வழியில் போகத் துணியும் நெஞ்சத்தினைப் 'பிறர்க்கென முயலும் பேரருள் நெஞ்சம்' என்று போற்றுகின்றாள் தலைவி.

பொருளால் ஈதலும் இன்பமும் புகழும் கிடைக்கின்றன. சோம்பலோடு வீட்டில் அமைந்து கிடப்பவர்க்கு இம் மூன்றும் வந்தியையா:

இசையும் இன்பமும் ஈதலும் மூன்றும்
அசையுடன் இருந்தோர்க்கு அரும்புணர்வு இன்மென
வினைவயின் பிரிந்த வேறுபடு கொள்கை.

(நற்றிணை : 214 : 1—3)

விருந்தோம்பும் பெருவாழ்க்கையினை மகளிர் விரும்பினர். போக்குவரத்து வசதிகளும், காசு கொடுத்துச் சுவையுணவு கொள்ளும் உணவுச்சாலைகளும் நன்கமையாத அப்பழங் காலத்தில் விருந்தோம்பற்பண்பு சமுதாயத்தில் ஓர் இன்றியமையாத அங்கமாக மிளிர்ந்தது. தன் ஊரிலிருந்து காலையில் பயணத்தைத் தொடங்கி, பொழுது சாய்ந்தவுடன் மாலையில்

ஓர் ஊரில் தங்கி, மீண்டும் மறுநாள் விடியற்காலையில் பயணம் தொடங்குவதென்பது பழங்காலத்து வழக்கமாகும். அவ்வாறு மாலைக்காலத்தில் வந்து தங்கும் விருந்தினரை அவ்வூர் மக்கள் விருந்திட்டுப் படுக்க இடந்தந்து போற்றுவது தமிழர் வழக்கம். இரவிலே தெருக்கதவைத் தாளிட முற்படுமுன், யாரேனும் விருந்தினர் வந்துள்ளனரா என்று பார்த்தே கதவடைக்கும் பழக்கம் பண்டை நாளில் இருந்தது என்பதனைக் கீழ்க்காணும் குறுந்தொகைப் பாடல் உணர்த்தும்.

**புள்ளும் மாவும் புலம்பொடு வதிய**
**நள்ளென வந்த நாரின் மாலைப்**
**பலர்புகு வாயில் அடைப்பக் கடவுநர்**
**வருவீர் உளீரோ எனவும்**
**வாரார் தோழிநம் காத லோரே.**

*(குறுந்தொகை : 118.)*

விருந்தினர் மாலை நேரத்தில் வந்து வீட்டுத் தெற்றியில்—திண்ணையில் குழுமுவர். மையுண்ட கண்களையுடைய மகளிர், கனத்தையுடைய குழையணிந்த மகளிர், தம் கையே கருவியாக நெய்யை வார்த்து வற்றிய விளக்கு துயரத்தை எழுப்புகின்ற மாலைக்காலத்தில் பெறுதற்குரிய காதலர் விருந்தினராக வீட்டிற்குவந்து, தலைவியின் ஏக்கத்தைப் போக்கி உடல் மெலிவினை நீக்குவதாகக் குறுந்தொகைப் பாட்டொன்று குறிப்பிடுகின்றது:

**கயலே ருண்கண் கனங்குழை மகளிர்**
**கைபுனை யாக நெய்பெய்து மாட்டிய**
**சுடர்துய ரெடுப்பும் புன்கண் மாலை**
**அரும்பெயர் காதலர் வந்தென விருந்தயர்பு**
**மெய்ம்மலி யுவகையி னெழுதரும்...**

*(குறுந்தொகை : 398 : 3-7)*

மாலையில் அன்றி, நேரந்தவறிய நள்ளிராப்பொழுதில் விருந்தினர் வந்தாலும், தலைவி அதனால் ஒரு சிறிதும் வாட்டங் கொள்ளாமல், வந்த விருந்தினரை முகமலர்ந்து வரவேற்று வேண்டிய உதவியினைத் தட்டாமற் செய்கின்றாள்:

**அல்லில் ஆயினும் விருந்துவரின் உவக்கும்**
**முல்லை சான்ற கற்பின்**
**மெல்லியல் குறுமகள்....................**

*(நற்றிணை : 142 : 9-11)*

கணவனுக்கும் மனைவிக்கும் இடையில் சிறுசிறு ஊடல் எழுதல் இயற்கை. இவ்வாறு ஊடல் காதலர் வாழ்க்கையில் இடம்பெறுதல் வேண்டும் என்றும், அவ்வாறு ஊடல் - பெரும் பிணக்கும் சிறு பிணக்கும் இடம்பெறவில்லையாயின், காதல் அளவுக்கதிகமாகக் கனிந்துபோன பழமும், முற்றாத இளங்காயும் போன்று பயனற்றதாகிவிடும் என்பர் திருவள்ளுவர் :

**துனியும் புலவியும் இல்லாயின் காமம்**
**கனியும் கருக்காயும் அற்று.**

*(திருக்குறள் : 1306)*

இவ்வாறு கணவன் மனைவியர் இடையில் வந்துறும் ஊடல், விருந்தினரைக் கண்டால் அகன்றுவிடுவது உண்டு. தமக்குள் இருக்கும் பிணக்கினை அயலார் அறியாதவாறு காத்தலில் தலைவி வல்லவள். வழிவழியாக வந்தமைந்துவிட்ட குடும்பப் பண்பாடு அவளை அவ்வாறு பண்பும் பொறுமையும் உடையவளாக மாற்றிவிடும் தகுதி சான்றதாகும். ஊடலால் உளந்துன்புற்ற தலைவன் ஒருவன், விருந்தினருடன் வீட்டினுள் சென்று தலைவியின் சினத்தையாற்றி அவள் அழகுமுகத்தில் புன்முறுவலைக் காண விரும்பினான். அவன் காணவிரும்பும் காட்சியினைத் தன் உளத்தில் பின்வருமாறு அமைத்துக் காணு கின்றான்;

"தலைவி தன் சிறு மோதிரம் அணிந்த மெல்லிய விரல்கள் சிவக்குமாறு வாழையிலையை அறுத்து வல்லவாறு அமைத்துப் புகை சேர்ந்த கண்களோடு நெற்றியில் அரும்பிய சிறு வியர்வையைத் தன் முன்தானையால் துடைத்துக் கொண்டு என்னிடம் ஊடல் கொண்டு அட்டிலறையில் உள்ளாள். இப்போது விருந்தினர் வரின் சினம் தணிந்த அவளின் கூரிய பற்கள் புன்முறுவல் செய்யும் முகத்தைக் காணலாம்" என்கிறான்.

சிறுதாழ் செறித்த மெல்விரல் சேப்ப
வாழை ஈர்ந்தடி வல்லிதின் வகைஇப்
புகையுண்டு அமர்த்த கண்ணள் தகைபெறப்
பிறைநுதல் பொறித்த சிறுநுண் பல்வியர்
அந்துகில் தலையின் துடையினள் நப்புலந்து
அட்டி லோளே அம்மா அரிவை
எமக்கே வருகதில் விருந்தே சிவப்பான்று
சிறியமுள் எயிறு தோன்ற
முறுவல் கொண்ட முகம்காண் கம்மே.

(நற்றிணை : 120 : 4—12)

இவ்வாறு பழந்தமிழரின் அன்பான இல்லற வாழ்க்கை, பண்பும் பயனும் சான்ற பண்பாட்டு வாழ்க்கையாக விளங்கியது. பெண்ணின் பெரும் பண்புகள் அவள் இல்லறக் கடமைகளை இனிதுற ஆற்றுகின்ற பொழுது திறனுடன் விளங்கின. இல்வாழ்க்கை என்னும் தேரின் அச்சாணியாக அவள் விளங்கினாள். 'பெண்ணின்றேல் ஆணில்லை, ஆணின்றேல் பெண்ணில்லை!' என்றபடி, அவர்களின் அன்பான இல்லறம் தலைவியின் பொறுமைப் பண்பாலும் விருந்தோம்பற் சிறப்பாலும் சிறப்புறத் தலைவனின் பொருள் தேடும் முயற்சியால் இல்லறம் இனிதுறப் பொலிந்தது என்பதனை நம் தமிழ்மொழியின்கண் எழுந்துள்ள சங்கத்தமிழ் இலக்கியங்கள் வகையுற எடுத்து மொழிகின்றன.

# 3. மங்கல மனையறம்

பழந்தமிழர் வாழ்வு பெரும்பகுதியும் களவின்வழி வந்த கற்பாகக் துலங்கியதே எனலாம். 'காதலர் இருவர் கருத்தொருமித்து ஆதரவுபட்டதே இன்பம்' என்று பிற்காலப் புலவரொருவர் கூறுவதுபோல, 'செம்புலப் பெயல் நீர்போல' அன்புடை நெஞ்சங்கள் இரண்டு ஒன்றாய்க் கலந்து இல்லற நெறியில் இயைந்து நிற்பது சங்ககாலத் தமிழரிடையே நாம் காணும் வழக்காறாகும். இல்லற வாழ்வில், மாண்புறு மனை வாழ்வில் ஒன்றுகூடும் தலைவனும் தலைவியும் பிறப்பாலும், குடிப்பிறப்பாலும், ஆண்மையாலும், வயதாலும், உருவாலும், தோற்றத்தாலும், நிறையாலும், அருளாலும், உணர்வாலும், திருவாலும் ஒத்திருத்தல் என்பர் முறைப்பட எண்ணி முந்து நூல் கண்ட தொல்காப்பியனார்.

**பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டொடு**
**உருவு நிறுத்த காம வாயில்**
**நிறையே அருளே உணர்வொடு திருவென**
**முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே**

(தொல். பொருள் : 269)

சங்ககாலத்தில் திருமணம் தலைவனும் தலைவியும் ஒருவரை யொருவர் பார்த்துக் காதல்துணையாக நிகழ்ந்ததே யன்றிச் சாதி, சமயம், செல்வம், செல்வாக்கு, வாழ்நிலை முதலிய வற்றின் காரணமாக நிகழ்ந்திலது. திருமணச் செவ்வியடைந்த ஓர் ஆணும் பெண்ணும் விதியின் வழியே எதிர்ப்பட்டுக்

காதலிற் கலந்த பின் வாழ்வில் ஒன்றுபடுவர் என்று தொல்காப்பியனார் குறிப்பிடுவர்:

**ஒன்றே வேறே என்றிரு பால்வயின்**
**ஒன்றி யுயர்ந்த பால தாணையின்**
**ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப**
**மிக்கோ னாயினும் கடிவரை யின்றே**

(தொல். பொருள் : 90)

குறுந்தொகைப் பாடலொன்று அதற்கு விளக்கந்தருவது போல் அமைந்துள்ளது. எங்கேயோ பிறந்து முன்பின் ஒருவரையொருவர் அறியாத தலைவனும் தலைவியும் ஊழ்வலியால் ஒன்றுகூடி வாழ்வில் இயைந்தனர். ஆதுபோது தன்னை விட்டுத் தலைவர் பிரிவரோ எனப் பிரிவச்சங் கொண்ட தலைவியைத் தேற்றும் போக்கில் தலைவன் கூற்றாய் அமைந்துள்ள பாடல் வருமாறு :

**யாயும் ஞாயும் யாரா கியரோ**
**எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்**
**யானும் நீயும் எவ்வழி யறிதும்**
**செம்புலப் பெயல் நீர் போல**
**அன்புடை நெஞ்சந் தாங்கலந் தனவே.**

(குறுந்தொகை : 40)

இப் பாடல் கொண்டு, வாழ்வில் முன்பின் பார்த்திராத, அறிந்திராத, பழகியிராத, உறவல்லாத தலைவனும் தலைவியும் விதியின் விளைவால் ஓரிடத்தே எதிர்ப்பட்டுக் கண்டு, காதல் கொண்டு உள்ளங்கலந்து உயர்வாழ்வாம் கற்பு வாழ்விற்கு ஒருப்பட்டு நின்றனர் என்று தெளியலாம்.

இல்லற வாழ்வில் ஈடுபடும் மகளிர்க்கு இன்றியமையாப் பண்புகளாகத் தொல்காப்பியனார் கற்பு, காமம், நல்

லொழுக்கம், பொறையுடைமை, நிறையுடைமை, விருந்து போற்றல், சுற்றம் போற்றல் முதலியனவற்றை முறையே குறிப்பிட்டுள்ளார்.

**கற்பும் காமமும் நற்பா லொழுக்கமும்**
**மெல்லியற் பொறையும் நிறையும் வல்லிதின்**
**விருந்துபுறந் தருதலும் சுற்றம் ஓம்பலும்**
**பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள்**

(தொல். பொருள் : 150)

இத்தகைய மனையற மாட்சிகளை மாண்புறப் பெற்ற மகளிரை 'மனை முதல்' என்ற மங்கலச் சொல்லால் பழந்தமிழர் வழங்கினர். இல்லாள் என்றும் வாழ்க்கைத்துணை என்றும் வகையுறத் திருவள்ளுவர் வழங்கினர். இனிய இல்லறப் பெற்றிக்கு இல்லாளே இன்றியமையாதவள் என்பது திருவள்ளுவர் கருத்து.

**மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை**
**எனைமாட்சித் தாயினும் இல்.**

(திருக்குறள் : 52)

**இல்லதென் இல்லவள் மாண்பானல் உள்ளதென்**
**இல்லவள் மாணக் கடை.**

(திருக்குறள் : 53)

தலைவன் வருவாய் அறிந்து அதற்கேற்பக் குடும்பச் செலவினைச் செட்டாகச் செய்து செம்மையாக இல்லறம் ஓம்பும் இனிய மகளிரை, 'விழவு முதலாட்டி' என்று போற்றினர். 'தலைவி முதன்முதலில் திருமணம் செய்துகொண்டு கணவன் வீட்டிற்கு வந்தபொழுது அவ் வீட்டில் ஒரே ஒரு பசுதான் கட்டப்பெற்றிருந்தது. அப் பசுவொன்றால் கிடைக்கும் எளிய வருவாயைக் கொண்டே குடும்பம் நடந்தது. ஆனால் நற்பேறும்

திருமகள் அன்ன பொற்புறு செவ்வியும் வாய்த்த இப் பெண் இவ் வீட்டில் அடியெடுத்து வைத்தபின் விழாக்கள் ஓயாது நடக்கும் இல்லமாகப் பொலிந்தது' என்று தூங்கலோரியார் என்னும் பழந்தமிழ்ப் புலவரொருவர் பெண்ணால் வந்த பேற்றினை, மங்கல மனைமாட்சியினை மனமாரப் போற்றிப் புகழ்கிறார். அவ்வினிய பாடல் வருமாறு:

**உடுத்தும் தொடுத்தும் பூண்டும் செரீஇயும்**
**தழையணிப் பொலிந்த ஆயமொடு துவன்றி**
**விழவொடு வருதி நீயே; இஃதோ**
**ஓரான் வல்சிச் சீரில் வாழ்க்கை**
**பெருநலக் குறுமகள் வந்தென**
**இனிவிழ வாயிற்று என்னுமிவ் வூரே.**

*(குறுந்தொகை : 295)*

ஆண் பெண் என்று அமைந்த இயற்கையின் இனிய படைப்பில் ஒவ்வொருவர்க்கென்று உரிய கடப்பாடுகள் வரையறை செய்யப்பட்டுள்ளன. தான் மேற்கொண்ட கடமையில் கண்ணுங் கருத்துமாயிருந்து செயலாற்றி வெற்றிபெறுவது ஆணின் செயற்பாடாகக் கருதப்பட்டது. இல்லிருந்து இனிய இல்லறம் ஓம்பும் நங்கை, தன் கணவனையே உயிராகக் கருதி நல்லறம் நாடி நின்றாள். இதனைப் பாடிய பெருங்கடுங்கோ என்னும் பைந்தமிழ்ப் புலவர்,

**வினையே ஆடவர்க் குயிரே வாணுதல்**
**மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர்**

*(குறுந்தொகை: 135: 1—2.)*

என்று பொருளுறப் புலப்படுத்தியுள்ளார்.

வினைமேற் சென்று இல்லறம் இனிதே நடத்த இன்றியமையாததாக விளங்கும் பொருளைத் தேடிவருதல் ஆணின் உயர் கடமையாகும். இல்லையென்று வந்தவர்க்கு இல்லையென்று

கூறுமல் ஈதல் மனையறத்தின் மாட்சியெனக் கொள்ளப்பட்டது. 'இல்லோர் வாழ்க்கை இரவினும் இழிவு' எனக் கருதப்பட்டது. எனவே, 'பொருளிலார்க் கிவ்வுலகமில்லை' என்ற பொருள் பொதிந்த மொழியினை மனத்துட்கொண்டு ஆடவர் பொருட் பணிக்கு அகன்றனர். அவ்வாறு பொருள் தேடித் தத்தம் மகளிரைப் பிரிந்து செல்வது அவர்தம் கடமையாக வைத்தெண்ணப்பட்டது.

இவ்வாறு முயன்று தேடிய பொருளைக் கொண்டு தம் இல்லற வாழ்வை இனிதே நடாத்துதலும், வருவார்க்கு எல்லாம் வரையாது நல்லுணவு நல்கலும், இனிய இல்லறத்தின் இயைந்த வெற்றியாக கருதப்பட்டது. முதற்கண் கொண்ட கொழுநனை உண்டியால் ஓம்பல் மனைவியின் மாண்புறு கடமை என்பதனைக் கூடலூர்கிழார் என்னும் குறுந்தொகைப் புலவர் கவினுறக் கிளத்துகின்றார். ஒரு குடும்பத்தின் தலைவி தன் கணவனுக்குத் தன் கையாலேயே சமைத்த உணவினை உவப் புடன் பரிமாற விருபினாள். எனவே ஆடை கட்டிய கட்டித் தயிரைத் தன் காந்தள் மலரனைய மெல்லிய விரல்கள் கொண்டு பிசைந்து, தயிர்க்குழம்பு வைக்க ஆயத்தம் மேற்கொண்டாள். அவ்வாறு அவள் சமையல் தொழிலில் ஈடுபட்டிருக்கும் காலை யில் மெல்ல அவள் சேலை நெகிழ்ந்தது. நெகிழ்ந்த சேலையினைத் தயிர் பிசைந்த கைவிரல்களாலேயே பற்றிச் செறிய உடுத்துக் கொண்டாள். தாளிப்பு நேரமும் வந்தது. அவளுடைய கண் களோ குவளை போன்று அழகும் ஒளியும் உமிழும் கவினார் கண்கள். அக் கண்களில் தாளிப்புப் புகை சூழ்கிறது. எவருடைய துணையுமின்றித் தானாகவே தயிர்க் குழம்பாக்கிச் சமையற் பணியினை முடிக்கிறாள். கணவனும் உணவு உண்ண வந்துவிட்டான். அவன் மகிழ்வுடன் உண்ணப் பரிமாறுகின்றாள் அவன் உயிர்த் துணைவி. அவனோ 'இனிது இனிது' என்று கூறித் தன்மனையறத் தினை மாண்புறுத்தும் மனைவியைப் பாராட்டினான். அதுபோது மனைமுதலாம் அக் குடும்பத் தலைவியின் முகம் நுண்மையாக மகிழ்ந்தது.

முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கம் கழாஅது உடீஇக்
குவளை உண்கண் குய்ப்புகை கமழத்
தான் துழந் தட்ட தீம்புளிப் பாகர்
இனிதெனக் கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே
(குறுந்தொகை : 167)

மற்றொன்றும் ஈண்டு எண்ணிப் பார்க்கத்தக்கது. தன் கணவன் அருமுயற்சியால் வந்த பொருளால் தன் குடும்பத்தையும் நடத்தி, வருந்தி வந்தவர்க்கு விருந்தும் தலைவி தந்தனளே யொழியத் தன் தந்தை தந்த பொருளாலோ, உணவாலோ அவள் மகிழ்வடையவில்லை. மாறாக அவள் தந்தையின் உதவியினை மறுத்தும் நின்ற மாண்பினைக் கோண்கிறோம்.

இன்று குடும்பம் நடத்தும் தலைவி சின்னஞ் சிறுமியளாய் இருந்த நாளில் நிகழ்ந்த நிகழ்ச்சியொன்று இது. தேன் கூட்டிக் கலந்த இனிய சுவைகொண்ட பாலினைக் கதிரவனின் பொற்கதிர்களைக் கொண்ட பொற்கிண்ணம் ஒன்றில் ஏந்திக் கொண்டு, அடிக்கும் பொழுது மேனியிற் சுற்றிப் படியும் மெல்லிதான நுனியையுடைய சிறுகோலினை மற்றொருகையில் எடுத்துக்கொண்டு, 'இதனை உண்க' என்று அச் சிறுகோலினை அச்சமூட்டுவான் வேண்டி அவளை நோக்கி ஓங்குதலும், அதனின்றும் தப்பிப் போதற்கு நினைத்து, தெளிவும் நீர்மையும் நிறைந்த முத்துக்களைப் பரவலாகக் காலில் இட்டிருக்கின்ற பொற்சிலம்பானது ஒலிக்க, செவிலியர் கையிற் பிடிபடாது அவள் தத்தித் தத்தி நடந்து நெளிந்து ஓடிவிடுவாள். நரையும் மூத்த அனுபவமும் நிறைந்த செவிலித் தாயர் அவளை விடாது பின்தொடர்ந்து சென்று அவளைப் பிடித்துப் பொற்கிண்ணத்தில் இருக்கும் பாலை ஊட்ட இயலாதவராய் மெலிவுற்று வருந்தித் தம் முயற்சியைக் கைவிடுவர். அவளோ முத்துப் பந்தர்க்கீழ் இப்படியும் அப்படியும் ஓடி அவர்களை அலைக்கழித்து அச் செவிலியரின் ஏவலை மறுக்கும் சிறுகுறும்பினை-விளையாட்டினைச் செய்பவளாக இருந்தாள்.

ஆனால் அக் காலம் கழிந்தது இப்போதோவெனில் அவள் இல்லறம் ஆற்றுவதற்கு இயைந்த அறிவையும் ஒழுக்கத்தையும் எவ்விடத்தே உணர்ந்து கொண்டனளோ தெரியவில்லை. தன்னை மணந்துகொண்ட கணவனது குடியானது ஒருகால் வறுமையுற்று வாடியது; உண்ணும் உணவின்றியும் பொழுது கழிந்தது. இதனை அறியவந்த அவளுடைய தந்தை கொணர்ந்த கொழுவிய சோற்றைக் கண்ணெடுத்தும் பார்க்கவில்லை; அச் சோற்றை நெஞ்சாலும் நினைக்காத நீர்மையளாயினள். நீர் செல்லும் போக்கில் வளைந்து வளைந்து உருவாகிக் கிடக்கும் கருமணலைப் போல, வேளைதோறும் உண்பதையும் கைவிட்டு மறந்து, தன் கணவனுடைய குடியின் பொருள் நிலைக்கேற்றப் படி தன்னைச் சரிசெய்து கொண்டு ஒழுகுவாளாய்த், தானும் ஒரு பொழு துணவை விட்டு, அதற்கடுத்த வேளை உண்டு வாழும் சிறிதான வன்மை கொண்டவளாக விளங்குகின்றாள்.

பிரசங் கலந்த வெண்சுவைத் தீம்பால்
விரிகதிர்ப் பொற்கலத்து ஒருகை ஏந்திப்
புடைப்பின் சுற்றும் பூந்தலைச் சிறுகோல்
உண்ணென்று ஓக்குபு பிழைப்பத் தெண்ணீர்
முத்தரிப் பொற்சிலம்பு ஒலிப்பத் தத்துற்று
அரிநரைக் கூந்தற் செம்முது செவிலியர்
பரிமெலிந்து ஒழியப் பந்தர் ஓடி
ஏவல் மறுக்கும் சிறுவிளை யாட்டி
அறிவும் ஒழுக்கமும் யாண்டுணர்ந் தனள்கொல்?
கொண்ட கொழுநன் குடிவறன் உற்றெனக்
கொடுத்த தந்தை கொழுஞ் சோறு உள்ளாள்
ஒழுகுநீர் நுணங்கறல் போலப்
பொழுது மறுத்து உண்ணும் சிறுமது கையளே.

*(நற்றிணை : 110)*

பிறந்த வீட்டுப் பெருவாழ்வை மறந்து, புகுந்த வீட்டின் வளனுக்கேற்பத் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு வாழும்

தலைவியின் தலையாய குடும்பப் பண்பாடு போதனாரின் இந் நற்றிணைப் பாட்டால் நலமுற விளங்குகின்றது.

ஆரியவரசன் யாழ்ப் பிரகத்தனுக்குப் 'பொய்யா நாவிற் கபிலர்' தமிழ் அறிவுறுத்துவதற்கு இயற்றிய பாட்டு குறிஞ்சிப்பாட்டாகும். இக் குறிஞ்சிப்பாட்டில் தலைவன் ஒருவன் தான் விரும்பிய தலைவியைத் தவறாது மணப்பதாக உறுதிமொழி கூறுங்கால், 'வருவோர்க்கெல்லாம் வரையாது வழங்கி விருந்துபோற்றி நிற்பேன்' என உரைக்குந்திறன், பண்டைத் தமிழர் இல்லறக் கடமைகளுள் இன்றியமையாத வொன்றென வருந்தி வந்தவர்களுக்கு விருந்து போற்றி நின்ற திறத்தினை எடுத்து மொழிகின்றது:

**சாறு அயர்ந்தன்ன மிடாஅச் சொன்றி**
**வருநர்க்கு வரையா வளநகர் பொற்ப**
**மலரத் திறந்த வாயில் பலருணப்**
**பைந்நிணம் ஒழுகிய நெய்ம்மலி அடிசில்**
**வசையில் வான்திணைப் புரையோர் கடும்பொடு**
**விருந்துண்டு எஞ்சிய மிச்சில் பெருந்தகை**
**நின்னொடு உண்டலும் புரைவது என்றாங்கு**
**அறம்புணை யாகத் தேற்றிப் பிறங்குமலை**
**மீமிசைக் கடவுள் வாழ்த்திக் கைதொழுது**

(குறிஞ்சிப்பாட்டு : 201—209)

இதுபோன்றே 'சிறப்புடைத்தான' சிறுபாணாற்றுப் படையிலும், பசியால் வருந்திய மெல்லிய இடையையுடைய வளையணிந்த கிணை வாசிப்போன் மனைவி, சமைப்பதற்கான பண்டம் ஒன்றுமில்லாக் காரணத்தால், குப்பைக் கீரையைத் தன் கூர்மையான நகத்தினால் கிள்ளி, அக் கீரையோடு கூட்டிச் சமைக்க உப்புக்கூட இல்லாமல் வேகவைத்தாள். வளமும் வறுமையும் மாறிமாறி வருவன என அறியாதவர்கள் அவ்வுணவைப் பார்த்தால் நகைப்பார்களே என நாணங் கொண்டு, தலைவாயிலைச் சாத்தித் தாளிட்டுவிட்டு வறிய தன்

சுற்றத்தினருடன் உள்ளே உட்கார்ந்து அவர்களோடு அக்கீரைக் கறியினைப் பகிர்ந்து உண்டாள்.

ஒல்குபசி யுழந்த ஒடுங்குநுண் மருங்குல்
வளைக்கைக் கிணைமகள் வள்ளுகிர்க் குறைத்த
குப்பை வேளை உப்பிலி வெந்ததை
மடவோர் காட்சி நாணிக் கடையடைத்து
இரும்பே ரொக்கலொடு ஒருங்குடன் மிசையும்.

*(சிறுபாணாற்றுப்படை : 135—139)*

இவ் விருந்து போற்றும் திருந்திய பண்பினையே நற்றிணை,

அல்லில் ஆயினும் விருந்துவரின் உவக்கும்
முல்லை சான்ற கற்பின்
மெல்லியல் குறுமகள்

*(நற்றிணை : 142 : 9—11)*

என்றும்,

புறநானூறு,

அமிழ்தட்டு ஆனாக் கமழ்குய் யடிசில்
வருநர்க்கு வரையா வசையில் வாழ்க்கை
மகளிர்

*(புறநானூறு : 10 : 7—9)*

என்றும்,

............................உள்ளது
தவச்சிறி தாயினும் மிகப்பலர் என்னாள்
நீணெடும் பந்தர் ஊண்முறை ஊட்டும்
இற்பொலி மகடூஉ

*(புறநானூறு : 331 : 6—9)*

என்றும் குறிப்பிடக் காணலாம்.

இவ்வாறு வழிவழி வந்த விருந்தோம்பற் பண்பினையே கவிச்சக்கரவர்த்தி கம்பநாடர்,

**பெருந்த டங்கண் பிறைநுத லார்க்கெலாம்**
**பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால்**
**வருந்தி வந்தவர்க்கு ஈதலும் வைகலும்**
**விருந்தும் அன்றி விளைவன யாவையே!**

(கம்பராமாயணம் : பாலகாண்டம் : நாட்டுப்படலம் : 36)

என்று குறிப்பிட்டார்.

எனவே மனைக்கு விளக்கமாயமைந்த மடவாள் தான் பிறந்தகுடியின் பண்பாட்டைப் பற்றிநின்று, புகுந்த குடிக் கேற்பத் தன்னைச் சீர்படுத்திக்கொண்டு, கணவனைத் தன் இனிய உணவுச் சுவையால் மகிழ்வித்து, வைகலும் வந்த சுற்றத் தினரையும் விருந்தினரையும் அகமும் முகம் மலர விருந் தோம்பி வாழும் நிலையே மங்காத மனையற மாண்பு என்று கொள்ளப்படும் என்பது தமிழிலக்கியங்கள் கொண்டு தெளியப் பட்டது.

# 4. தலைவியின் தவிப்பு

பழந்தமிழர் தம் வாழ்க்கையினை அகம் புறம் என இரு வகையாகப் பிரித்தனர். காதல் வாழ்வு அகத்துறைப்பாற் பட்டது. காதலன் காதலிமாட்டுக் கொள்ளும் உள்ள நெகிழ்ச்சியினை அன்பின் ஐந்திணை நூல்கள் நலமுற நவில்கின்றன.

காதல் வாழ்க்கைக்கு முதற்கண் தேவையானவை, ஒருவர் மாட்டு ஒருவர் கொள்ளும் அன்பும், நம்பிக்கையுமே யாகும்.

தலைவன்மாட்டுக் கொண்ட காதலின் ஆழத்தினையும் பண்பின் பரப்பினையும் பாங்குற எடுத்து மொழிகிறாள் ஒரு நற்றிணைத் தலைவி.

'தோழி! தலைவர் சொன்ன சொல்லினின்றும் மாறாதவர். நீண்ட காலம் நிலைத்து நிற்கும் இனிய பண்புகள் இயையப் பெற்றவர்; எந்தக் காலத்திலும் என் தோள்களை விட்டு நீங்காதவர். தாமரை மலரில் உள்ள தாதினை ஊதி, மலையுச்சியில் வளமாக வளர்ந்திருக்கும் சந்தன மரத்திலேகட்டிய இனிய தேன்போல், உயர் பண்பு வாய்த்தவர்களின் உறவுகள் உயர்வு வாய்ந்தவை யாகும். நீரில்லாமல் நிலவுலகம் இயங்க முடியாதது போன்றே, அவர் இல்லாமல் என் வாழ்வு அமைய முடியாது. ஆதலால் என்னைக் கைநெகிழ விடாமல் விரும்பிக் காதல் நெஞ்சினை அருளுவார். அவர் பிரிவால் என் நெற்றி பசலையுறுவதைக் கண்டு அஞ்சும் பான்மையுடையவர் அவர். எனவே, ஒருநாளும் துன்பம் விளைக்க விரும்பமாட்டார். துன்பம் செய்தலை ஒருபோதும் அறியாத நல்ல பண்புகள் வாய்க்கப்பெற்றவர் அவர்.'

ம.—3

நின்ற சொல்லர் நீடுதோன் றினியர்
என்றும் என்தோள் பிரிபறி யலரே
தாமரைத் தண்தாது ஊதி மீமிசைச்
சாந்தின் தொடுத்த தீந்தேன் போலப்
புரைய மன்ற புரையோர் கேண்மை
நீரின் றமையா வுலகம் போலத்
தம்மின் றமையா நந்நயந் தருளி
சிறுநுதல் பசத்தல் அஞ்சிச்
சிறுமை உறுபவோ செய்பறி யலரே.

(நற்றிணை : 1)

உலகமே தலைகீழாகப் புரண்டாலும், சொன்ன சொல் தவறமாட்டானும் அவள் தலைவன்.

..............................காதலர்
நிலம்புடை பெயர்வ தாயினும் கூறிய
சொல்புடை பெயர்தலோ இலரே.

(நற்றிணை : 289 : 1-3)

காதல் வாழ்க்கையினை மேற்கொண்ட தலைவன் தலைவியர் ஒருபோதும் பிரிந்திருக்க இசையார். அரசனின் ஆணையால் தலைவர் வெளியூர் சென்றாலும்,

செல்லாமை உண்டேல் எனக்குரை; மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க் குரை

(குறள் : 1151)

என்கிறாள் தலைவி.

ஆகவே அவனும் அவ்வூரில் தங்காமல் வினை முடித்து விரைந்து தலைவியிடம் தங்க வந்துவிடுகின்றான்.

சீறூ ரோளே மடந்தை வேறூர்
வேந்துவிடு தொழிலொடு செலினும்
சேந்துவரல் அறியாது செம்மல் தேரே.

(குறுந். 242 : 4-6)

பொருள் திரட்டும் முயற்சியினை மேற்கொண்டு தலைவன் பிரிய நேருகிறது. தலைவி வருந்துகிறாள். அதிலும் காதலன் இல்லாத நேரத்தில், மாலைக் காலம், கொலைக்களத்தில் பணியாற்றும் அயன்மையுடைய கொடியவர் போன்று வருகின்றது.

காதலர் இல்வழி மாலை கொலைக்களத்து
ஏதிலர் போல வரும்.

(குறள் : 1224)

கார்காலத்து மாலைப் போதில் மேற்றிசை வானம் சிவக்கின்றது. முல்லைப் போதுகள் முகையவிழ்ந்து மலரத் தொடங்குகின்றன. காதலன் உடன் இருக்க வேண்டிய அந்த மாலைக் காலத்தில் தலைவியின் துன்பம் மிகுதிப்படுகின்றது. எனவே, மயங்கித் துயரில் மாழ்குகின்றாள் தலைவி. அவள் காதல் துன்பத்தால், கோழி குரல் கொடுத்து மக்களை எழுப்பும் காலை நேரமும் (அப்போதும் அவளுக்குத் தூக்கம் இல்லை), நண்பகற் போதும், மாலைக்காலம் போன்று பிரிவுத் துன்பந் தந்து மனத்தை மாழ்குறச் செய்கிறதே என்று புலம்பி நைகின்றாள்.

சுடர்செல் வானஞ் சேப்பப் படர்கூர்ந்து
எல்லுறு பொழுதின் முல்லை மலரும்
மாலை என்மனார் மயங்கி யோரே
குடுமிக் கோழி நெடுநகர் இயம்பும்
பெரும்புலர் விடியலும் மாலை
பகலும் மாலை துணையி லோர்க்கே.

(குறுந்தொகை : 234)

ஓர் இராப்பொழுதில் உறக்கம் வாராது உழன்று ஒருவாறு உறக்கம் வந்து உறங்குகையில், தலைவன் தன் தோளிணைகளைத் தழுவியதாகக் கனாக் கண்டாள். உடனே தான் படுத்திருந்த படுக்கையினைத் தடவித் தன் பக்கலில் காதலன் உள்ளானோ எனப் பார்த்தாள். அவன் இல்லாத பொல்லா நிலை கண்டு உள்ளம் புழுங்குகின்றாள் :

கேட்டிசின் வாழி தோழி! அல்கல்
பொய்வ லாளன் மெய்யுறன் மரீஇய
வாய்த்தகைப் பொய்க்கனு மருட்ட ஏற்றெழுந்து
அமளி தைவ ந்தனனே குவளை
வண்டுபடு மலரிற் சாஅய்த்
தமியேன் மன்ற அளியேன் யானே.

(குறுந்தொகை : 30)

இக் காட்சியினையே திருவள்ளுவரும்,

துஞ்சுங்கால் தோள்மேல ராகி விழிக்குங்கால்
நெஞ்சத்த ராவர் விரைந்து

(குறள் : 1218)

என்று குறிப்பிடுகின்றார்.

இடைக் காலத்தே சமய இலக்கியங்களைப் படைத்த ஆழ்வார்களும் நாயன்மார்களும் நாயகன்-நாயகி பாவத்தில் ஆண்டவனைப் பாடியபொழுது, இதே போக்கினைக் கையாண்டு, இறைவன்மாட்டுத் தாம் கொண்ட ஆராவன் பினைப் புலப்படுத்தியுள்ளனர். தலைவி கூற்றாக நம்மாழ்வார் கடலை நோக்கிப் பாடும் பாடலில் தலைவி திருமால் மாட்டுக் கொண்ட கழிபெருங் காதல் துன்பம் கனிந்திலங்கக் காணலாம். 'காமம் மிக்க கழிபடர் கிளவி' போன்று இப் பாட்டு அமைந்துள்ளது :

காமுற்ற கையறவோடு எல்லா இராப்பகல்
நீமுற்றக் கண்துயிலாய் நெஞ்சுருகி ஏங்குதியால்
தீமுற்றத் தென்னிலங்கை ஊட்டினன் தாள்நயந்த
யாமுற்றது உற்றாயோ வாழி கனைகடலே?

(திருவாய்மொழி: 2: 1: 4)

தலைவன் பிரிந்து சென்ற காலையில் தலைவி படும் காதல் துன்பத்தினைத் தற்காலக் கவிஞராம் பாரதியாரும் திறம்படச் சொல்லோவியமாகக் காட்டியிருக்கிறார் :

பாலும் கசந்த தடி—சகியே
படுக்கை நொந்த தடி
*(பாரதியார் கவிதைகள்-கண்ணன் பாட்டு-*
*கண்ணன் என் காதலன் : 4 : 12)*

வேண்டும் பொருளை எல்லாம்—மனது
வெறுத்து விட்டதடி?
*(பாரதியார் கவிதைகள்-கண்ணன் பாட்டு-*
*கண்ணன் என் காதலன் : 1 : 4)*

காதல் நெஞ்சங்களின் தவிப்பினையும், மன மாசற்ற உயரிய நிலையினையும், ஒருவர்க்காக ஒருவர் இரங்கும் பேரன்பினையும், தமிழ்ப் புலவர்கள் நயம்படப் புலப்படுத்தியுள்ளனர். தலைவியின் தவிப்பினைக் குறிக்கும் சில பாடல்களையே இங்கே குறிப்பிட்டுள்ளோம்.

# 5. பொய் மழை

பழந்தமிழர்தம் காதல் வாழ்வு தூயது; போற்றத்தக்கது, ஒருவர் உள்ளம் அறிந்து ஒருவர் உருகி நிற்பது. காதலி படும் துன்பத்தினைத் தான் உற்ற துன்பமாகக் காதலன் கொள்கிறான்; இதுபோன்றே காதலன் நடக்கும் வழியில் எதிர்ப்படும் இன்னல்களையும் இடையூறுகளையும் எண்ணிக் காதலி கலக்க முறுகிறாள். ஒருவர் துன்பத்தில் ஒருவர் பங்கு கொண்டு உள்ளம் கசிந்துருகும் தியாக வாழ்வு, காதலர் வாழ்வென்பதனைச் சங்க இலக்கியங்கள் உணர்த்தி நிற்கின்றன.

முல்லை நிலத்தின் வாழ்வு கற்பு நிறைந்த காதல் வாழ்வு எனக் கவினுறப் புலவர்களால் போற்றப்பெறுவதாகும். காடும் காட்டைச் சார்ந்ததுமான முல்லைநிலம் கவின்மிகு காட்சிகளைத் தன்னகத்தே கொண்டு எழில் துலங்கி நிற்பதாகும். தமிழர் தங்கள் செல்வமாகக் கருதிப் போற்றிய ஆநிரைகள்—பசுக்கள் மேய்ச்சல் நிலந் தேடிச்சென்று புல்லருந்திப் பால்வளம் நல்கும் பயன்மிகு நிலமாகவும் முல்லை நிலம் கூறப்படும். ஆயர் வாழ்வு அழகுறத் துலங்குவது இந் நிலத்திலேயே யாகும்.

முல்லை நிலத்திற்குரிய பெரும்பொழுதாகக் கார்காலத்தை —அதாவது மழைக்காலத்தையும், சிறு பொழுதாக மாலைக் காலத்தையும் கொள்வர். 'காரும் மாலையும் முல்லை' (அகத். 6) என்று தொல்காப்பியனாரும், 'மல்கு கார் மாலை முல்லைக்குரிய' (அகத். 15) என்று நம்பியகப் பொருள் நாற்கவிராச நம்பியும் கூறுவர். ஒவ்வொரு நிலத்திற்கும் பெரும்பொழுதும் சிறுபொழுதும் அவ்வந் நிலத்தில் வாழும் மக்கள், அவ்வக் காலங்களில் கூறும் உணர்ச்சிகளின் நிலைக் களன்களாக அமைந்துள்ளதனைக் காணலாம். இது நம் முன்னோர்தம் உளவியல் நுட்பமறியும் பாங்கினையும்,

இயற்கையின் போக்கினை இனிதுணர்ந்த திறத்தினையும் தெரிவிக்கும்.

'விழைவதூஉம் விட்டேம் என்பார்க்கும்' மழைவேண்டும் என்பர் திருவள்ளுவர். மழையே மாநிலத்து வாழும் மக்கள் உணவுண்டு உயிர்வாழச் செய்வது. 'விசும்பில் துளி வீழி னல்லால்' இங்குப் பசும் புல்லும் தலை காட்டுதல் அரிதாகப் போய்விடும்' (குறள். 16). எனவே மழைக்காலத்தை மகிழ்ந்து போற்றிப் பாராட்டுவது மக்கள் செயலாக விளங்கியது.

வாழ்க்கைக்குத் தேவையானது பொருள். 'பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை' (குறள். 247) என்றார் பொய்யில் புலவர். 'முனிவரும் மன்னனும் முன்னுவ பொன்னால் முடியும்' என்பர். காதல் வாழ்வுக்குப் பொருள் தட்டின்றிக் கிடைக்கவேண்டும். 'கொடிது கொடிது வறுமை; அதனினும் கொடிது இளமையில் வறுமை' என்றார் ஔவையார். "It is better to live rich than to die rich", என்று சொன்னார் மேலைநாட்டு அறிஞர் டாக்டர் ஜான்சன். 'முதுமையிற் செல்வனாக மடிவதினும் இளமையில் செல்வ முடையோனாய் வாழ்தல் சிறந்தது' என்றார் அவர். கற்றறிந் தார் ஏத்தும் கலியும், 'பொருளில்லான் இளமைபோல் புல்லென்றாள்' (கலி. 38 : 15) என்ற உவமை வழி, இளமை வாழ்வில் இயந்திருக்க வேண்டிய பொருளைப் பற்றிக் கூறியிருக்கக் காணலாம்.

வாழ்க்கைக்கு இன்றியமையாத பொருளைத் திரட்டிவரச் செல்கிறான் காதலன். தலைவியை விட்டுப் பிரிவது அவனுக்குப் பெருந் துன்பமாக இருக்கின்றது. ஆயினும் காதல் வாழ்விற்குப் பொருள் வேண்டுமே? எனவே பெறற்கரிய காதலியை—தலைவியைப் பிரிந்தும் பெறற்குரிய பொருளைத் தேடிவரச் செல்கிறான். தலைவியைப் பிரிவதற்குமுன் தலைவியிடம் கார் காலம்—மழைக் காலம் தொடங்குவதற்கு முன்னால் உறுதியாகத் தான் திரும்பி வந்துவிடுவதாகக் கூறிச் செல்

கிறான். தலைவியும் அவன் சொல்லைத் தேறி அவனுக்கு விடை கொடுத்தனுப்புகின்றாள்.

பழந்தமிழ் நாட்டில் இயற்கை பெரும்பாலும் பொய்ப்பதில்லை. அவ்வக்காலம் வரும்பொழுது, அவ்வக் காலங்களுக்கு உரிய இயற்கை மாற்றங்களை இனிதாகக் காணலாம். இயற்கை மனித வாழ்வில் நிலைக்களமாக இலங்கியதைக் காணலாம். கார்காலம் தொடங்கிவிட்டது. ஆனால் கார்காலத்தில் திரும்பி வருவதாகக் கூறிப் பிரிந்து சென்ற தலைவன் இன்னும் வரவில்லை; கார்காலமோ வந்துவிட்டது. அப்பொழுது பெய்த மழைக்கு முல்லைக் கொடி தளதளவென்று தழைத்து விட்டது. அரும்புகள் முகிழ்த்துவிட்டன. அவ் அரும்புகள் கார்காலத்தில் வெண்ணிறப் பற்கள் போலவும், அப் பற்களைக் காட்டிக் கார்காலம் தன்னை நகைப்பது போலவும் தலைவிக்கு தோன்றுகின்றன. தலைவன் கூற்றைத் தான் நம்பி வாழ்வதை எண்ணி நகையாடுவதுபோல் கார்காலம் விளங்குகின்றது என்கிறாள் தலைவி. அவள் தோழியைப் பார்த்துப் பேசும் சொற்கள் இவை :

**இளமை பாரார் வளநசைஇச் சென்றோர்**
**இவணும் வாரார் எவண ரோவெனப்**
**பெயல்புறந் தந்த பூங்கொடி முல்லைத்**
**தொகுமுகை இலங்கெயி றாக**
**நகுமே தோழி நறுந்தண் காரே!**

(குறுந்தொகை : 126)

தான் துன்பப்பட்டால் உலகமே துன்பமயமாகக் காட்சியளிக்கிறது என்று எண்ணுகிற போக்கு தலைவியிடம் உண்டு. இது போன்றே உலகமெல்லாம் இன்புற்று இருக்கும்பொழுது தான் மட்டும் துன்புற்றுத் தொல்லைப்பட வேண்டியிருக்கிறதே என்று எண்ணும் மனப்போக்கும் தலைவியிடத்தே காணலாம். அன்போடு மகிழ்வோடு இதுகாறும் பலமுறை கண்டுவந்த முல்லைக்கொடியைத் தலைவி இப்பொழுது நோக்குகின்றாள்.

தனக்கு இன்பமூட்டிய இனிய முல்லை, இன்று தனக்குத் துன்பந் தந்து நிற்பதாகக் கருதினாள். தன்னைப் பார்த்து அம் முல்லைக் கொடி நகைப்பதாக எண்ணுகின்றாள். 'முல்லைக் கொடியே! நீ வாழ்க. உன் சின்னஞ் சிறு வெண்ணிற அரும்புகளால் என்னைப் பார்த்துப் புன்முறுவல் காட்டி நகைப்பதுபோல் தோன்றுகிறாய். கணவனைப் பிரிந்து கலங்கித் தவிக்கும் என்னைப்போன்ற எளியவரிடத்தும் நீ இவ்வாறு செய்வது தகுமோ?' என்று உருகிக் கேட்கின்றாள்.

**முல்லை வாழியோ முல்லை நீநின்**
**சிறுவெண் முகையின் முறுவல் கொண்டனை**
**நகுவை போலக் காட்டல்**
**தகுமோ மற்றிது தமியோர் மாட்டே?**

(குறுந்தொகை : 162 : 3-6)

பெய்ய வேண்டிய காலந்தில் பெய்யும் மழையே பருவ மழையாகும். பருவம் பொய்க்காது பெய்யும் அம் மழையினைப் பருவ மழை என்றால் பொருத்தமுடைத்து. அப் பருவ மழை தொடங்கிவிட்டது. தூறல் விழுகிறது. மயில்களின் உள்ளத்தில் களிப்புப் பொங்குகின்றது; எனவே, மகிழ்ந்து ஆடத் தொடங்குகின்றன. கொன்றை முதலான கார்கால மலர்கள் மலர்ந்து மணம் பரப்புகின்றன. 'ஆனால் எல்லாம் சரி. கார்காலத்தில் இயல்பாக நடைபெற வேண்டுவன வெல்லாம் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. ஆனால் கார் காலத் தொடக்கத்தில் திரும்பிவந்து விடுவேன் என்று சொல்லிச்சென்ற தலைவன் மட்டும் இன்னும் திரும்பிவரவில்லையே; கார்காலம் வந்துவிட்டாலும் தலைவன் தேர் திரும்பி வருகின்றது என்று என்னிடம் வந்து சொல்வார் இல்லையே' என்று தலைவி வருந்திக் கூறுகிறாள்.

**பொழுதோ தான்வந் தன்றே மெழுகான்று**
**ஊதுலைப் பெய்த பகுவாய்த் தெண்மணி**

மரம்பயி லிறும்பி ஞர்பதச் சுரனிழிபு
மாலே நனிவிருந்து அயர்மார்
தேர்வரும் என்னும் உரைவா ராதே.

*(குறுந்தொகை : 155; 3-7)*

தோழி, தலைவிமாட்டுப் பேரன்பு பூண்டவள்; அறிவாற்றல் நிறைந்தவள்; வாழ்க்கையனுபவம் நிரம்ப வாய்க்கப்பெற்றவள். எனவே, தலைவியின் துன்பத்தினை அறிந்தவுடன் அவள் துன்பத்தினைத் துடைக்க முன்வந்தாள். எனவே, எடுத்த எடுப்பிலேயே தன் பேச்சைத் தொடங்கி அதன்வழி அவளுக்குத் தேறுதல் கூற முனைந்தாள். 'மயில்கள் மகிழ்ந்து ஆடும் காட்சியினைக் கண்டு நீ கார்காலம் வந்து விட்டது என்று வருந்துகின்றாய். மயில்கள் அறிவற்றவை; பருவமழை பெய்துவிட்டது என்று அறியாமையால் எண்ணிக் கொண்டு, அவ் அறியாமை வெளிப்பட அவை ஆடிக் கொண் டிருக்கின்றன. அவ்வாறே பிடவமலர்களும் மயங்கி மலர்ந் துள்ளன. ஆனாலும் தோழி, உனக்கு நான் சொல்வேன், உறுதியாக உரைப்பேன், இது கார்காலம் அன்று; உன் துயரம் தீர்வாயாக. சென்ற கார்ப்பருவத்து மழை தான் பெய்ய வேண்டிய முழுமழையினையும் பெய்துவிடாமல் சிறுநீரினை எஞ்சலாக வைத்திருந்தது. அந்தப் பழைய நீரினை முற்றிலும் சொரிந்துவிட்ட பிறகுதானே, கடலிற் சென்று புதுநீரை முகந்து கொள்முதல் செய்து வரவேண்டும்? அவ்வாறு தன் பழைய இருப்பைத் தீர்த்து விடுவதற்காகப் பெய்த மழை யினைக் கார் என்று—புதுமழை என்று மயங்கக் கூடாது. இவ்வாறு நான் கூறினும், இடி இடிக்கின்றதே என்று என்னைக் கேட்பாய். மழை நம்மிடம் அன்பு காட்டாதது. ஆதலால், நம்மைத் துன்புறுத்த வேண்டும் என்னும் நோக்கில் இடி முழக்கத்தினைச் செய்கின்றது. அந்த முழக்கத்தைக் கேட்டு அறியாமையுடைய மயில்களும் ஆரவாரித்து ஆடுகின்றன, அவ்வளவுதான் உண்மை" என்று பேசினாள் தோழி.

மடவ வாழி மஞ்ஞை மாயினம்;
கால மாரி பெய்தென அதனெதிர்
ஆலலும் ஆலின; பிடவும் பூத்தன;
காரன்று இகுளை! தீர்கநின் படரே;
கழிந்த மாரிக்கு ஒழிந்த பழநீர்
புதுநீர் கொளீஇய உகுத்தரும்
நொதுமல் வானத்து முழங்குகுரல் கேட்டே

(குறுந்தொகை : 251)

மயில்கள் அறியாமையால் கார்காலம் என்று கருதி ஆடுகின்றன என்று தோழி கூறித் தலைவியைத் தெருட்டினாள். தலைவியோ கொத்துக்கொத்தாகப் பூத்துக் குலுங்குகின்ற கொன்றை மரங்களைக் காட்டி, 'இவையும் அறிவில்லாமல் தாம் கார்கால வரவால் பூத்துக் குலுங்குகின்றனவா?' என வினவினாள். அதற்கும் உடனடியாகப் பதில் கூறுகிறாள் தோழி: 'பெரிய கொன்றை மரங்களும் அறிவில்லாதவையே. நம்மைப் பிரிந்து சென்ற தலைவர், தாம் திரும்பி வருவதற்குச் சொல்லிச் சென்ற பருவம் வருவதற்கு முன்னமே கிளைகளில் கொத்துக் கொத்தாகப் பூத்துவிட்டன; இடைக் காலத்தில் பொழிந்து விட்டுச் செல்லும் வம்பமாரியை—புதுமழையைப் பருவ மழையாகிய கார் என்று கருதி மலர்ந்துவிட்டன. இதைக் கண்டு நீ வருந்தாதே' என்றாள்.

மடவ மன்ற தடவு நிலைக் கொன்றை
கல்பிறங் கத்தஞ் சென்றோர் கூறிய
பருவம் வாரா வளவை நெரிதரக்
கொம்பு சேர் கொடியிணர் ஊழ்த்த
வம்ப மாரியைக் காரென மதித்தே

(குறுந்தொகை : 66)

தலைவி தன்னைச் சுற்றிலும் நோக்குகிறாள். மயில்கள் மட்டும் தோகை விரித்து ஆடவில்லை; கொன்றைகள் மட்டும்

பூத்துக் குலுங்கவில்லை. இப்போது பிடவஞ் செடிகளும் காந்தள் செடிகளும் கூடப் பூத்துக் குலுங்குகின்றன. 'இவைகூட அறிவில்லாதவைதானா?' என்று ஐயத்தோடு வினவுகின்றாள்.

தோழியின் நிலை அறத்துன்பமான நிலை. ஆயினும் சதுரப்பாடு மிக்கவளாயிற்றே தோழி. தயக்கமின்றி மறு மொழி அவள் வாயினின்றும் வருகின்றது: 'தலைவர் திரும்பி வருவதாகக் கூறித் தெரிவித்த பருவம் இதுதானே' என்று கேட்கின்றாள். அறிவில்லாமல் உரிய காலத்தை மறந்து கடலுக்குச் சென்று நீரை முகந்து கொண்டுவந்த கரிய பெரிய மேகம் நீரைப் பொறுத்திருக்க ஆற்றாமல் கொட்டிவிட்ட மழை இது; இது கார்கால மழை என்று மயங்கி, ஆய்ந்து பாராமல் பிடவமும் கொன்றையும் காந்தளும் நன்கு மலர்ந்துவிட்டன. காரணம், அவைகளுக்கு ஆய்ந்து பார்க்கும் அறிவில்லை' என்றாள்.

**தாம்வரத் தெளித்த பருவம் காண்வர**
**இதுவோ என்றிசின் மடந்தை; மதியின்று**
**மறந்துகடல் முகந்த கமஞ்சூல் மாமழை**
**பொறுத்தல் செல்லாது இறுத்த வண்பெயல்**
**கார்என்று அயர்ந்த உள்ளமொடு தேர்வில்**
**பிடவமும் கொன்றையும் கோடலும்**
**மடவ ஆகலின் மலர்ந்தன பலவே.**

*(நற்றிணை : 99: 4-10)*

தோழி இவ்வாறு சொல்லியுங்கூடத் தலைவியின் உள்ளத்தில் தெளிவு பிறக்கவில்லை. பொன் காசுகளைப் போன்ற பூக்களை ஈன்ற கொன்றையைக் காணும்பொழுதும், குருந்த மலர்கள் மலர்ந்து அசைகின்றபொழுதும் கார்காலம் அன்று என்று நீ சொல்வாயேயானால், நான் காண்பனவெல்லாம் கனவுதானா என்று கேட்கிறேன் என்கிறாள் தலைவி.

காசின் அன்ன போதுஈன் கொன்றை
குருந்தொடு அலம்வரும் பெருந்தண் காலையும்
கார் அன்று என்றி யாயின்
கனவோ மற்றிது வினவுவல் யானே.

(குறுந்தொகை : 148: 4-7)

தோழி இப்பொழுதும் தளரவில்லை. அவள் அறிவுத் திறம் வெல்கிறது. தலைவியை நோக்கி அவள் பேசுகிறாள்.

"நீ என் சொல்லை நம்பாவிட்டாலும் சரி; தலைவர் சொன்ன சொல்லை நீ நம்புகிறாய் அல்லவா? அவர் சொன்ன சொல்லினினும் தவறுவாரா? முல்லைக் கொடிகள் பூத்துக் குலுங்கக் காரணமாக இடைக்காலத்துப் புதுமழை—வம்பமாரி—பெய்துவிட்டுப் புது மழையினைக் கொள்முதல் செய்யக் கடலுக்குப் போகின்றது என்று நான் சொன்னால், நீ நம்பமாட்டேன் என்கிறாய். இது வம்ப மழை அன்று, பருவ மழை பொழியும் கார் என்றே நீ கருதுவாயானால், கார்காலம் தொடங்குமுன் உறுதியாகத் திரும்பி வந்துவிடுவேன் என்று கூறிச் சென்ற தலைவர் தவறாமல் வந்திருக்க மாட்டாரோ? அவர் இன்னும் வாராத காரணத்தாலேயே இஃது உண்மையான கார்காலம் அன்று, வம்பமாரியே என்பது உனக்குத் தெரியவில்லையா?' என்று நெருங்கிக் கூறினாள்.

தண்துளிக் கேற்ற பைங்கொடி முல்லை
முகைதலை திறந்த நாற்றம் புதன்மிசைப்
பூமலி தளவமொடு தேங்கமழ்பு கஞல
வம்பப் பெய்யுமால் மழையே வம்பன்று
கார்இது பருவம் ஆயின்
வாரா ரோநம் காத லோரே.

(குறுந்தொகை : 382)

இந்தச் சொற்கள் தலைவிக்கு நம்பிக்கையூட்டின. தலைவர் சொன்ன சொல் திறம்பாமல் திரும்பி வருவார் என்பதில் அவளுக்கு உறுதி பிறக்கின்றது.

> **அம்ம வாழி தோழி காதலர்**
> **நிலம்புடை பெயர்வ தாயினும் கூறிய**
> **சொல்புடை பெயர்தலோ இலரே.**
>
> *(நற்றிணை : 289: 1-3)*

என்று தன் துயர் தணிந்து ஆறுதல் பெறுகிறாள் தலைவி.

இவ்வாறான சங்கப் பாடல்கள் பழந்தமிழ் மகளிரின் பண்பாட்டுச் சிறப்பினைப் பரக்கப் பேசுவனவாக அமைந்திருக்கக் காணலாம்.

# 6. நல்ல குறுந்தொகை

'முன்னைப் பழமைக்கும் பழமையாய்ப் பின்னைப் புதுமைக் கும் புதுமையாய்ப்' பெயர் விளங்கி ஒளிர நிற்பது நந்தம் மொழியாம் செந்தமிழ் மொழியாகும். வரலாற்றின் தொடக்க காலத்திலேயே வளமானதோர் இலக்கியப் பரப்பொன்று இலங்கி மிளிர்வது இம் மொழியிலேயே யாகும். தமிழின் பழம்பெரும் இலக்கியத்தினைச் 'சங்க இலக்கியம்' என வழங்கு வர் சான்றோர். சங்க இலக்கியம் ஒரு வாழைத் தோட்டம் எனலாம். வாழையடி வாழையெனக் காலங் காலமாகக் கன்றுகள் விட்டுத் தொடர்ந்து நிலைத்து நிற்கிறது அவ் இலக்கியம். காலத்தையும் வென்று நின்று வாழும் இலக்கியங் களாக அவை இன்று திகழ்கின்றன.

சங்க இலக்கியம் பாட்டும் தொகையும் என இருவகைப் படும். பாட்டு என்பது பத்துப்பாட்டு; தொகை எனப்படுவது எட்டுத்தொகை. எட்டுத்தொகை நூல்களாவன:

> **நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு**
> **ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்**
> **கற்றறிந்தார் ஏத்துங் கலியோடு அகம்புறம் என்று**
> **இத்திறத்த எட்டுத் தொகை**

எனும் பழைய வெண்பா குறுந்தொகையினை 'நல்ல குறுந் தொகை' எனக் குறிப்பிடுகின்றது.

உலகிற் காணலாகும் பொருள்களைக் காட்சிப் பொருள் என்றும், கருத்துப் பொருள் என்றும் இரு வகையாகப் பிரித்துக் கூறுவர். ஐம்புலன்களுக்கும் உட்பட்டவை காட்சிப் பொருள் கள்; மனனுணர்வால் அறியப்படுவன கருத்துப் பொருள்கள்.

புலன்களால் உணரப்படும் பொருளிலும் மனனுணர்வால் உணரப்படும் பொருள்களைச் சொற்களில் வடித்துக்காட்டி ஓர் உணர்வோவியம் தீட்டுவதில் சங்கப்புலவர்கள் வல்லவர் கள்.

குறுந்தொகை அகப்பொருள் பற்றிய நூலாகும். அகப் பொருளாவது யாது? ஒத்த அன்பும், வயதும், குடிப்பிறப்பும், கல்வியும், அழகும் சான்ற தலைமகனும் தலைமகளும் பிறர் கொடுப்பவும் அடுப்பவும் இன்றி, ஊழ்வழி வாழ்வில் ஒன்று கூட்டப்பெற்றுக் கூடி, அக் கூட்டத்திற்குப் பின்னர்த் தாங்கள் துய்த்த இன்பம் இன்னது இவ்வாறு இருந்தது என்று பிறர்க்குக் கூறப்படாததாய், யாண்டும் உள்ளத்து உணர்வாலேயே அனுபவிக்கப்படும் இன்பம் ஆதலின் 'அகம்' எனப்பட்டது.

அகம் கூறும் அகத்திணைக்கெனச் சில வரையறைகள் உண்டு. இவ் வரையறைகள் புலவர்கள் தாம் கூற முற்படும் பொருள் சிறப்பதற்கெனத் தாமே அமைத்துக் கொண் டவைகளாகும். இதனைத் தொல்லாசிரியராம் தொல்காப் பியனார்.

நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம்

(தொல். அகத். 56)

என்பர். 'நாடக வழக்காவது சுவைபட வருவனவெல்லாம் ஓரிடத்து வந்தனவாகத் தொகுத்துக் கூறுதல்' என்பர் உரையாசிரியர் இளம்பூரணர். 'உலகியல் வழக்காவது உலகத்தார் ஒழுகலாற்றோடு ஒத்து வருவது' ஆகும்.

குறுந்தொகை நான்கடிச் சிற்றெல்லையும் எட்டடிப் பேரெல்லையுங் கொண்ட அகவற் பாக்களால் இயன்றது; முதல், கரு, உரிப் பொருள்கள் சிறந்தது. இந் நூலின் அருமை குறித்துத் தமிழ்த்தாத்தா டாக்டர் உ. வே. சாமி

நாதையர் குறிப்பிடும் கீழ்க்காணும் கருத்து மனங்கொளத்தக்க தாகும்:

> 'சங்ககாலத்துப் புலவர் பெருமக்களின் கவியாற்றலை அறிந்து கொள்வதற்கு இக் குறுந்தொகையும் ஒரு கருவியாகும். இதன்கண் அகநானூற்றைப் போல முதல் கருப்பொருள்களைப் பற்றிய செய்திகள் விரிவாகக் காணப்படவில்லை; திருக்குறளைப் போல அறவே நீக்கப்படவுமில்லை. இலக்கண அமைதி நன்குடையதாகி விரிவும் சுருக்கமும் இன்றி இயற்கைக் காட்சிகளின் எழில் நலங்களையும், அகனைந்திணை யொழுக்கங்களையும், பண்டைக்கால நாகரிகச் சிறப்பையும், வேறு பல அரிய பொருள்களை யும் விளக்கிக்கொண்டு நிற்பது இக் குறுந்தொகை' (குறுந்தொகைப் பதிப்பு: நூலாராய்ச்சி: பக்கம் 27.)

இனிக் குறுந்தொகையினுட் சென்று கவிநலங் கண்டு தெளிவோம்.

பாரதம் பாடிய பெருந்தேவனார் பாடிய முருகனைப் பற்றிய கடவுள் வாழ்த்துப் பாடல் கொண்ட குறுந்தொகையின் இரண்டாவது பாடல் இறையனார் இயற்றியதாகும். 'கொங்குதேர் வாழ்க்கை' எனத் தொடங்கும் அப்பாடற் கருத்து, பிற்காலத்தே புராணக் குறிப்பு ஏற்றப்பட்டுத் திருவிளையாடற் புராணத்திலும் இடம் பெற்றுவிட்டது. தன் நெஞ்சமர்ந்த காதலியின் இணையற்ற இயற்கை நலத்தைக் காதலன் புனையும் நோக்கிலே அமைந்துள்ளது இப் பாடல்.

'பூந்தாதை ஆராய்ந்து உண்ணுகின்ற வாழ்க்கையினையும், உள்ளிடத்தே சிறையையும் உடைய வண்டே! என் நிலத்து வண்டாதலின் யான் விரும்பியதையே கூறாமல், நீ கண்கூடாக அறிந்ததையே சொல்வாயாக! நீ அறியும் பூக்களுள், எழுமை யும் என்னோடு பயிலுதல் பொருந்திய நட்பையும் மயில்போன்ற மென்மையையும் நெருங்கிய பற்களையும் உடைய இவ்

அரிவையின் கூந்தலைப்போல நறுமணம் உடைய பூக்களும் உள்ளனவோ?' என்று வினவெழுப்பிக் காதலியின் கூந்தல் இயற்கை மணமுடையது என்று இனிதுறப் புலப்படுத்து கின்றான். பாடல் வருமாறு :

கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்
செறியெயிற் றரிவை கூந்தலின்
நறியவு முளவோநீ யறியும் பூவே

(குறுந்தொகை : 2)

குறுந்தொகை எளிய சொற்களால் விழுமிய உணர்வு களைப் புலப்படுத்தும் உயரிய பாடல்களை உடையதாய்த் துலங்குவதனைப் பின்வரும் பாடல் கொண்டு அறியலாம். தலைமகள் ஒருத்தி, தன் ஆருயிர்க் காதலன் தன்மாட்டுக் கொண்ட தகைசால் காதலை வெளிப்படுத்தும் முறையிலும் சொற்களிலும் ஓர் எளிமைப்பாடும் அருமைப்பாடும் விளங்கக் காணலாம்.

நிலத்தினும் பெரிதே வானினு முயர்ந்தன்று
நீரினு மாரள வின்றே சாரற்
கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தே னிழைக்கு நாடனொடு நட்பே

(குறுந்தொகை : 3)

தேவகுலத்தார் பாடிய இப் பாடலில் காதலுக்கு நிலமும், வானும், கடலும் முறையே பரப்பிற்கும் உயரத்திற்கும் ஆழத்திற்கும் எல்லைகளாக எடுத்தியம்பப் பெற்றிருப்பது மகிழ்ந்து பாராட்டத் தக்கதாம்.

சங்க காலப் புலவர்களில் கபிலர் தனிச்சிறப்பு வாய்ந் தவர். அளவில் மிகுதியான பாடல்களைப் பாடியவர் என்ற சிறப்போடு தரத்தில் மிகுதியான பாடல்களைப் பாடியவர்

என்ற சிறப்பும் அவருக்குண்டு. அவர் காலத்தே வாழ்ந்த புலவர் பெருமக்களால், 'பொய்யா நாவிற் கபிலன்' என்றும், 'புலனழுக்கற்ற அந்தணாளன்' என்றும் பாராட்டப்பெற்றவர். 'குறிஞ்சி பாடக் கபிலன்' என்ற சிறப்புப் பெயராற் குறிஞ்சித் திணையைப் பாடுதலில் கபிலர் வல்லவர் என்ற குறிப்பையும் பெறலாம். குறிஞ்சித் தலைவனொருவனிடம் தன் நெஞ்சைப் பறிகொடுத்த குறிஞ்சிக் குமரி யொருத்தி, தன் நெஞ்சிற் கொண்ட நேரிய காதலைத் தக்க உவமைகொண்டு சாற்றுந் திறத்தினை நவையறக் கணலாம். பெரிய பலாமரத்தின் சின்னஞ்சிறிய கிளையில் பெரிய பலாப்பழம் ஒன்று தொங்கிக் கொண்டிப்பதுபோல, தலைவியின் சின்னஞ்சிறு உயிரில் மிகப் பெரிதான காதல் நிறைந்து கிடக்கின்றது என்ற கருத்துப்பட எழுந்துள்ள கபிலர் பாடலைக் காண்க :

**வேரல் வேலி வேர்க்கோட் பலவின்**
**சார னாட செவ்வியை யாகுமதி**
**யாரஃ தறிந்திசி னோரே சாரற்**
**சிறுகோட்டுப் பெரும்பழம் தூங்கி யாங்கிவள்**
**உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே.**

(குறுந்தொகை : 18)

காதலில் தலைப்பட்ட காதலர் இருவர் வெவ்வேறு ஊரினர்; முன்பின் பார்த்துப் பழகியறியாதவர். ஆனால் அவர்கள் ஊழ்கூட்ட ஒன்றுபட்டார்கள். கண்வழிப் புகுந்தது காதல்; நெஞ்சில் நின்றது; நிறைந்தது. 'இயற்கைப் புணர்ச்சி' என்று இதனைப் புலவோர் பொருத்தமுற மொழிவர். இவ்வாறு இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த பின்னர், தலைவன் பிரிவனோ எனக் கருதி அஞ்சுகிறாள் தலைவி. அக் குறிப்பினை அறிந்த தலைவன் பின்வருமாறு கூறுகின்றான் :

'என்தாயும் உன் தாயும் எத்தகைய உறவு உடையவர்?
என் தந்தையும் நின் தந்தையும் எந்த முறையில்

உறவினர்? இப்பொழுது பிரிவின்றியிருக்கும் நீயும் நானும் முன்பு ஒருவரையொருவர் எவ்வாறு அறிவோம்? ஆனால் இப்பொழுது செம்மண் நிலத்தின்கண்ணே பெய்த மழைநீர், அம் மண்ணோடு கலந்து, அதன் தன்மையை அடைதல் போல, அன்புடைய நம் நெஞ்சம் தாமாகவே ஒன்று பட்டன.'

**யாயும் ஞாயும் யாரா கியரோ**
**எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்**
**யானு நீயும் எவ்வழி யறிதும்**
**செம்புலப் பெயல்நீர் போல**
**அன்புடை நெஞ்சந் தாங்கலந் தனவே.**

(குறுந்தொகை : 40)

புலவர் ஒருவர்க்குப் பெயர் தந்த புகழ்மிக்க பாட்டு இது. இப் பாடலைப் பாடிய புலவர் யாரோ அறியோம். ஆனால் தாம் பாடிய பாடலின் சிறப்பு மிக்க ஒரு பாவடித் தொடரால் 'செம்புலப் பெயல் நீரார்' என்று அப் புலவர் அன்றுதொட்டு இன்றுவரை வழங்கப்பட்டு வருகிறார். இனியும் எதிர்காலத்தில் அவர் இப் பெயராலேயே வழங்கப்படுவார் என்பதும் திண்ணம்.

## காதல் தந்த ஆற்றல்

ஆணும் பெண்ணும் ஒருவர் மனத்தை ஒருவர் நாடிப் பெற்று ஒன்றுகலக்கும் உணர்விற்குக் 'காதல்' என்று பெயர். ஒரு காலத்தே பகைத்துப் போராடியவர்களையும் காலம் கனிவித்துக் காதலில் தள்ளுகிறது. இளவயதில் தலைவன் ஒருவன் தலைவியின் ஐவகையாகப் பிரித்துப் புனையப்பட்டிருந்த கூந்தலைப் பிடித்து இழுத்தான். தலைவியோ பதிலுக்கு அவன் புல்லிய தலைமயிரை வளைத்து இழுப்பாளாய் ஓடினாள். அது

போது அவர்தம் செவிலித்தாயர் இடைமறித்துத் தடுக்கவும் ஒழியாமல், பகைமை பாராட்டும் சிறுசிறு சண்டைகளை அன்று போட்டுக்கொண்டார்கள். ஆனால் இப்பொழுதோவெனில், அதாவது உடன்போக்கு ஒருப்பட்டு எழுந்து பாலையில் பயண மாகும் காலையில், இடைச்சுரத்துக் கண்டோர், இவர்கள் இப்போது மலரைப் பிணைத்த இரட்டை மாலையைப்போல் காணப்படுவதனைக் காண்கின்றார்கள். இளமையில் ஏதிலராகத் தமக்குள் கலாம் விளைவித்துக்கொண்ட இவர்களை இவ்வாறு துணைமலர்ப் பிணையலாக வாழ்வில் ஒன்று சேர்த்தது ஊழ்வினையின் ஆற்றலே யாகும் என்று வியந்து போற்று கின்றனர். மோதாசனார் என்னும் சங்கப் புலவர் பாடும் பங்கமில் பாடல் வருமாறு :

இவன்இவள் ஐம்பால் பற்றவும் இவள்இவன்
புன்றலை யோரி வாங்குநள் பரியவும்
காதற் செவிலியர் தவிர்ப்பவுந் தவிராது
ஏதில் சிறுசெரு வுறுப மன்னோ
நல்லைமன் றம்ம பாலே மெல்லியல்
துணைமலர்ப் பிணையல் அன்னஇவர்
மணமகிழ் இயற்கை காட்டி யோயே

(குறுந்தொகை : 229)

இவ்வாறு ஊழ் கூட்ட ஒன்றுபடும் நெஞ்சினரான தலைவனும் தலைவியும் தன்னலங் குறைந்து ஒருவர்க்காகவே ஒருவர் வாழும் வாழ்க்கையினை மேற்கொள்வர். காதற் செவ்வியால் அவர்கள் மனம் பண்படப் பண்பட அச்சம் அகன்று, அஞ்சாமை மிகுந்து, அவன் வழி துன்பத்தைத் தாங்கும் ஆற்றலும் பெருகக் காணலாம். தலைவி சிறு பெண்ணாக வாழும் பொழுது எடுத்ததற்கெல்லாம் அஞ்சினாள். காதல் என்னும் அனுபவம் அவளுக்கு ஏற்படாததற்கு முன்னர் மலைக் கோட்டான் கத்தும் குரலைக் காதிற் கேட்பினும் அவளுடைய உள்ளம் நடுங்கும். வீட்டின் முற்றத்தில் வளர்ந்திருக்கும்

பலாமரத்தின் பெரிய கிளையில் குரங்கு ஒன்று பாய்ந்து துள்ளுவதைக் கண்டாலும் அவள் நெஞ்சம் நடுநடுங்கி அயர்வுறும். ஆனல் இவை யெல்லாம்—இத்தகைய அச்சமெல்லாம் காதல் தந்த ஆற்றலால் கரைந்து போயின. இன்று காதலன் வரவை நோக்கி, அவன் வரும் வழியினைச் செறிந்த நள்ளிரவிலும் உற்றுப் பார்த்துக் காத்து நிற்கும் உரத்தினை அவள் உள்ளம் பெற்றுவிட்டது என உணர்கிருள். தான் பெற்ற அஞ்சாமையினை அவளே நினைந்து வியப்புறுகின்றுள். அச்சம் குடிகொண்டிருந்த நிலையும், அது நீங்கி அஞ்சாமை வந்திறுத்த நிலையும் அவளாலேயே நினைந்து பாடப் பெறுகின்றது. இதோ அப் பாடல் :

> **குன்றக் கூகை குழறினும் முன்றில்**
> **பலவின் இருஞ்சினைக் கலைபாய்ந் துகளினும்**
> **அஞ்சுமன் அளித்துஎன் நெஞ்சம் இனியே**
> **ஆரிருட் கங்குல் அவர்வரின்**
> **சாரல் நீளிடைச் செலவா னுதே.**

(குறுந்தொகை : **153**)

திருமணத்திற்கு முன்னர்தான் என்றில்லை; திருமணமாகி அன்போடு இல்வாழ்க்கை தொடங்கி வாழும்போதும் தலைவிக்குக் காதல் தந்த ஆற்றல் துணை நிற்கின்றது. காதலியாக இருந்த அவள் இப்போது மனைவியாக விளங்குகின்றுள். கணவனுக்குத் தயிர்க் குழம்பு சமைக்கின்றுள். முற்றிய கெட்டித் தயிரைத் தன் மெல்லிய காந்தள் போன்ற விரல்களாலே பிசைந்து, சேர்க்க வேண்டிய பொருள்களைச் சேர்த்துத் தாளிக்கத் தொடங்கினுள். தாளிக்கும் நேரத்தில் தையலின் சேலை நெகிழ்ந்தது. குறித்த நேரத்தில் விரைந்து தாளிக்கத் தவறினல் நறுமணமும் சுவையும் குன்றுமெனத் தன் அட்டிலாக்கும் அனுபவத்தால் தெரிந்து வைத்திருந்த அவள், தயிர் பிசைந்த கையைக் கழுவாமலே நெகிழ்ந்த ஆடையை உடுத்திக்கொண்டாள். உடனே தாளித்ததால்

தாளிப்புப் புகை எழுந்து அவள் கண்ணிற்பட்டு உறுத்திய போதிலும், தாளிப்பைத் தவறவிட்டால் தயிர்க்குழம்பின் சுவைப்பயன் குறையும் என்று கண்டு, புகைக்கு இடையேயும் உற்று நோக்கித் நோக்கித் துழாவிச் சமைத்து முடித்தாள். கணவன் வீடு திரும்பியவுடன் அவனுக்குப் பரிமாறினாள். அவனே 'நன்றாயிருக்கிறது' என்று பாராட்டியவாறே உண்டான். தன் சமையலுக்குக் கிடைத்த பாராட்டை எண்ணி மனைவியின் அகத்தில் மகிழ்ச்சி மலர்ந்தது. அகத்தே நிறைந்த மகிழ்ச்சி புறத்தே நுட்பமாகப் புன்முறுவலாக விளங்கியது. உலகியலைச் செம்மைப்படுத்தும் சீர்மை வாய்ந்த இத் தலைவன் தலைவியரின் இல்லறப்பாங்கின் ஏற்றத்தினைப் பாருங்கள் :

**முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்**
**கழுவுறு கலிங்கம் கழாஅது உடீஇக்**
**குவளை யுண்கண் குய்ப்புகை கமழத்**
**தான்துழந்து அட்ட தீம்பு ளிப் பாகர்**
**இனிதெனக் கணவன் உண்டலின்**
**நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே.**

(குறுந்தொகை : 167)

## காதல் தந்த துன்பம்

காதலர் ஒருவரை விட்டு ஒருவர் பிரிந்துறைய ஒருப்படார். ஏதேனும் ஓர் காரணம்பற்றிப் பிரியவேண்டி நேரிட்டாலும் அப் பிரிவாற் பெரும் பேதுறுவர். திருமணத்திற்கு முன்னும் பின்னரும் பொருளீட்டி வரவேண்டும் என்னும் ஆர்வம் முந்துறத் தலைவன் தலைவியை விட்டுப் பிரிதல் உண்டு. முன்னோர் பாடுபட்டுத் தேடி வைத்துள்ள பொருளைச் செலவு செய்து அழிப்பவர்கள், பொருள் உள்ளவர்களாக மதிக்கப்பட மாட்டார்கள்; பொருள் இல்லாதவர்களின் வாழ்க்கையோ வெனில் இரந்து உயிர் வாழ்வதைக் காட்டிலும் இழிவான தாகும்.

உள்ளது சிதைப்போர் உளர்எனப் படாஅர்
இல்லோர் வாழ்க்கை இரவினும் இளிவு

(குறுந்தொகை : 283)

மேலும் ஆண் பெண் என்று இருபாலாக அமைந்துள்ள சமுதாயத்தில் ஆணின் உயிர் கடமையாகக் கருதப்பட்டது; பெண்ணின் உயிர் கணவனாக நினைக்கப்பட்டது. எனவே இக் காரணத்தால் தலைவி யொருத்தியை விட்டுத் தலைவன் பிரிய ஒருப்பட்டான் என்று தோழி தலைவியிடம் கூறி அவளை ஆற்றுவிக்கின்றாள். பாலை பாடிய பெருங்கடுங்கோ பாடியுள்ள அப் பாடல் வருமாறு :

வினையே ஆடவர்க் குயிரே வாணுதல்
மனையுறை மகளிர்க் காடவர் உயிரென
நமக்குரைத் தோருந் தாமே
அழாஅல் தோழி அழுங்குவர் செலவே.

(குறுந்தொகை : 135)

## நம்பிக்கை

'வெளுத்ததெல்லாம் பாலல்ல; ஆனால் நம்பிக்கையின் அடித்தளத்தில்தான் வாழ்க்கையின் உயிர்நாடி உளது.' பிரிந்து செல்லும் தலைவன் கார்காலத் தொடக்கத்தே உறுதியாகத் திரும்பி வருவதாகக் கூறிச் செல்கிறான். அவன் கூறிச் சென்ற கார் காலம் வந்துவிட்டது. அப்பொழுதுதான் பெய்த புதுப்பெயலுக்குத் தழைத்த முல்லைக்கொடி பற்கள் போன்ற அரும்புகளைக் காட்டித் தலைவியை நோக்கி நகை செய்வதாகத் தலைவி கார்கால வரவைக் கற்பனை செய்து பார்க்கிறாள். அவள் தலைவர், அவள்தன் இளமையைப் பாராமல் பொருள் நலமே பொருளாகக் கருதிச் சென்று விட்டவர், கூறியாங்கு திரும்பி வாராமலும், இருக்குமிடத்தை அறிவிக்காமலும் இருப்பதாகவும், அதனால் கார்காலம் முல்லை யரும்புகளைப்

பற்களாகக்கொண்டு' தன்னை நோக்கி நகைப்பதாகவும் கருதிக் கலங்குகின்றாள் தலைவி. ஆழ்ந்து சோர்ந்த அகமனத்தின் ஆழத்திலிருந்து சோகத்தின் எதிரொலியாகப் பிறக்கிறது பாட்டு:

**இளமை பாரார் வளநசைஇச் சென்றோர்**
**இவணும் வாரார் எவண ரோவெனப்**
**பெயல்புறந் தந்த பூங்கொடி முல்லைத்**
**தொகுமுகை யிலங்கெயி றாக**
**நகுமே தோழி நறுந்தண் காரே.**

*(குறுந்தொகை : 126)*

மகன்றில் என்பது நீர்வாழ் பறவைகளுள் ஒன்றாகும். இப் பறவைகள் ஆணும் பெண்ணும் பிரிவின்றி எஞ்ஞான்றும் இணைந்து வாழும் தன்மையுடையன. இவை நீர் நிலைகளில் மலர்ந்துள்ள பூக்களின் இடையே பயிலும். அவ்வாறு ஆணும் பெண்ணுமாக இணைந்து செல்லுங்கால் இடையே பூவொன்று இடைப்பட்டாலும், அவ்விடைப்பட்ட காலம் பல ஆண்டுகள் கடந்தாற்போன்ற துன்பத்தை அவற்றிற்கு ஏற்படுத்துமாம். எனவே, பிரிதல் அருமையுடையது காதல். பிரிதல் என்பது உயிர் நீத்தலுக்கு ஒப்பானது. இவ்வாறு கருதுகிறாள் தலைவி ஒருத்தி. அவள் உணர்வுகளைப் பாட்டிலே பாங்காக வடித்துள்ளார் சிறைக்குடியாந்தையார் என்ற சீரிய புலவர். அப் பாடல் வருமாறு:

**பூவிடைப் படினும் யாண்டுகழிந் தன்ன**
**நீருறை மகன்றிற் புணர்ச்சி போலப்**
**பிரிவரி தாகிய தண்டாக் காமமொடு**
**உடனுயிர் போகுக தில்ல கடனறிந்து**
**இருவே மாகிய வுலகத்**
**தொருவே மாகிய புன்மைநா முயற்கே.**

*(குறுந்தொகை : 57*

தன் பிரிவுத்துயர் கை கடந்து துன்பம் விளைவிக்கும் காலையிலும் தலைவி, தன் இன்பக்காலத்தில் தனக்குத் துணை நின்ற தோட்டத்து வேங்கை மரத்தை மறந்தாளில்லை. எவ்வுயிரையுந் தன்னுயிர்போல் எண்ணி உவக்கும் பெருமனம் இயற்கையில் தோயும் இனிய மனம் தலைவியுடையது. எனவே தான் தலைவன் வரையாது பிரிந்த விடத்தும், இன்னுமை யுடைய இராக் காலங்களில் தலைவனும் தலைவியும் பேசுவதற்கு இனிய துணையாகவிருந்த மனைத்தோட்டத்தின்கண் உள்ள வேங்கை மரத்திற்காவது ஒரு தூது மொழியை யனுப்பியிருக் கலாமே, மறந்து விட்டாரே என ஆற்றுமை மீதூர்ந்து அவலத்தில் ஆழ்கிறது அவள் உள்ளம்:

> நமக்கொன் றுரையா ராயினும் தமக்கொன்று
> இன்னு இரவின் இன்துணை யாகிய
> படப்பை வேங்கைக்கு மறந்தனர் கொல்லோ
> துறத்தல் வல்லியோர் புள்வாய்த் தூதே.
>
> (குறுந்தொகை : 266)

## வற்றிய பாலையிலும் வற்ருத அன்பு

பொருள்வயிற் பிரிந்து செல்லும் தலைவன் கொடிய பாலை நிலத்தின் வழியே பயணஞ் செய்கின்ருன். அப் பாலைக்காடு, கள்ளி மரங்கள் மிகுந்தது. ஆறலை கள்வர்கள் ஆங்காங்கே மறைந்திருந்து, அத்தம் செல்வோரை அலறத் தாக்கிக் கொல்ல முயல்வர். அவர்தம் கைப்பொருள் வெளவும் கடப் பாட்டுடன், இரும்பு முனையுடைய அம்புகளைத் தீட்டித் தீட்டிக் கூர்மைப்படுத்துவர். தம் நகத்தின் முனையில் அந்தக் கூர் தீட்டிய அம்புகளின் கூர்மையினைப் பரிசோதித்தும் பார்ப்பர். அப்பொழுது எழும் ஓசை அச்சமும் அவலமும் சான்றது. அதற்கீடான ஓசை பிறிதொன்று அந்தப் பாலைக் காட்டில் உண்டு. அது கள்ளி மரங்களில் உறையும் பல்லியின் ஓசையாகும். பல்லி தன் துணையை அன்போடு அழைக்கும் போது அத்தகைய ஒலியினை எழுப்பும்,

உள்ளார் கொல்லோ தோழி கள்வர்தம்
பொன்புனை பகழி செப்பம் கொண்மார்
உகிர்நுதி புரட்டும் ஓசை போலச்
செங்காற் பல்லி தன்துணை பயிரும்
அங்காற் கள்ளியம் காடிறந் தோரே.

(குறுந்தொகை : 16)

ஆனால் இத்தகைய நெஞ்சை வாட்டி வதைக்கும் கடுங் கொடுமையான பாலையிடையிலும் பசுமையான அன்பு தழைப்பதற்கு அறிகுறியான காதற்காட்சிகளும் உண்டு. கொடிய பாலையில் கொள்வதற்கு உணவும் இன்றி வாடி வருந்துகின்றது ஓர் யானைக் குடும்பம். பெண் யானையின் பசியைப் போக்க ஆண் யானை முயல்கின்றது. தழையுணவோ மூங்கிலோ எங்கும் கிடைக்காமை காரணமாக யானை மரத்தின் மெல்லிய கிளையை ஒடித்து, அதன் பட்டையை உரித்துத் தன் துணை தின்னுமாறு தருகின்றது. அதுபோன்றே அருள் உள்ளம் வாய்ந்த தலைவனும் விரைவில் மீண்டு வந்து தலைவிக்குத் தலையளி செய்வர் எனத் தோழி, தலைவியை ஆற்றுவிக்கின்றாள்.

நசைபெரி துடையர் நல்கலு நல்குவர்
பிடிபசி களைஇய பெருங்கை வேழம்
மென்சினை யாஅம் பொளிக்கும்
அன்பின தோழியவர் சென்ற வாறே.

(குறுந்தொகை : 37)

அகப்பொருள் இலக்கியத்தில் தோழிக்குத் தனியிடமும் பெருமையும் பங்கும் உண்டு. 'ஒன்றித் தோன்றும் தோழி' என்பர் தொல்காப்பியனார். அறிவும் ஆற்றலும் சொற் சதுரப்பாடும் வாழ்க்கை அனுபவமும் நிறைந்தவள் தோழி. தன் குறையைத் தோழி ஏற்றுக் கொள்ளாத காலத்தில், அவளுடைய உதவியை விரும்பி, அவளைத் தலைவன் இரந்து

பின்னிற்க முயல்கிறான். அப்போது தன் காதல் நெஞ்சத்தைத் திறந்து காட்டும் அவனுடைய உணர்வுகளைப் பின்வரும் பாடலில் அள்ளூர் நன்முல்லையார் என்னும் பெண்பாற் புலவர் அழகுற வடித்துள்ளார்.

காலையும் பகலுங் கையறு மாலையும்
ஊர்துஞ்சு யாமமும் விடியலும் என்றுஇப்
பொழுதிடை தெரியிற் பொய்யே காமம்
மாவென மடலொடு மறுகிற் றோன்றித்
தெற்றெனத் தூற்றலும் பழியே
வாழ்தலும் பழியே பிரிவுதலை வரினே.

(குறுந்தொகை. 32)

இவ் மனவுணர்வினையே மிளைப்பெருங் கந்தன் எனும் ஆண்பாற்புலவர் தலைவி ஒருத்தியின் கூற்றாகப் பின்வருமாறு கூறுகின்றார்:

சுடர்செல் வானஞ் சேப்பப் படர்கூர்ந்து
எல்லுறு பொழுதின் முல்லை மலரும்
மாலை யென்மனார் மயங்கி யோரே
குடுமிக் கோழி நெடுநகர் இயம்பும்
பெரும்புலர் விடியலும் மாலை
பகலும் மாலை துணையி லோர்க்கே.

(குறுந்தொகை. 234)

தலைவனைப் பிரிந்த தலைவிக்கு முல்லை மலரும் காலமாம் மாலையும் மாலை; கோழி குரலெழுப்பும் காலையும் மாலை யாகும்.

இவ்வாறு ஆணின் உணர்ச்சியினைப் பெண்பாற் புலவரும், பெண்ணின் உணர்ச்சியினை ஆண்பாற் புலவரும் அழகுறப்

புனைந்துள்ளனர். கூடுவிட்டுக் கூடு பாயும் வித்தை அவர்கட்குக் கைவந்த கலையாகும்.

## திசைமாறிய அன்பு

இவ்வாறு காதலின் பேராற்றலைப் புனைந்து கூறும் குறுந்தொகைப் புலவர்கள் ஒரோவழி, திசைமாறிய அன்பின் போக்கினையும் சுட்டிக் காட்டத் தவறவில்லை.

திருமணம் முடிந்து தலைவியுடன் இனிமையுற இல்லறம் நடாத்திய தலைவன் தவற்றொழுக்கத்தில் தலைப்பட்டான். ஒரு சிறிது காலஞ்சென்ற பின்னர்த் தன் தவற்றினை எண்ணித் தனக்குள் தானே நாணித் தலைகவிழ்ந்தான். பெறுதற்கரிய தலைவியைப் பெற்றும், வைத்துப் படைக்காமற் போனோமே என்ற ஆற்றாமை அவன் உள்ளத்தில் மீதூர்ந்தது. தலைவியின் தோழியை அண்டினான். அவள் வாயிலாகத் துணையாகத் தலைவியை மீண்டும் பெற முனைந்தான்; முயன்றான். அதுபோது அவனை இடித்துத் திருத்த முயலும் தோழியின் கூற்றில் ஓர் அரிய வாழ்வியல் உண்மை புலப்படுகின்றது. தோழியின் கூற்று வருமாறு:

'ஐய! வேம்பினது பசிய காயை முன்பு தந்தால் இனிய பொலிவுபெற்ற வெல்லக்கட்டி என்று பாராட்டிக் கூறினீர். இப்பொழுது, பாரி வள்ளலுக்கு உரித்தான பறம்புமலையிடத்துள்ள, தை மாதத்திற் குளிர்ந்தனவாகிய குளிர்ச்சியையுடைய சுனையிலுள்ள தெளிந்த நீரைத் தந்தாலும் வெப்பத்தையுடையனவாகி உவர்ப்புச்சுவையைத் தருமென்று கூறினீர். நுமது அன்பு அவ்வாறு திசை மாறி விட்டது.'

> **வேம்பின் பைங்காய்என் தோழி தரினே**
> **தேம்பூங் கட்டி யென்றனிர் இனியே**
> **பாரி பறம்பிற் பனிச்சுனைத் ·தெண்ணீர்**

தைஇத் திங்கள் தண்ணிய தரினும்
வெய்ய வுவர்க்கு மென்றனிர்
ஐய வற்ருல் அன்பின் பாலே.

(குறுந்தொகை. 196)

*இவ்வாறு தலைவனின் அன்பு மாறிய வகை காட்டி அவனை இடித்துரைத்தாள் தோழி. இதனைக் கேட்ட தலைவன், தன் சீர்கெட்ட வாழ்க்கையைத் திருத்திக் கொண்டிருப்பான் என்பதனைச் சொல்லவும் வேண்டுமோ!*

## தலைவியின் மாருக் காதல்

*தலைவன் காதல் தகாத வழியிற் சென்றதாகக் குறிப்பிடப் பட்டாலும், தலைவியின் காதல் ஒருநாளும் மாற்றம் பெற்ற தாகக் குறுந்தொகையில் யாண்டும் பேசப் பெறவில்லை.*

*தாய் தன் குழந்தை தவறு செய்தபொழுதும், மாறுபட்டு வருத்தியபோதும், வாய்விட்டு அன்னையே என்று அழும் குழந்தையைப் போலத் தலைவி, தலைவன் இன்னுதவற்றைச் செய்தாலும், இனிதாகத் தலையளி செய்தாலும், தலைவனை யன்றித் தன் துன்பத்தை நீக்குவாரைப் பெற்றிலள். ஆதலால் அவனல் என்றும் புரக்கப்படும் எல்லைக்குட் பட்டவள் என்று தோழி கூறும் கூற்றில்தான் எத்துணை கருத்தாழம் நிறைந்து காணப்படுகின்றது!*

தாயுடன் றலைக்கும் காலையும் வாய்விட்டு
அன்ஞ வென்னுங் குழவி போல
இன்ஞ செயினும் இனிதுதலை யளிப்பினும்
நின்வரைப் பினள்என் தோழி
தன்னுறு விழுமங் களைஞரோ இலளே.

(குறுந்தொகை. 397 : 4-9)

## உணர்வோவியம்

'உள்ளத்தால் உணரும் உணர்ச்சிகளைச் சொற்களால் புலப்படுத்துதல் அரிது. ஆயின். கற்பனைத் திறன் மிக்க புலவர்கள் அந்த உணர்ச்சிகளைத் தம் பாட்டில் வடித்து உணர்த்தும்போது, அவற்றை உணர்ந்து போற்றுகிறோம். குறுந்தொகையில் காதலரின் உள்ளத்து உணர்ச்சிகளும் தோழி முதலியவரின் உணர்ச்சிகளும் சொல்லோவியமாக அமையும் திறன் போற்றத்தக்கது' என்று குறிப்பிடுவார் சான்றோர் பெருந்தகையாம் டாக்டர் மு. வ. அவர்கள்.

(குறுந்தொகைச் செல்வம்—உணர்வோவியம் பக். 81.)

எடுத்துக்காட்டாகக் கபிலரின் குறிஞ்சித் திணையமைந்த பாடலொன்றைக் காண்போம்.

இருண்ட நள்ளிரவில் பெருமழை பெய்கிறது. தலைவன் தலைவியை நாடி வந்து நிற்கிறான். அவனைக் கண்ட தோழி பின்வருமாறு கூறுகின்றாள் :

'மழை நிலமெல்லாம் மறைப்பதால் வானம் தெரிய வில்லை. நீர் நிலமெங்கும் பரந்து ஓடுவதால் நிலம் தெரிய வில்லை. ஒளி மங்கிவிட்டதனால், இருள் சூழ்ந்து விட்டது. பலரும் உறங்கும் நள்ளிரவில் நீ எவ்வாறு வந்தனையோ? வேங்கைமரம் பூத்து மணம் கமழும் எம் சிற்றூரை எப்படித் தான் தேடிக் கண்டுபிடித்து வந்தாயோ! உன் முயற்சி யருமையை நோக்கும்பொழுது என் மனம் பெரிதாக வருந்து குன்றது."

**பெயல்கண் மறைத்தலின் விசும்புகா ணலையே;**
**நீர்பரந் தொழுகலின் நிலம்கா ணலையே;**
**எல்லை சேறலின் இருள்பெரிது பட்டன்று**
**பல்லோர் துஞ்சும் பானாட் கங்குல்**

யாங்குவந் தனையோ ஓங்கல் வெற்ப
வேங்கை கமழும்எம் சிறுகுடி
யாங்குஅறிந் தனையோ நோகோ யானே.

(குறுந்தொகை—55)

## வரலாற்றுக் குறிப்பு

பல அரிய வரலாற்றுச் செய்திகளை உள்ளடக்கியதாக இருக்கிறது குறுந்தொகை.

நன்னன் என்னும் சிற்றரசனொருவன், ஆற்றங்கரையிலிருந்த தன் தோட்டத்தில் அரிதாக வளர்த்த மாமரத்தின் காயொன்று, அவ்வாற்றிலே வீழ்ந்து அடித்துக்கொண்டு மிதந்து வர, நீராட ஆற்றிற்குச் சென்ற பெண்ணொருத்தி அதனை எடுத்துத் தின்றுள். அதுகண்ட காவலர் அவளை மன்னன் நன்னனிடம் சென்று நிறுத்த, அவன் அவளுக்குக் கொலைத் தண்டம் விதித்தான். அதனை அறிந்த அவள் தந்தை அவளது நிறையளவிற்கு ஈடாகப் பொன்னுற் செய்த அவளுருவையும், எண்பத்தொரு களிற்றையும் தண்டமாக இறுப்பதாகக் கூறவும் நன்னன் அதற்கு உடன் படாமற் கொலைபுரிவித்தான்.

மண்ணிய சென்ற வொண்ணுதல் அரிவை
புனல்தரு பசுங்காய் தின்றதன் தப்பற்கு
ஒன்பதிற் றெண்பது களிற்றெடு அவள்நிறை
பொன்செய் பாவை கொடுப்பவும் கொள்ளான்
பெண்கொலை புரிந்த நன்னன்.

(குறுந்தொகை. 292 : 1-5)

## இறைச்சிப் பொருள்

சில கருத்துகளை வெளிப்படையாகக் கூறுமல், மறைத்துக் குறிப்பால் உணர்த்துவது 'இறைச்சி' எனப்படும். 'இறைச்சி தானே பொருட்புறத்ததுவே' என்பது தொல்காப்பியம்.

களவொழுக்கத்தை நீட்டித்து, வரைவு முயற்சி மேற் கொள்ளாது இரவுக்குறி வந்து நிற்கும் தலைவனை எதிர்ப் பட்டுத் தோழி பின்வருமாறு கூறினாள் :

'ஆண் குரங்கொன்று இறந்ததாக, கைம்மைத் துன்பத் தைப் பொறுக்க மாட்டாத அழகும் இளமையும் வாய்ந்த பெண் குரங்கு, தன் கல்லாத வலிய குட்டிகளைச் சுற்றத்தி னிடத்துக் கையடையாக ஒப்பித்து, உச்சி மலையேறிக் கீழே பாய்ந்து விழுந்து உயிரை மாய்த்துக் கொள்ளும் நாட்டிற்குத் தலைவனே! நீ நள்ளிரவில் இவண் வாராதே' என்றாள்.

அவன் நாட்டு மலையில் வாழும் குரங்கே இத்தகு கற்பு வாய்ந்ததானால் தலைவியின் கற்பு நிலை கூறாமலே தெளிவுறும்.

**கருங்கண் தாக்கலை பெரும்பிறி துற்றெனக்**
**கைம்மை யுய்யாக் காமர் மந்தி**
**கல்லா வன்பறழ் கிளைமுதற் சேர்த்தி**
**ஓங்குவரை யடுக்கத்துப் பாய்ந்துயிர் செகுக்கும்**
**சாரல் நாட நடுநாள்**
**வாரல் வாழியோ வருந்துதும் யாமே.**

*(குறுந்தொகை.—69)*

## முடிவுரை

இவ்வாறாகக் குறுந்தொகை ஓர் ஓவியக்கூடமாக ஒளிரக் காணலாம். இவ்வழகு ஓவியங்கள் சிறப்பாகக் காதலர் மனநிலையைக் கவினுற விளக்கி நிற்கின்றன. டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் பொருத்தமுறக் கூறுவது போன்று, குறுந்தொகையில் 'முதல், கரு என்னும் இரண்டும் பொருளாகிய நாடகநிகழ்ச்சிக்கு நிலைக்களனாக உதவுகின்றன' எனலாம். உரிப்பொருள் கவிஞனுடைய இணையற்ற பாவிகத்தைப் பரக்கப் பேசுகின்றது. சுருங்கச் சொன்னால்,

குறுந்தொகை. சங்க காலத் தமிழகத்தின் காதல் வாழ்வினை வனப்புற வடித்துக் காட்டி நிற்கும் பெற்றியதாகும். தமிழ்க் கவி மலரும் சோலையாக நின்றிலங்கும் குறுந்தொகை, எண்ண மெல்லாம் இனிக்கும் வண்ண வண்ணப் பூக்களை மலர்வித்து மட்டில்லா மணம் பரப்பி நிற்கிறது எனலாம்.

# 7. புறநானூற்றில் நட்பு

'ஒள்ளியோர் பிறந்த இம் மலர்தலை யுலகத்து' வாழும் உயிரினங்கள் சில அடிப்படைப் பண்புகளைத் தொன்று தொட்டுத் தொடர்ந்து பெற்று வருகின்றன. ஒன்றனோடு ஒன்று உயிரினங்கள் தொடர்புகொண்டு உறவாடி மகிழ்கின்றன; பயன் பெறுகின்றன. பண்புகளால் ஏறத்தாழ ஒத்த இருவரிடையே, அவ்விருவரும் ஒருவருக்கொருவர் நெருங்கிப் பழகும் வாய்ப்பு ஏற்படும்பொழுது அன்பு அரும்புகின்றது. இவ்வன்பு என்னும் அரும்பண்பே மனித வாழ்கையின் அடித்தளமாக அமைகின்றது. இவ்வரிய அன்பு அற்றுப்போகுமேயானால் உயிர் வாழ்வு என்றும் உயரிய இன்ப ஊற்றும் அற்றுப் போகும். எனவே, தமிழ் நாடு செய்த தவப்பயனாய்த் தோன்றிய திருவள்ளுவரும்,

> **அன்பின் வழியது உயிர்நிலை; அஃதிலார்க்கு**
> **என்புதோல் போர்த்த உடம்பு**
>
> **(குறள் : 80)**

என்றார். இவ்வன்பின் அடிப்படையாகவே நட்புத் தோற்றம் கொள்ளுகின்றது. இதனையே திருவள்ளுவர்,

> **அன்பீனும் ஆர்வ முடைமை அதுவீனும்**
> **நண்பென்னும் நாடாச் சிறப்பு**
>
> **(குறள் : 74)**

என்று குறிப்பிட்டுப் போந்தார். இவ்வன்பிற்கு அடைக்குந் தாழும் இல்லையென மொழிந்தார். மெய்யன்பு கொண்டோரின் கண்ணீரே அவர்தம் அன்பைப் புலப்படுத்தி விடும்

என்றும் குறிப்பிட்டுள்ளார் (குறள் : 71). திருவள்ளுவர் நட்பு, நட்பாராய்தல், பழைமை, தீ நட்பு, கூடா நட்பு என ஐந்து அதிகாரங்களில் நட்பைப் பற்றி பேசுகிறார்.

இத்தகைய ஆராவன்பு பல திறத்ததாகும். தலைவன் தலைவியரிடையே முகிழ்ப்பது 'காதல்' என்றும், பெற்றோருக்கும் மக்களுக்கும் இடையே ஏற்படுவது 'பாசம்' என்றும், நண்பர் களிடையே மலர்வது 'நட்பு' என்றும், ஆண்டவன் மாட்டு அடியார் செலுத்துவது 'பக்தி' என்றும் பகரப்படும். சமுதாய வாழ்விற்கும் வளர்ச்சிக்கும் நட்பு எனும் நயத்தக்க பண்பு பெரிதும் வேண்டப்படுவதாகும்.

தங்கநிகர் சங்கத் தமிழர்களின் பங்கமிலாத் தங்க வாழ்வினை, அங்கை நெல்லிக் கனியெனச் சங்கையின்றி நுவல்வன சங்க இலங்கியங்களாகும். எட்டுத்தொகை என ஏற்றமுடன் இயம்பப்படும் நூல்களில் ஐந்து, அகப்பொருள் பற்றியன; மிகுதி மூன்றில் இரண்டே முற்றிலும் புறப்பொருள் பற்றி மொழிவனவாகும். அவ்விரண்டினுள்ளும் புறநானூறு என்னும் பொற்புடைய நூலே நட்பின் செய்தினையும் திறத்தினையும் நலமுற நவின்று நிற்கும் நூலெனலாம்.

அரிய நட்பிற்கு ஆன்ற இலக்கியமாக இன்றளவும் நின்று நிலவும் கோப்பெருஞ்சோழன்-பிசிராந்தையார் வாழ்வினை முதற்கண் நோக்குவோம்.

பிசிராந்தையார் பாண்டிய நாட்டில் பிசிர் என்னும் ஊரினர்; கோப்பெருஞ் சோழனோவெனில் உறந்தையைத் தலைநகராகக் கொண்டு சோழநாட்டைப் புரந்துவரும் கொற்றவன். இருவரும் ஒருவரை ஒருவர் நேரிற்காணாது, ஒருவர் பண்பை ஒருவர் கேள்வியுற்று, நட்புக் கொண்டவர்கள். அன்னச் சேவலைத் தூதுவிடும் போக்கில் சோழனுடைய பெரும் பண்புகளைப் பரக்கப் பேசும் பிசிராந்தை

யார்தம் நட்புத் தோய்ந்த கவிதை நெஞ்சின் திறத்தினைப் புறநானூறு நுவலா நிற்கும். அடுத்துப் பிறிதொரு பாடலில் பசிப்பிணிக்குப் பகைவனாகப் பாணர் சுற்றத்தின் புரவலனாக வாழும் அவன் கொடைமடம் கோடாநெஞ்சினை நெஞ்சார எடுத்து மொழியும் பிசிராந்தையார், அவன் நயத்தக்க நட்பின் திறத்தினையும் நயம்படக் கூறும் பாங்கு பாராட்டத்தக்கது. குற்றமற்ற நட்பினனாகப் பொத்தியார் என்னும் புலவரொடு நாடோறும் பேசி மகிழ்ந்து வருபவன் என்று கோப்பெருஞ் சோழன் பிசிராந்தையாரால் குறிக்கப்படுகின்றான்.

நட்புச் செல்வத்தை நன்கு மதிக்கும் கோப்பெருஞ் சோழன் ஒருஞான்று, தான் பெற்ற மக்களே தன்மேற் போர் செய்ய வந்த காலையில் அவரோடு உடற்ற மறக்களம் நோக்கிச் சென்றான். புல்லாற்றூர் எயிற்றியனார் எனும் புலவர் அறவுரை கூறி அம் மறச்செயலைத் தடுத்து நிறுத்தினார். போரில் வெற்றி பெற்றாலும் உன் காலத்திற்குப் பின் உன் அரசு மக்களையே சாரும் எனவும், ஒருகால் தோல்வியுறின் பிறர் பழிக்கு ஆளாவாய், எனவே போர் ஒழிக எனவும் புகன்று நின்றார். புலவர் பேச்சுக்கு மாறுபட நடவாத நல்லுளங் கொண்ட கோப்பெருஞ்சோழன் போரைத் தவிர்த்தான்; வடக்கிருக்கத் துணிந்தான். அக் காலத்தே ஏதேனும் ஒரு காரணம் பற்றி உயிர்விடத் துணிந்தவர் ஆற்றிடைக் குறைபோன்ற தூயதொரு தனியிடத்தை நண்ணி, உணவு முதலியவற்றைத் துறந்து, கடவுட் சிந்தையுடன் வடக்கு நோக்கியிருந்து உயிர் விடுவர். அம் முறையில் வடக்கிருக்க ஒருப்பட்ட கோப்பெருஞ்சோழன் தன்னைச் சுற்றியிருந்த புலவர்களை விளித்து, 'பாண்டிய நாட்டுப் பிசிராந்தையார் என் உயிரைத் தம் உயிராக எண்ணிப் பேணும் கலந்த நட்பினர்; யான் செல்வவளத்தில் செழித்த காலையில் அவர் என்னிடம் வாராமற் போனாலும், என் உயிர்ப்பறவை இதயக்கூட்டி லிருந்து பறக்கப்போகும் இன்னாமை நிறைந்த இந்த வேளையில் இங்கு வாராது நிற்க மாட்டார்; உறுதியாக வருவார்' என்று குறிப்பிட்டான்.

தென்னம் பொருப்பன் நன்னாட் டுள்ளும்
பிசிரோன் என்பவென் உயிரோம் புநனே,
செல்லற் காலை நிற்பினும்
அல்லற் காலை நில்லலன் மன்னே

(புறம். 215 : 6-9)

மேலும் அவன், 'கேள்வி அளவால்தானே அறிந்துள்ளீர்; ஒரு போதும் நேரே சந்தித்ததில்லையே; எனவே அவர் இங்கு வருவது எளிதன்று' என்று எண்ணுதீர்கள். அவன் என்றும் என்னை இகழாத இனிய பண்பினன்; உள்ளங்கலந்த நண்பன்; புகழ் கெட்டுவரும் பொய்ம்மை வாழ்வை வேண்டாதவன். அவன்தன் பெயரையே, 'சோழன்' எனக் கூறிக்கொள்ளும் அளவு என்பால் பேரன்பு செலுத்துபவன். ஆதலின் உறுதியாக இவண் வருவன்; ஓர் இடம் என் பக்கலில் அவனுக்கும் ஒழித்து வைப்பீராக' என மொழிந்தான்.

கேட்டல் மாத்திரை யல்லது யாவதும்
காண்டல் இல்லாது யாண்டுபல கழிய
அரிதே தோன்றல் அதற்பட ஒழுகலென்று
ஐயங்கொள் ளன்மின் ஆரறி வாளீர்
இகழ்விலன் இனியன் யாத்த நண்பினன்
புகழ்கெட வரூஉம் பொய்வேண் டலனே
தன்பெயர் கிளக்குங் காலை யென்பெயர்
பேதைச் சோழன் என்னுஞ் சிறந்த
காதற் கிழமையும் உடையன்; அதன்றலை
இன்னதோர் காலை நில்லலன்
இன்னே வருகுவன்; ஒழிக்க அவற் கிடமே!

(புறநானூறு : 216)

கோப்பெருஞ் சோழன் சொன்ன சொல் பழுதாகாமல் பிசிராந்தையாரும் அவண் வந்து சேர்ந்தார். இது கண்ட

பொத்தியார் என்னும் புலவர், 'பெருஞ் சிறப்புடன் வாழ்ந்த மன்னன் வடக்கிருக்கத் துணிந்தது பெரும் வியப்பைத் தருவ தாகும். அதனினும் வியப்பைத் தருவது புகழே மேன்மையாக வும், நட்பே பற்றுக்கோடாகவும் கருதினவராகப் பிசிராந்தையார் இங்கு வந்ததாகும்' என்று பாடிய பாடல் புறநானூற்றில் உள்ளது.

**நினைக்குங் காலை மருட்கை யுடைத்தே**
**எனைப் பெரும் சிறப்பி னோடு ஈங்கிது துணிதல்**
**அதனினும் மருட்கை யுடைத்தே பிறன்நாட்டுத்**
**தோற்றஞ் சான்ற சான்றோன் போற்றி**
**இசைமர பாக நட்புக் கந்தாக**
**இனையதோர் காலை ஈங்கு வருதல்**
**வருவன் என்ற கோனது அறிவும்**
**அதுபழு தின்றி வந்தவன் பெருமையும்**
**வியத்தொறும் வியத்தொறும் வியப்பிறந் தன்றே**

(புறநானூறு : 217 : 1—9)

**புணர்ச்சி பழகுதல் வேண்டா! உணர்ச்சிதான்**
**நட்பாங் கிழமை தரும்**

(குறள் : 275)

எனும் குறளுக்கு இலக்கியமாகத் திகழ்வது இவ்விருவர் நட்பாகும்.

அடுத்து, பொத்தியாரும் கோப்பெருஞ் சோழனுடன் உயிர் துறக்கத் துணிந்தார். கோப்பெருஞ்சோழன் அவரை, 'மகவு பிறந்த பின் உயிர் துறக்க ஒருப்படுக' எனக் கூறித் தடுத்துவிட்டான். கோப்பெருஞ் சோழன் இறந்துபட்டதைப் பொறுக்கலாற்றாத புலவர் உறையூர் மன்றத்தைக் கண்டு இரங்கிப் பாடிய பாடலும், சோழனது நடுகல்லைக் கண்டு

கல்லும் கரையப் பாடிய பாடலும் நம் நெஞ்சுருக்கும் பாடல்களாகும். சோழன் உயிர் கைக்கொண்ட இரக்கமற்ற கூற்றுவனைப் புலவர் சுற்றம் வைவதற்கு என்று திரள வேண்டும் என்று ஆற்ருமை அணை கடக்கப் பாடியவர், மகன் பிறந்த பின் சோழன் நடுகல்லை நண்ணித் தமக்கும் இடந் தருமாறு கேட்டார். நடுகல்லான பிறகும் நல்ல நட்பிற்கு இலக்கியமாக இலங்கும் கோப்பெருஞ் சோழன் இடம் கொடுத்தான்.

அடுத்து, ஔவையார்-அதியமான் நெடுமான் அஞ்சி நட்பின் திறம் போற்றத் தக்கது. நெடுநாள் உயிர் வாழவைக்கும் நெல்லிக்கனியை அரிதின் பெற்ற அதியமான், அதனைத் தன்னேடு நட்புக்கிழமை பூண்ட ஔவையாருக்கு வழங்கி அகமகிழ்ந்தான்.

ஔவையார் பாராட்டுப்படியே 'நீலமணி மிடற்று ஒருவன் போல' இன்றளவும், மாயும் உடல் மறைந்த நிலையிலும், மாயாப் புகழுடன் இலக்கியத்தின்கண் ஒளிவீசி நிற்கிருன். அவன் இறந்தபொழுது ஔவையார் பாடியுள்ள பாடலே அவன் நட்புச்செல்வத்தை நலமுற நவில்வதாகும். சிறிய அளவில் கள் கிடைத்தால் பிறர்க்கு வழங்கி, பெரிய அளவில் கள் கிடைத்தால் அதனைப் பலரோடு சேர்ந்து உண்பான் என்று குறிப்பிட்டுள்ளார். அவன் இறந்த பிறகு அவன் உடல் ஈமத் தீயில் அடுக்கப்பட்ட நிலையில், ஔவையார், 'அத் தீ அவன் உடலை அழிப்பினும், அவன் புகழை மாய்க்க ஒல்லாது' என்று பாடினர். அவன் நடுகல்லைப் பார்த்துப் பெரிதும் மனம் மாழ்கி, 'காலையும் மாலையும் இனி இல்லையாகுக; என் வாழ்நாளும், இனி இல்லாது ஒழிவதாகுக' என்று பாடினர்.

**இல்லா கியரோ காலை மாலை**
**அல்லா கியர்யான் வாழும் நாளே**

(புறநானூறு : 232 : 1-2.)

'பூத்தலை யறுஅப் புனைகொடி முல்லை, நாத்தழும் பேறப் பாடாவாயினும் கறங்குமணி நெடுந்தேர் கொள்கெனக் கொடுத்த பரந்தோங்கு சிறப்பிற் பாரிப்' பெருமகனோடு 'பொய்யா நாவிற் கபிலர்' கொண்ட கேண்மையினை நோக்குவோம்.

முந்நூறு ஊர்களையுடைய பறம்பு நாட்டின் கோமான் பாரி, முந்நூறு ஊர்களையும் பரிசிலர்க்கு வழங்கிவிட்டான். பாரியின் கொடைச் சிறப்பினை எண்ணி ஏக்கற்று அவன்மீது அழுக்காறு கொண்ட முடியுடை மூவேந்தரும், 'உழவர் உழாதன நான்கு பயன் உடைத்தான' பறம்பு மலையை முற்று கையிட்டுப் பாரியைச் சூழ்ச்சியால் வென்று, அவனைக் கொன்றனர். மாரியுடன் பாரியின் கொடையினை ஒப்பிட்டுப் பாடிய கபிலர், பாரி வள்ளலோடு தாமும் தம் உயிரை விடத் துணிந்தார். ஆயினும் அருமைத் தந்தையை இழந்து ஆறாத் துயரில் மூழ்கிக்கிடக்கும் பாரிமகளிர் அவர் நினைவில் நின்றனர். எனவே பாரி மகளிரை விச்சிக்கோ எனும் குறுநில மன்னிடம் கொண்டு சென்ற கபிலர் 'யானே பரிசிலன்; மன்னும் அந்தணன்' என்று தம்மை அறிமுகப் படுத்திக்கொண்டார். ஆயினும் அவர் வேண்டுகோள் மறுக்கப்பட்டது. அடுத்து இருங்கோவேள் எனும் வேளிர்குல வேந்தனை நண்ணினார். 'புலனழுக்கற்ற அந்தணாளனும்' கபிலர், இம் முறை அறிமுகத்திலே ஒரு மாற்றம் செய்தார்:

> **இவர்யார் என்குவை யாயின், இவரே**
> **ஊருடன் இரவலர்க் கருளித் தேருடன்**
> **முல்லைக் கீந்த செல்லா நல்லிசைப்**
> **படுமணி யானைப் பறம்பிற் கோமான்**
> **நெடுமாப் பாரி மகளிர் யானே**
> **தந்தை தோழன் இவர் என் மகளிர்**
> **அந்தணன் புலவன் கொண்டுவந் தனனே**
>
> (புறநானூறு : 201 : 1—7)

என்றார்.

'யானே தந்தை தோழன்' என்றதனுல் இவரது நட்பின் பெருமையும், 'இவர் என் மகளிர்' என்றதனுல் நண்பனின் மக்களைத் தம் மக்கள் என்று எண்ணும் உரிமையும் புலப்படுகின்றன.

இருங்கோவேளும் கபிலர் வேண்டுகோளைச் செவிசாய்த்து ஏற்றுக்கொள்ளாத நிலையில் பாரி மகளிரை அந்தணர்பால் ஒப்படைத்துவிட்டுச் சேரநாடு சென்று, சேர அரசச் செம்மல் செல்வக்கடுங்கோ வாழியாதனைப் பாடி நூருயிரங் காணம் பொன்னும் நன்ருவென்னும் குன்றேறி நின்று கண்ணிற்கண்ட நாடெல்லாமும் பெற்று, அப்பொருள் கொண்டு பாரிமகளிர்க்குத் திருமணத்தை நடத்தி முடித்துவிட்டுத் தம் ஆருயிர் நண்பனை நினைத்துப் பெண்ணையாற்றை யடைந்து, ஆற்றிடைக் குறையில் வடக்கு நோக்கியிருந்து உண்ணு நோன்பு மேற்கொண்டார். தாம் பாரியோடு கொண்ட இவ்வுலகத் தொடர்பு மறுவுலகிலும் மன்னுதல் பெறவேண்டும் என்று கசிந்து பாடி உயிர் விட்டார்.

> **இம்மை போலக் காட்டி, உம்மை**
> **இடையில் காட்டி நின்னேடு**
> **உடனுறை வாக்குக உயர்ந்த பாலே**

(புறநானூறு : 236 : 10—12)

'அறிவின்கண் அல்லல் உழப்பதாம் நட்பு' என்ற நிலைக்கு இதுகாறும் காட்டப்பெற்ற புகழ்பூத்த வாழ்வுகள் சான்றுகளாம்.

> **நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்**
> **மேற்சென்று இடித்தற் பொருட்டு**

(குறள் : 784)

என்றபடி 'நட்புச் செய்தல் ஒருவரோடொருவர் சிரித்து மகிழும் பொருட்டன்று; நண்பர் நெறி கடந்து செல்லும்

போது முற்பட்டுச் சென்று இடித்துரைப்பதற்காகும். இம்முறையில் வையாவிக்கோப் பெரும்பேகன், தன் அன்புத் துணைவி கண்ணகியை விட்டுப் பிரிந்து பரத்தமை யொழுக்கத்தில் ஈடுபட்டிருந்தபொழுது, கபிலர், பரணர், அரிசில் கிழார், பெருங்குன்றூர் கிழார் முதலியோர் அவனை இடித்துத் திருத்தினர் என்ற செய்தி புறநானூற்றால் தெரிய வருகிறது.

இறுதியாக, ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன் என்னும் மன்னன், 'சிங்கம் போலச் சீறிவரும் அடங்காத உள்ளமுடைய பகைவரை அவர் அழிய வென்று புறங்காண்பேன்; காணேனாயின், மாவனும், ஆந்தையும், அந்துவஞ்சாத்தனும், ஆதனழிசியும், இயக்கனும், இன்னும் பிறருமாகிய, என் கண்ணைப் போன்ற நண்பரின் புன்சிரிப்பை இழந்தவனாவேன்' என்று வஞ்சினம் கூறுமுகத்தான், நட்பிற்கு அவன் காட்டும் முதன்மையும் சிறப்பும் புலனாகக் காணலாம்.

**மடங்கலின் சினைஇ மடங்கா வுள்ளத்து**
**அடங்காத் தானை வேந்தர் உடங்கியைந்து**
**என்னொடு பொருதும் என்ப; அவரை**
**ஆரமர் அலறத் தாக்கித் தேரொடு**
**அவர்ப்புறம் காணேன் ஆயின்...........**
**கண்போல் நண்பிற் கேளிரொடு கலந்த**
**இன்களி மகிழ்நகை இழுக்கியான் ஒன்றோ......**
**வன்புலக் காவலின் மாறியான் பிறக்கே**

(புறநானூறு : *71 : 1—5; 15—16*)

என்ற கூற்றில் நட்புச் செல்வத்தை மதித்த நற்றிறத்தினை அறியலாம்.

இதுகாறும் கூறியவற்றால், தமிழர்தம் புறவாழ்வினைப் பரக்கப் பேசும் புறநானூற்றில் நட்பின் சிறப்பும் திறமும் நலமுறக் கிளத்தப்பட்டுள்ளன என்பதும், நல்ல நட்பு, நேரடி

யாகக் கண்டு பழகாத நிலையிலும் பரந்து வளர்வது என்பதும், நட்பு இந்த உலகில் மட்டுமின்றி மறுமை யுலகிலும் மன்னுதல் பெறும் என்பதும், நண்பன் தவறு செய்யும்பொழுது இடித்துத் திருத்துதல் மற்றவொரு நண்பனின் கடமை என்பதும், பழந் தமிழர் நட்புச் செல்வத்தைச் சிறப்பாகக் கருதினர் என்பதும் நன்கு போதரும்.

# 8. பண்டைத் தமிழ்க் கல்வி

சங்க இலக்கியங்கள் பழங்காலச் சமுதாயத்தை மீட்டுருவாக்கிக் காட்டும் கலைப்பேழையாக விளங்குவதோடு, கல்வி பற்றிய உண்மைகளை உணர்த்தும் கருவூலமாகவும் திகழ்கின்றன.

கிரேக்க நாட்டு மக்களின் கல்வி முறையோடு ஒப்பு நோக்கும் அளவிற்கு நம்முடைய அமைப்பு முறை சீரியதாக இருந்தது.

புலி சேர்ந்து போகிய கல்லளை போல
ஈன்ற வயிறோ இதுவே
தோன்றுவன் மாதோ போர்க்களத் தானே

*(புறம்: 86: 5—7)*

ஒளிறுவாள் அருஞ்சம முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே

*(புறம்: 312: 5—6)*

போன்ற புறநானூற்றுப் பாடற்பகுதிகளை நோக்குமிடத்து வீரவுணர்விற்கே பண்டைத் தமிழர்கள் முதலிடம் நல்கினர் என்பது பெறப்படும். கற்க வேண்டிய நூல்களைக் கற்று, ஒழுக்கமும் வீரமும் கொண்ட உயர் பேராளரைச் சான்றோர் என்றே புலவர்கள் குறித்தனர்.

நோன்புரி தடக்கைச் சான்றோர்

*(பதிற்றுப்பத்து : 2 12)*

தேர்தர வந்த சான்றோர் எல்லாம்
தோல்கண் மறைப்ப ஒருங்குமாய்ந் தனரே

*(புறம். 63: 5-6)*

என்ற இலக்கிய வரிகளை உற்று நோக்கும்பொழுது வீரர்கள் எந்த அளவிற்குப் பெரிதாகப் போற்றப்பட்டனர் என்பது போதரும். மலைபடுகடாம் ஆசிரியர் இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனுர் வீரர்களை வேல்நிழற் புலவர்கள் என்று குறிக்கின்ற நயம் சிந்தித்தற்குரியது.

புரைத்தோல் வரைப்பின் வேல்நிழற் புலவோர்க்குக்
கொடைக்கடன் இறுத்த அவன் தொல்லோர் வரவு
(மலைபடுகடாம் : 88 —90)

பழந்தமிழர்கள் வீரத்திற்குச் சிறப்பிடம் நல்கினர். ஆனல் கிரேக்க நாட்டு 'ச்பார்ட்டா' வினரைப் போல வாழ்க்கையின் பிற நலன்களையெல்லாம் துறக்கச் செய்து கடுமையான வாழ்வினை மேற்கொள்ளும்படி ஒருபோழ்தும் செய்யவில்லை. இது தமிழர்களுக்குரிய தனிப்பெருஞ் சிறப்பு. மற்றுமொரு தனித்தன்மையும் தமிழகத்திற்கு உண்டு. கிரேக்க நாட்டில் இருந்ததைப்போல அடிமைகளைத் தமிழகத்தில் காண முடியாது. பெண்கல்வி பழந்தமிழகத்தின் தனிப் பெருஞ் சாதனையென்றே குறிக்கலாம்.

உயர்திணை யென்மனுர் மக்கட் சுட்டே
அஃறிணை யென்மனுர் அவரல பிறவே
(தொல்: சொல்: கிளவி. 1)

என்ற தொல்காப்பிய நூற்பாவிற்கு உரை வகுக்கும் போழ்து பெரியோர், 'உயிரோடு வாழும் ஆடவரும் மகளிரும் மக்கள் என்ற உயர்திணைச் சொல்லுக்குரியவர்' என்று உரையெழுதிச் சென்றனர். பின் பொருளதிகாரத்தில் தொல்காப்பியர்,

செறிவும் நிறையுஞ் செம்மையுஞ் செப்பும்
அறிவும் அருமையும் பெண்பா லான
(தொல்: பொருள்: பொருளி: 15)

என்று நூற்பா வகுத்தார். இத்தகைய அறிவினை முறையான கல்வி வழியே பெற்றனர். அறிவுத்திறத்தினால் ஔவையார், அதியனுக்காகக் கத்தியின்றி ரத்தமின்றி ஒரு பெறுதற்கரிய வெற்றியினை வாங்கித்தந்துள்ளார் (சான்று புறம் 95). வெள்ளி வீதியார், காக்கை பாடினியார், நச்செள்ளையார் போன்ற பெண்பாற் புலவர்களின் மதிநுட்பமும் நூலாக்கமும் போற்று தற்குரியன. இப் பெண்பாற் புலவர்களைப் போன்ற மனநிலை யுற்றுத் தலைவி கூற்றாகவும், செவிலி கூற்றாகவும் ஆண்பாற் புலவர்கள் பாடிய பாடல்கள் கணக்கிறந்தன. பெண்மை நலமும், பெண் கல்வியும் தமிழகத்தில் பெருமையாகக் கருதப் பட்டன. உலகத்தின் தலைசிறந்த சிந்தனையாளரான சாக்ரடீஸ் கூடப் பெண்ணிற்குச் சமஉரிமையும் கல்வியும் அளிப்பதை வெறுத்திருக்கின்றார். அதற்கு அவருடைய நாட்டு வரலாற்றுச் சூழலும், பண்பாட்டுப் பின்னணியுமே காரணங்களாக இருக் கின்றது.

**ஆன்றவிந் தடங்கிய கொள்கைச்**
**சான்றோர் பலர்யான் வாழு மூரே**

*(புறம் : 191 : 6—7)*

என்ற வரிகளில் பொதிந்து கிடக்கும் கருத்தாழம் உற்று நோக்கற்குரியது.

'கல்வியால் நிறைந்து அதற்கேற்பச் சுவை முதலியவற்றிற் செல்லும் அறிவவிந்து மனமொழி மெய்களான் அடங்கிய சான்றோர்' என்று பழைய உரையாசிரியர் தரும் விளக்கம் கருதுதற்குரியது. வெறும் செய்திகளின் தொகுப்புக் கல்வி யாகாது. உண்மைகளை ஆராய்ந்து அழகு, இளமை, செல்வம் ஆகியவற்றைப் பொது நலனுக்காகச் செலவிட்டுக் குறிக் கோள் வாழ்க்கை வாழ்பவர்கள் பலர் இருப்பதால்தான் நரை, திரை, மூப்பு ஆகியன தோன்றற்கு இடமில்லையென்கிறார் புலவர். அறவிலை வணிகராக இயங்கும் தன்மையை

அறிவுடையோர் பெறுவது இல்லை. அத்தகையோரைச் சமுதாயம் குறைவாகவே மதித்திருக்கின்றது.

நூல்களை நேராகத் தாமே பயில்வதைவிடப் பிறர்கூறக் கேட்டு தம் நுண்ணறிவினைப் பெருக்கிக் கொள்வதனைத்தான் சிறந்த முறையாகக் கொண்டனர் பழந்தமிழர்.

பல்கேள்வித் துறைபோகிய தொல்லாணை நல்லாசிரியர்
*(பட்டினப்பாலை : 169-170)*

சில் செவித்தாகிய கேள்வி
*(புறம் : 68 : 3)*

ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
*(புறம் : 72 : 13)*

வெறுத்த கேள்வி விளங்குபுகழ்க் கபிலன்
*(புறம் : 53 : 12)*

சில சொல்லாற் பல கேள்வியர்
*(புறம் : 360 : 2)*

போன்ற மேற்கோள்வரிகளை ஆழ்ந்து பயிலும்போது பிறர் கூறக்கேட்டு அறிவினைப் பெருக்கிக் கொள்ளும் முறை பரவலாக இருந்தது என்பது கண்கூடு. கல்வி நிலையங்கள் எவ்வெவ்வூர்களில் இருந்தன என்ற குறிப்புக்கள் இல்லாது போனாலும் மாணவ, ஆசிரியர் நேரடித் தொடர்பு இருந்தது என்பதும், முழுநேர அமைப்பினைப் பெற்றிருந்தது என்பதும் அறியக் கிடக்கின்றது. கற்க வேண்டிய முறை பற்றி நம் நல்லூழின் காரணமாக ஒரு பாடல் கிடைத்துள்ளது.

உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே
*(புறம் : 188 : 1-2)*

எனத் தொடங்குகிறது அப் பாடல். இவ் வரிகளிலிருந்து தந்தை—மகன் உறவு ஆசிரிய மாணவரிடையே விளங்கியமை போதரும். ஆட்சிப் பொறுப்பினை ஏற்று நடத்தும் அரசர் குடியில் பிறந்தாலும் வழிபாட்டு முறையிலிருந்து மாறுபடாமல் கற்க வேண்டும் என்ற குறிப்பினையும் இப் பாடல் நல்குவதால் மேலைநாட்டு அறிஞர்களாகிய தந்தை பெஸ்ட்டலாஸி (Father Pestalozzi), ஃபரோபெல் (Froebel), ஜான் லாக்கே (John Locke) ஆகியோர்தம் கூற்றுகளுக்கு முன்னோடியாக விளங்கினர் பழந்தமிழர் என்ற உண்மை அங்கை நெல்லிக்கனி போல் விளங்கும். 'பிற்றை நிலை' என்பதன் விரிவுதான் தற்காலத்திய கற்பிக்கும் முறைகளாம் (Educational Methods). சாதி சமய வேறுபாடுகளைக் களைய உதவும் கருவி கல்விதான் என்பதனையும் இப் பாடல் மூலமே அறிகின்றோம்.

> வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்
> கீழ்ப்பா லொருவன் கற்பின்
> மேற்பா லொருவனு மவன்கட் படுமே
>
> (புறம் : 183 : 8—10)

என்ன அரிய வெளிப்பாடு! சமுதாயத்திலுள்ள குறைகளைக் களையக் கல்விதான் உறுதுணை புரியவேண்டும் என்று கல்விச் சமூகவியல் அறிஞர்களாகிய 'எமில் டர்க்கீம்' (Emile Durkheim), ஜார்ஜ்பெயின் (George Peiyne), 'ஜான் த்யூவி' (John Dewey) போன்ற தற்கால அறிஞர்கள் வலியுறுத்தியுள்ளனர். அந்தக் கண்ணோட்டத்தில் நோக்கினால் ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன் தான் தமிழகத்தின் முதல் கல்விச் சமூகவியல் வல்லுநர் (The first Educational Sociologist).

ஆயின் கல்வி பொதுவுடைமையாக்கப்பட்ட ஒன்று என்று கூறவியலாது. அவரவர் தம் தொழிலுக்குத் தேவையான கல்வியினைத்தான் பெற்றிருந்தனர் என்று கருதத் தோன்றுகின்றது.

> கல்லா இளைஞர் சொல்லிக் காட்ட
>
> (பொருநராற்றுப்படை : 100)

கல்லா இளைஞர் கவளம் கைப்ப
(முல்லைப்பாட்டு : 36)

கல்லா மாந்தர் (மதுரைக் காஞ்சி : 420)

கல்லாக் காட்சி (புறம் : 170-3)

கல்லா ஒருவற்கும் (புறம் : 189-4)

போன்ற அரிய தொடர்களை நோக்கும்பொழுது 'கல்லா' என்ற சொல்லிற்குத் தம்முடைய தொழிலுக்குரிய கல்வியினைத் தவிர வேறு ஒன்றனையும் கல்லாத என்ற பொருளையும் உரையாசிரியர்கள் நல்குவதால் தொழிலின் அடிப்படையில் தான் அக் காலக் கல்விமுறை இருந்தது (Education based on Vocation) என்று நினைக்கத் தோன்றுகின்றது. சிற்சில இடங்களில் 'கல்லா' வென்பதனைச் செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சமாக்கிக் 'கற்ற' எனும் பொருள் படுமாறும் எழுதிச் சென்றமை சிந்தித்தற்குரியது.

சிறப்பில் சிதடும் உறுப்பில் பிண்டமும்
கூனுங் குறளும் ஊமும் செவிடும்
மாவு மருளும் உளப்பட வாழ்நர்க்
கெண்பே ரெச்சம் என்றிவை யெல்லாம்
பேதைமை யல்ல தூதிய மில்லென
முன்னும் அறிந்தோர் கூறினர்
(புறம் : 28 : 1-6)

என்ற பாடற்பகுதி கல்வியறிவு பெற முடியாத மக்களின் பட்டியலைத் தருகின்றது. இத்தகையோரை இன்றைய கல்வி யாளர்கள் மெதுவாகக் கற்போர் (Slow learners) என்ற வகையில் சேர்க்கின்றனர். அக் காலத்தில் வாய்ப்பும் சூழலும் குறைவாக இருந்தமையால் மேற்குறித்தவர்களைத் தகுதியற்றவர் எனக் கருதினர் போலும்! உலகின் பல்வேறு பகுதிகளில் அக்காலத்திருந்த மூடநம்பிக்கைகளை ஒப்பு நோக்க இத்தகைய கருத்து ஒன்றும் நகைத்தற்குரியதன்று.

பண்டைக்கால மக்கள் உயரிய நீதிக்கருத்துகளைப் பெரிதும் வலியுறுத்தியிருக்கின்றனர். மதுரைக் காஞ்சியில் மாங்குடி மருதனார் பாண்டியன் நெடுஞ்செழியனை நோக்கிப் 'பெற்ற வெற்றி சாலும்! அறம்பல செய்க; அதுவே உற்ற துணை!' எனப் பாடுகின்றார்.

நான்குடன் மாண் டதாயினு மாண்ட
அறநெறி முதற்றே அரசின் கொற்றம்

(புறம் : 55 : 9-10)

என்று பாண்டியன், இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன் மாறனை, மதுரை மருதனிள நாகனார் பாடுவதும் இவ் விடத்து உற்று நோக்கற்குரியது.

செல்வத்துப் பயனே ஈதல்
துய்ப்பே மெனினே தப்புந பலவே

(புறம் : 189 : 7-8)

என்று நக்கீரர் பாடியதைத் தற்காலக் கல்வியாளர்கள் பார்வையில் ஆராய்ந்தால் பல நுண்ணிய உண்மைகள் புலப்படும். செல்வம் என்பதனைப் பொருட்செல்வம் என்று மட்டும் கொள்ளாமல் (not alone material wealth) கல்வி, அன்பு, அருள், விளைவு, ஒப்பரவு ஆகியவற்றையும் செல்வம் என்று பொருள் கொள்வோமானால், 'எல்லார்க்கும் எல்லாம்' என்ற கோட்பாடு மிகப் பழங்காலத்தில் விளங்கியது எனக் கருதுவதில் தவறில்லை. தன்னலம் மட்டும் பேணுவதை இப் பெருமகனார் சாடுவதைப் போலப் பிறர் இவ்வளவு கடுமையாகச் சாடியதில்லை. இவ்வகையில் மேலை நாட்டறிஞர் 'வைகவுண்ட் சாமுவேல்' (Viscount Samuel) அவர்களின் முன்னோடியாகத் திகழ்கிறார் நக்கீரர் என்றால் அது 'உயர்வு நவிற்சி' யாகாது.

சிறப்புடை மரபிற் பொருளும் இன்பமும்
அறத்துவழிப் படூஉம்

(புறம் : 31 : 1-12)

என்று கோவூர்கிழாரும் கூறியமை சிந்தித்தற்குரியது. எனவே உயரிய அறக்கோட்பாடு எல்லாத்தரத்தவர்களுக்கும் உணர்த்தப்பட்டது என்பது வெளிப்படை.

**உண்டாலம்ம விவ்வுலகம்**

*(புறம் : 182)*

**யான் வாழு நாளும் பண்ணன் வாழிய**

*(புறம் : 173)*

போன்ற பாடல்கள் பொது நலத்தின் மேம்பாட்டினைச் சிறப்புறப் பாடுகின்றன.

கல்வியிற் பெரியோர் மக்களாலும் வேந்தர்களாலும் பெரிதும் மதிக்கப்பட்டனர். எந்த அளவிற்குக் கெழுதகைமை பூண்டவர்களாயினும் மதிப்பிற்கும் மரியாதைக்கும் பெருமிதத்திற்கும் குறைவு நேர்ந்தால் தங்கள் கல்விச் செருக்கால் மற்றவர்களைப் பொருட்படுத்தாத மனப்போக்கினைப் பெரியவர்கள் பெற்றிருந்தனர்.

**எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே**

*(புறம் : 206 : 13)*

**பெரிதே யுலகம் பேணுநர் பலரே**

*(புறம் ; 207 : 7)*

என்று ஔவையாரும் பெருஞ்சித்திரனாரும் முறையே அதியமான் நெடுமானஞ்சியையும் இளவெளிமானையும் நோக்கிக் கூறியமை கருதற்குரியது. தொல்காப்பியரும்,

**கல்வி தறுகண் இசைமை கொடையெனச்**
**சொல்லப் பட்ட பெருமிதம் நான்கே**

*(தொல். பொருள். மெய்ப்: 9)*

என்று கூறிப் போந்தார். இத்தகைய பெருமிதத்தைத் தற்காலத்தில் கற்ற பலரிடம் காண இயலவில்லை. அதற்குக் காரணம் வயிறு வளர்ப்பதற்குரிய கல்வியில் மட்டும் நாட்டம் செலுத்துவதுதான். தன்னம்பிக்கைதனை வளர்க்காத மேலை நாட்டுக் கல்வி முறையைப் பின்பற்றுவதுதான் காரணம்.

முற்காலத்தில் கல்வியிற் பெரிய கழாத்தலையார் என்ற புலவரை ஒரு வேந்தன் இகழ்ந்தான் என்பதற்காகவே அவன் அறம்பாடிச் சபிக்கப்பட்டான். மோசிகீரனார் அரசுகட்டிலில் உறங்கியமையைக் குற்றமாகக் கருதாமல் தகடூரெறிந்த பெருஞ்சேரலிரும்பொறை சாமரை வீசினான். கோவூர்கிழாரும்,

> மண்ணாள் செல்வம் எய்திய
> நும்மோ ரன்ன செம்மலும் உடைத்தே
>
> (புறம் : 47 : 10—11)

என்று நெடுங்கிள்ளியை நோக்கிப் பாடினார். இத்தகைய அஞ்சாமையை அன்றைய கல்வி நல்கியது. அத்தகு அஞ்சாமை இன்று எங்கே சென்றது? தன்னலம் பேருருவங் கொண்டமை யால் அஞ்சாமை கற்ற பேரறிஞர்களிடம் விடைபெற்றுக் கொள்கிறது. இவ்வஞ்சாமை குன்றியமைக்குக் காரணம் பிறமொழி மோகமும் தாழ்வு மனப்பான்மையும் ஆகும். பழங் காலத்தில் வாழ்நாள் முழுமையும் தமிழையும் அதிலுள்ள இலக்கண இலக்கியங்களையும் கற்றுத் தேர்ச்சி பெற வேண்டும் என்ற வேணவா பெரியோரிடம் இருந்தது. எத்தகைய சிறப்புச் செய்தபோழ்தும் தம்மை வியவாமலிருத்தலை மேற்கொண்டிருந் தனர்.

> அறியா தேறிய வென்னைத் தெறுவர
> இருபாற் படுக்குநின் வாள்வா யொழித்ததை
> அதூஉஞ் சாலுநற் றமிழ்முழு தறிதல்
>
> (புறம் : 50 : 8—10)

என்றார் மோசிகீரனார்.

'அறியா தேறிய வென்னை' என்ற வரியின் பொருளை யுணரலாமேயன்றி உணர்த்த முடியாது. பெருமை தமிழுக்கே என்றார். அத்தகைய மனநிலையை நம்மனோர் அடைவதெக் காலம்? இன்னும் மகிழ்ச்சிக்கு வாய்ப்பு உண்டா? (Is Happiness still possible) என்ற நூலில் அறிஞர் பெர்ட்ரண்டு ரஸ்ஸல் அவர்கள் தன்னடக்கம் இன்மையும், தருக்கித்

திரிதலும், பிறரை அவமதித்தலும், பண்பு நலனின்மையும், கல்வியில் ஆழமின்மையும், சிந்தனைத் தேக்கமுமே மன அமைதி யின்மைக்குக் காரணங்கள் என்கிறார். நம்முடைய கண்களை இத்தகைய புகைப்படலங்கள் மறைக்கும் பொழுது நான் மகிழ்வது எங்ஙனம்?

அண்டர் மகன் குறுவழுதியென்பார் கல்வியினை, 'வல்லாண் சிறாஅன்' என்கிறார் (புறம் : 346). அறிவே வல்லமை (Knowledge is power) என்ற கருத்தில்தான் அப் பெருமகனார் அப்படிப்பாடியிருக்கின்றார். வாளால் பெறுகின்ற வெற்றியைக் காட்டிலும் அறிவினால் பெறப்படும் வெற்றியே வாகை என்று பொருள்படும்படி தொல்காப்பியனாரும் நூற்பா வகுத்துள்ளார்.

எண்ணற்ற புலவர்கள் பல்வேறு அடைமொழிகள் கொடுக்கப்பட்டுச் சிறப்பிக்கப்படுகின்றனர். ஆயின் அடை நெடுங்கல்வியார் என்ற புலவர் கற்ற கல்வியினால் சிறப்புப் பெற்ற புலவராகத் திகழ்கின்றார். தற்காலத்தில் டாக்டர் பட்டம் பெறுகின்ற பெருமக்களைப் பேரறிஞர்கள் என்று போற்றுகிறோம். இத்தகையோரைத் தமிழில், 'அடைநெடுங் கல்வியார்' என்று சிறப்புப் பட்டம் நல்கிப் பெருமைப்படுத் தலாமே!

'யாதும் ஊரே யாவருங் கேளிர்" என்ற விழுமிய தத்துவத்தை நல்கியது நம் பழங்காலக் கல்வி. எதிலும் நாட்ட மில்லாமல் இயந்திரமாக மாற்றுகின்றது இக்காலக் கல்வி. சமுதாயத்திற்கும், வாழ்க்கைக்கும் ஏற்ற கல்வியாக இருந்தது பழங்காலத் தமிழ்க்கல்வி. அதிலுள்ள சீரிய கருத்துகளை எடுத்துக்கொண்டு புதியதோர் உலகம் செய்வோம்.

# 9. திருக்குறள்-ஓர் அறிவுக் களஞ்சியம்

தமிழ்நாடு செய்தவப் பயனுய்த் தோன்றியவர் திருவள்ளுவர். அவர் இயற்றியருளிய திருக்குறள் சாதிகளைக் கடந்து, சமயங்களைக் கடந்து, இனங்களைக் கடந்து, நிறங்களைக் கடந்து, இடங்களைக் கடந்து, காலங்களைக் கடந்து வாழும் கவின்மிகு நூலாகத் திகழ்கின்றது. திருவள்ளுவர் தம் கூர்த்த மதியாலும், தெளிந்த வாழ்க்கை அனுபவத்தாலும் நுண்ணிதிற் கண்டு தமிழில் குறள் வெண்பா யாப்பில் வடித்த திருக்குறள் எல்லாக் காலத்திற்கும் இயைந்ததொரு நூலாய்த் திகழ்கின்றது. உலகப் பொதுமை அறங்களை உணர்த்தும் ஒப்பற்ற பெருநூலாய் இன்றளவும் இந் நூல் துலங்குகின்ற காரணத்தால் இந்நூலெழுந்த தமிழ்நாட்டைப் புகழும் நிலையில் சுப்பிரமணிய பாரதியார்,

> **வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து**
> **வான்புகழ் கொண்ட தமிழ்நாடு**

என்று பாராட்டினார். வள்ளுவர் வற்புறுத்தும் அறம் பொருள் இன்பம் முதலாய கருத்துக்கள் மனித சமுதாயம் அனைத்தும் அறிந்து உணர்ந்து தெளிந்து பின்பற்றத்தக்க பேருண்மைகள் என்பது இப் பாராட்டின் வழிப் புலனாகக் காணலாம்.

தமிழ் இலக்கியச் சோலையில் பூத்துக் குலுங்கும் வண்ணமலர்கள் மிகப் பல. ஒவ்வொருவர்க்கு ஒவ்வொரு நூல் பிடித்தமான நூலாய் இருக்கும். ஒவ்வொருவர் தம்

வாழ்விற்கும் மனநிலைக்கும் ஏற்ப ஒவ்வொரு நூலினை உயரிய நூலாகக் குறிப்பிடுவர். பிற்கால ஔவையார் தமிழில் எழுந்த தலைசிறந்த நூல்கள் இவை என்று ஒரு பட்டியல் தருகின்றார். அப் பட்டியலில் ஏழு நூல்களின் பெயர்கள் உள்ளன. அவ்வேழு நூல்களில். திருக்குறள் முதலிடம் பெறு கின்றது. ஔவையாரின் அப் பாட்டு வருமாறு:

**தேவர் குறளும் திருநான் மறை முடிவும்**
**மூவர் தமிழும் முனிமொழியும்—கோவை**
**திருவா சகமும் திருமூலர் சொல்லும்**
**ஒருவா சகமென் றுணர்.**

சைவ சித்தாந்த சாத்திரங்களில் வல்ல உமாபதி சிவா சாரியார் என்பவர் 'தண்டமிழில் மேலாந்தரமாக' எழுந்துள்ள சில நூல்களை ஒரு பாடலில் தொகுத்துக் கூறியுள்ளார். அப் பாடல் வருமாறு :

**வள்ளுவர்சீர் அன்பர்மொழி வாசகம்தொல் காப்பியமே**
**தெள்ளுபரி மேலழகர் செய்தவுரை ஓள்ளியசீர்த்**
**தொண்டர் புராணம் தொகுசித்தி ஓராறும்**
**தண்டமிழின் மேலாந் தரம்.**

இப் பாடலிலும் திருக்குறள் முதலில் வைத்து எண்ணப் பட்டிருக்கக் காணலாம்.

திருவள்ளுவ மாலையில் பாரதம் பாடிய பெருந்தேவனார் பாடல் ஒன்று காணப்படுகிறது. இப் பாடலில் திருக்குறளுக்கு ஈடாக வடமொழியிலுள்ள பாரதம், இராமாயணம், மனு ஸ்மிருதி, வேதம் என்னும் நான்கையும் உரைப்பர். ஆகவே எல்லாவற்றையும் ஒருசேர வைத்து எண்ணினால் ஐந்து நூல் களாகும். இவ்வாறு ஐந்து தலையான நூல்களில் ஒன்றாக விளங்குவது திருக்குறள் என்று செப்புகிறது கீழ்க்காணும் அவர் பாட்டு :

எப்பொருளும் யாரும் இயல்பின் அறிவுறச்
செப்பிய வள்ளுவர் தாம் செப்பவரு—முப்பாற்குப்
பாரதஞ்சீ ராம கதைமனுப் பண்டைமறை
நேர்வ னமற் றில்லை நிகர்.

அறிஞர் பெருமக்கள் இவ்வாறே தொடர்ந்து காலந் தோறும் திருக்குறளுக்குப் பாராட்டுரை பகர்வாராயினர். அவ்வளவு ஏன்? சாதாரண நாட்டுப்புற மக்களின் நாவில் கூட,

ஆலும் வேலும் பல்லுக் குறுதி
நாலும் இரண்டும் சொல்லுக் குறுதி

என்ற பழமொழி வழங்குகிறது. 'பழகுதமிழ்ச் சொல்லருமை நாலிரண்டில்' என்ற பழமொழியும் திருக்குறளுக்கு ஏற்றந்தரு கின்றது.

திருக்குறளுக்கு உத்தரவேதம், எழுதுண்ட மறை, தமிழ் மறை, திருவள்ளுவர், திருவள்ளுவப் பயன், தெய்வ நூல், பழமொழி, பால்முறை, பொதுமறை, பொய்யா மொழி, பொருளுரை, முதுமொழி முதலான பல பெயர்கள் வழங்கு கின்றன.

பொய்யில் புலவன் பொருளுரை தேறாய்

என்ற மணிமேகலைத் தொடரால் திருவள்ளுவர் பொய்யுரை யாத புலவராகவும், 'பொருளுரை' என்பது திருக்குறளாகவும் குறிக்கப் பெற்றிருப்பது கொண்டு, பௌத்த சமயப் புலவரும் பாராட்டும் அறிவுத்திறம் வாய்ந்தவராகத் திருவள்ளுவர் துலங்கிய திறங்கண்டு தெளியலாம். மேலும், சாமிநாத தேசிகர் என்ற சான்றோர், திருவள்ளுவர்தம் நூலினைத் திருவள்ளுவர் என்றே குறிப்பதோடு,

பல்காற் பழகினும் தெரியா உளவேல்
தொல்காப் பியந்திரு வள்ளுவர் கோவையார்
மூன்றினும் முழங்கும்

என்ற பாட்டால் அறிவுத் தெளிவை ஆன்றோர்க்கு வழங்கக் கூடிய நூல்களாக அவர் தொல்காப்பியம், திருக்குறள், திருக் கோவையார் ஆகிய மூன்று நூல்களையும் கொண்டார் என்பது நன்கு விளக்கமுறுகின்றது. காலங்கடந்தும் அறிவுச் சுடரொளி பரப்பும் அருமை வாய்ந்த அறிவு நூல் திருக்குறள் என்பது திருவள்ளுவ மாலையில் இறையனார் பாடியதாக அமைந்துள்ள பாடலின் பொருளாகத் துலங்கக் காணலாம். அப் பாடல் வருமாறு:

என்றும் புணராது யாணர்நாட் செல்லுகினும்
நின்றலர்ந்து தேன்பிலிற்றும் நீர்மையதாய்—குன்றாத
செந்தளிர்க் கற்பகத்தின் தெய்வத் திருமலர் போன்ம்
மன்புலவன் வள்ளுவன்வாய்ச் சொல்.

இனி, திருக்குறள் அறிவுப் பெட்டகமாகக் கிளரொளி பரப்புவதனைக் காண்போம்.

திருவள்ளுவரின் முதற்குறளையும் முடிவுக் குறளையும் ஒரு சேரக் காண்போம்.

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.

ஊடுதல் காமத்திற் கின்பம் அதற்கின்பம்
கூடி முயங்கப் பெறின்.

மேற்போக்காக நோக்குமிடத்துத் தமிழ் நெடுங்கணக்கில் 'அ'கரம் முதலாவதெழுத்து, னகரவொற்று(ன்) முடிவான எழுத்தாகும். முதற்குறளில் முதலெழுத்து தமிழ் எழுத்து முறையில் முதலெழுத்தினையும், இறுதி எழுத்து எழுத்து முறையின் இறுதி எழுத்தினையும் கொண்டிருப்பது திருவள்ளுவர் தமிழெனும் கடலையே அளந்திருப்பதாகத் தோன்றுகிறது.

எழுத்துகள் அகரத்தை முதலாக உடையன; அதுபோன்றே
உலகம் இறைவனை முதலாக உடையது.
காமத்திற் கின்பம் ஊடுதல்; அவ்வூடுதலுக்குப் பின்
கூடி முயங்கினால் பேரின்பம்

என்று வாழ்க்கைத் தெளிவினை வகைப்படுத்திக் காட்டினார்.

'கடவுள் வாழ்த்து' என்னும் அதிகாரத்தினை அவர் நூலின் முகப்பாக வைத்திருப்பதே அவர்தம் அறிவுடைமைக்குச் சான்றாக விளங்குகின்றது.

இரண்டாவது குறள், கற்றல் என்பதே இறைவழி நிற்றலுக்கே என அழுத்தந்திருத்தமாகக் குறிப்பிடுகின்றது.

கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்.

'கல்வி' அதிகாரத்தின் முதற்குறள் கற்கவேண்டியதன் அவசியத்தினையும், கற்றவழி நிற்க வேண்டிய நீர்மையினையும் பேசுகின்றது.

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.

மேலும் கற்று அறிவு பெறவேண்டியதன் இன்றியமையாமையினை,

எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு.

கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்.

என்னும் இரு குறள்களில் குறிப்பிடுகின்றார்,

'எண் என்று சொல்லப்படுவன, எழுத்து என்று சொல்லப்படுவன ஆகிய இருவகைக் கலைகளையும் வாழும் மக்களுக்குக் கண்கள் என்று கூறுவர்.'

'கண்ணுடையவர் என்று உயர்வாகக் கூறப்படு கின்றவர் கற்றவரே; கல்லாதவர் முகத்தில் இரண்டு புண் உடையவர் ஆவர்.'

இவ்வாறு கற்றலின் சிறப்பினை விளங்கக் கூறியவர் யார்?

மேலும், கல்வி அறிவுப் பெருக்கத்திற்குத் துணை கோலுவதனைப் பின் வருமாறு கூறுவர்:

**தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்**
**கற்றனைத் தூறும் அறிவு.**

'மணலில் உள்ள கிணற்றில் தோண்டிய அளவிற்கு நீர் ஊறும்; அதுபோல், மக்களுக்குக் கற்ற கல்வியின் அளவிற்கு அறிவு ஊறும்.'

என்று குறிப்பிட்டிருப்பதனை நோக்கினால், அவர்தம் பேரறிவு புலப்படும்.

கற்றவர்தம் சிறப்புகளாகக் கீழ்வருவனவற்றைக் குறிக்கிறார்.

'கற்றவனுக்குத் தன் நாடும் ஊரும் போலவே வேறு எதுவாயினும் நாடாகும்; ஊராகும்; ஆகையால் ஒருவன் சாகும் வரையில் கல்லாமல் காலங்கழிப்பது ஏன்?'

'ஒரு பிறப்பில் தான் கற்ற கல்வியானது அப்பிறப்பிற்கு மட்டும் அல்லாமல் ஒருவனுக்கு ஏழு பிறப்பிலும் உதவும் தன்மை உடையதாகும்.'

'தாம் இன்புறுவதற்குக் காரணமான கல்வியால் உலகமும் இன்புறுவதைக் கண்டு, கற்றறிந்த அறிஞர் மேன்மேலும் அக் கல்வியையே விரும்புவர்.'

'ஒருவனுக்கு அழிவு இல்லாத சிறந்த செல்வம் கல்வியே ஆகும்; கல்வி தவிர மற்றப்பொருள்கள் அத்தகு தன்மை வாய்ந்த சிறப்புடைய செல்வங்கள் அல்ல.'

**யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்**
**சாந்துணையுங் கல்லாத வாறு.**

**ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு**
**எழுமையும் ஏமாப் புடைத்து.**

**தாமின் புறுவது உலகின் புறக்கண்டு**
**காமுறுவர் கற்றறிந் தார்.**

**கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு**
**மாடல்ல மற்றை யவை.**

**'எங்கிருந்தாலும் அறிவைத் தேடு'**

என்ற கூற்றிற்கியையத் திருவள்ளுவர் மேற்காணும் குறள்களில் கற்றலால் விளையும் அறிவு குறித்துச் சிறப்பாகப் பேசியுள்ளார்.

மேலும்,

'அறிவு, அழிவு வராமல் காக்கும் கருவியாகும்! அன்றியும் பகைகொண்டு எதிர்ப்பவர்க்கும் அழிக்க முடியாத உள்ளரணும் ஆகும்'

என்று கூறியிருப்பது கொண்டு அறிவுடைமையின் ஆன்ற சிறப்பினை அழகுறப் புலப்படுத்தியிருக்கக் காணலாம்.

**அறிவற்றங் காக்குங் கருவி செறுவார்க்கும்**
**உள்ளழிக்க லாகா அரண்.**

'அறிவுடையவர் வேறொன்றும் இல்லாதிருப்பினும் எல்லாம் உடையவரே ஆவர்; அறிவில்லாதவர் வேறு என்ன உடையவராக இருப்பினும் ஒன்றும் இல்லாதவரே ஆவர்.'

**அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்**
**என்னுடை ரேனும் இலர்.**

என்று புலப்படும் வகையில் அறிவுடைமையின் சிறப்பினைப் பின்வருமாறு புகன்றுள்ளார்.

எனவே கல்வியை வற்புறுத்தி, கல்வியாற் பெறலாகும் அறிவுடைமையினைப் பாராட்டியுள்ளார் திருவள்ளுவர் எனலாம்.

முன்னரே திருக்குறளின் தொடக்கம் கடவுள் வாழ்த்தாக அமைந்திருப்பது திருவள்ளுவர்தம் தெளிந்த மதிநலத்தினைக் காட்டும் என்றேன். இரண்டாவது அதிகாரம் 'வான்சிறப்பு' என்பதாகும். மழையின் பெருமை பேசுவது இது. மழையின்றேல் உயிர்கள் மண்ணில் நிலைக்க முடியாது. மழையின்றேல் பசும் புல்லும் தலைகாட்டாதாம். திருவள்ளுவர் கூறுகிறார் :

**விசும்பின் துளிவீழின் அல்லால்மற் றுங்கே**
**பசும்புல் தலைகாண் பரிது.**

அடுத்து, நீத்தார் பெருமைபற்றிக் கூறுகிறார் திருவள்ளுவர்.

'பற்றுகளைத் துறந்தவர்களின் பெருமையை அளந்து கூறுதல், உலகத்தில் இதுவரையில் பிறந்து இறந்தவர்களை எண்ணிக் கணக்கிடுவதைப் போன்றது.'

**துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து**
**இறந்தாரை எண்ணிக்கொண் டற்று.**

என்னும் குறளில் தெளிவுபடுத்துகின்றார்.

திருவள்ளுவரின் திருக்குறளை ஓர் அறநூல் எனலாம். திருவள்ளுவர் பெரிதும் வற்புறுத்துவது அறமே எனலாம்.

**சிறப்பீனும் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்கு**
**ஆக்கம் எவனோ உயிர்க்கு**

என்னும் குறளில்,

> 'அறம் சிறப்பையும் அளிக்கும்; செல்வத்தையும் அளிக்கும்; ஆகையால் உயிர்க்கு அத்தகைய அறத்தை விட நன்மையானது வேறு யாது?'

என்று வினவுகின்றார்.

அறங்களிற் சிறந்த இல்லறத்தை 'இல்வாழ்க்கை' என்ற அதிகாரத்தில் சிறப்பாகக் குறிப்பிடுகின்றார்.

> 'பொருள் சேர்க்கும்போது பழிக்கு அஞ்சிச் சேர்த்துச் செலவு செய்யும்போது பகுத்து உண்பதை மேற்கொண்டால், அவ் வாழ்க்கையின் ஒழுங்கு எப்போதும் குறைவதில்லை.'

என்ற கருத்தில்,

**அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**
**பண்பும் பயனும் அது.**

என்று கூறியதோடமையாது, 'இல்லறம் இனிது சிறக்க, இல்வாழ்க்கைக்கு ஏற்ற நற்பண்பு உடையவளாகவும் கணவனுடைய பொருள் வளத்துக்குத் தக்க வாழ்க்கை நடத்துபவளாகவும் அமைபவளே நல்ல வாழ்க்கைத்துணை' என்கிறார்.

மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை.

அடுத்து,

பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த
மக்கட்பேறு அல்ல பிற.

என்ற குறளில்,

'பெறத்தகுந்த பேறுகளில், அறிய வேண்டியவைகளை அறியும் நன்மக்களைப் பெறுவதைத் தவிர, மற்றப் பேறுகள் சிறப்புடையன அல்ல.'

என்ற கருத்தைப் பெய்துள்ளார். அரிய வாழ்க்கைத் துணையமைந்து, பெருமைக்குரிய பிள்ளைகளைப் பெற்ற குடும்பம் அன்பை அடித்தளமாகக் கொண்டு, விருந்தோம்பலைச் சிறப்பாக வைத்து, இனியவை கூறி, செய்ந்நன்றி யறிதலுடன், நடு நிலைமை பிறழாது, அடக்கத்தோடு ஒழுக்கத்தைக் கைக்கொண்டு உயரிய வாழ்க்கை வாழ வேண்டும் என்று திறம்படத் திருவள்ளுவர் வற்புறுத்துகின்றார்.

சில அறங்களை வற்புறுத்துவான் வேண்டி முதற்கண் 'நிலையாமை' பேசுகின்றார். நிலையாத இவ்வுலகின் இயல்பினை நயம்படக் கிளந்துள்ள திருவள்ளுவர்தம் நாநய மாட்சிதான் என்னே!

நெருநல் உளன் ஒருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு.

'நேற்று இருந்தவன் ஒருவன் இன்று இல்லாமல் இறந்து போனான் என்று சொல்லப்படும் நிலையாமை ஆகிய பெருமையுடையது இவ்வுலகம்' என எடுத்து மொழிகின்றார்.

இந்த நிலையாமையினைத் தெளிந்தால் துறவு உள்ளம் வருவது உறுதி என்பதனால் நிலையாமை அதிகாரத்தை அடுத்துத் துறவு அதிகாரத்தைப் பாடியுள்ளார்.

'ஒருவன் எந்தப் பொருளிலிருந்து, எந்தப் பொருளி லிருந்து பற்று நீங்கியவனாக இருக்கின்றானோ, அந்தந்தப் பொருளால் அவன் துன்பம் அடைவதில்லை' என்ற கருத் தமைய,

**யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்**
**அதனின் அதனின் இலன்**

என்ற குறளைப் பாடியுள்ளார்.

இத் துறவுள்ளம் மெய்யுணர வைக்கிறது. மெய் யுணர்வு வாய்க்கப்பெற்றால் அவா அறுக்கும் மனப்பக்குவம் வரும்.

**ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே**
**பேரா இயற்கை தரும்.**

'ஒருபோதும் நிரம்பாத தன்மையுடைய அவாவை ஒழித்தால்' ஒழித்த அந்நிலையே எப்போதும் மாறாதிருக்கும் இன்ப வாழ் வைத் தரும்' என்பதாம்.

இவ்வெல்லாம் அமைந்தாலும் 'ஊழ்' பேராற்றல் வாய்ந் தது என்பதனை,

**ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று**
**சூழினுந் தான்முந் துறும்**

என்னுங் குறளால் தெளிவுறுத்தி அறத்துப்பாலினை முடிக்கிறார் திருவள்ளுவர்.

பொருட்பாலின் முதல் அதிகாரமே 'இறைமாட்சி' என்பது தாகும். அரசனின் அங்கங்களாகப் படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் என்னும் ஆறனைக் குறிக்கிறார். அரசனுக்கு அஞ்சாமை, ஈகை, அறிவுடைமை, ஊக்கமுடைமை ஆகிய நாற்பண்புகள் நன்கமைய வேண்டும் என்கிறார். காலந் தாழ்த்தாத தன்மை, கல்வியுடைமை, துணிவுடைமை ஆகிய இந்த மூன்று பண்புகளும் அரசனுக்கு அமையவேண்டிய அரும்

பண்புகள் என்கிறூர். அரசனுடைய கடமைகள் நான்காகும். அவையாவன :

பொருள் வருவாய்க்குரிய வழிகளை மேலும்மேலும் ஆராய்ந்து இயற்றுதல், அவ்வாறு இயற்றிய பொருள்களைச் சேர்த்தல், அவ்வாறு சேர்த்த பொருளைக் காத்தல், பின் காத்தவற்றைத் திட்டமிட்டு வகுத்துச் செலவு செய்தல் ஆகிய நான்காகும்.

**இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த**
**வகுத்தலும் வல்ல தரசு.**

பொருளாதார வல்லுநர்களும் இக் குறட் கருத்தினைப் பாராட்டி மொழிவர். இறைமாட்சியினை அடுத்துக் கல்வி அதிகாரத்தினை வைப்பது அரசனின் அரிய கடமைகளில் முதற் கடமை. தன் நாட்டு மக்களுக்குக் கல்வி வழங்க வேண்டுவது கட்டாயம் என்னும் அவர் உள்ளக் கிடக்கையைப் புலப் படுத்தும்.

வலியறிதல், காலம் அறிதல், இடனறிதல் முதலியன திருவள்ளுவர்தம் அரசியற் புலமையை உணர்த்தும். அமைச்சர் பற்றியும், அவருக்கு அவசியம் இருக்கவேண்டிய சொல்வன்மை குறித்தும் திருவள்ளுவர் பொருட்பாலில் குறிப்பிட்டிருப்பது பொருத்தமானதாகும்.

'நாடு' பற்றித் திருவள்ளுவர் கூறியிருக்கும் கருத்துகள், திருக்குறள் ஓர் அறிவுப் பெட்டகம் என உறுதி செய்வதாகும்.

**நாடென்ப நாடா வளத்தன நாடல்ல**
**நாட வளந்தரு நாடு.**

**தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்**
**செல்வரும் சேர்வது நாடு.**

**உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்**
**சேரா தியல்வது நாடு.**

பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்தலைக்கும்
கொல்குறும்பும் இல்லது நாடு.

மேலே குறிப்பிட்ட குறள்கள் வழங்கும் செய்தியைப் பின் வருமாறு தொகுத்துரைக்கலாம் :

'முயற்சி செய்து தேடாமலே தரும் வளத்தை உடைய நாடுகளைச் சிறந்த நாடுகள் என்று கூறுவர்; தேடி முயன்றால் வளம் தரும் நாடுகள் சிறந்த நாடுகள் அல்ல.

'குறையாத விளைபொருளும் தக்க அறிஞரும் கேடில்லாத செல்வம் உடையவரும் கூடிப் பொருந்தியுள்ள நாடே நாடாகும்.

'மிக்க பசியும் ஓயாத நோயும் அழிவு செய்யும் பகையும் தன்னிடம் சேராமல் நல்ல வகையில் நடைபெறுவதே நாடாகும்.

'பலவகையாக மாறுபடும் கூட்டங்களும் உடனிருந்தே அழிவு செய்யும் பகையும் அரசனை வருத்துகின்ற கொலைத் தொழில் பொருந்திய குறுநில மன்னரும் இல்லாதது நாடு.'

நட்பையே தீ நட்பு, கூடாநட்பு என்று காணும் திருவள்ளுவர் நோக்கு அறிவின் விளக்கமாய் அமைந்ததாகும்.

இலக்கியத்தில் முதன் முதலாகப் பெண்வழிச் சேறலின் கெடுதியையும், வரைவின் மகளிரை நாடும் கெடுமதியினையும், கள்ளுண்ணலின் இழிவினையும், சூது விரும்பும் தீதினையும் இழித்துரைக்கின்றார்.

'மருந்து' என்னும் அதிகாரம் திருக்குறள் அறிவுக்கடலின் கலங்கரை விளக்கமாய் அமைந்திருப்பதாகும்.

'முன் உண்ட உணவு செரித்த தன்மையை ஆராய்ந்துபோற்றிப் பிறகு தக்க அளவு உண்டால், உடம்பிற்கு மருந்து என ஒன்று வேண்டியதில்லை.''

**மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது**
**அற்றது போற்றி உணின்.**

மேலும்,

**உற்றவன் தீர்ப்பான் மருந்துஉழைச் செல்வானென்று**
**அப்பால்நாற் கூற்றே மருந்து.**

என்ற குறளில்,

'நோயுற்றவன், நோய் தீர்க்கும் மருத்துவன், மருந்து, மருந்தை அருகிருந்து கொடுப்பவன் என்று மருத்துவ முறை அந்த நான்கு வகைப் பாதுகாப்பு உடையது.'

என்ற கருத்தைப் புலப்படுத்தியிருப்பது, இக்கால மருத்துவ இயல் மேதைகளும் வியக்கும் செய்தியாகும்.

'உழவு' எனும் அதிகாரமும் திருவள்ளுவர் அறிவு நுட்பத்தை உணர்த்தும்.

'உலகம் பல தொழில் செய்து சுழன்றாலும் ஏர்த் தொழிலின் பின் நிற்கின்றது; அதனால் எவ் வளவு துன்புற்றாலும் உழவுத் தொழிலே சிறந்தது.'

என்ற கருத்தில்,

**சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்**
**உழந்தும் உழவே தலை.**

என்கிறார்.

'ஏர் உழுதலை விட எரு இடுதல் நல்லது. இந்த இரண்டும் செய்து களை நீக்கிய பிறகு நீர்பாய்ச்சுதலைவிடக் காவல் காத்தல் நல்லது' என்ற கருத்தமைய,

ஏரினும் நன்ருல் எருவிடுதல் கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு.

என்ற குறளை அமைத்துள்ளார்.

திருவள்ளுவரின் இன்பத்துப்பாலில் கவிநயங்கண்டு தெளியலாம். மருதத்திணை அமைக்காது ஊடலைப் பாடுகிருர். மேலும் திருவள்ளுவரின் உளவியல் நுட்பமும் இப்பகுதியால் புலனுகின்றது.

யான் நோக்குங் காலை நிலனேக்கும் நோக்காக்கால்
தான் நோக்கி மெல்ல நகும்.

'யான் நோக்கும்போது அவள் நிலத்தை நோக்கு வாள்; யான் நோக்காதபோது அவள் என்னை நோக்கி மெல்லத் தனக்குள் மகிழ்வாள்.'

தன் மனங்கவர்ந்த மங்கை நல்லாளின் நலம்புனையக் காதலன் சந்திரனைப் பார்த்து 'திங்களே! மலர் போன்ற கண்களை உடைய இவளுடைய முகத்தை ஒத்திருக்க விரும்பினுல், நீ பலரும் காணும்படியாகத் தோன்ருதே' என்ற கருத்தில்,

மலரன்ன கண்ணுள் முகமொத்தி யாயின்
பலர்காணத் தோன்றல் மதி.

என்கிருன். இதுபோன்றே காதலியின் காதல் நெஞ்சம், 'எம் காதலர் நெஞ்சினுள் இருக்கின்ருர்; ஆகையால் சூடான பொருளை உண்டால் அவர் வெப்பமுறுதலை எண்ணிச் சூடான பொருளை உண்ண அஞ்சுகின்ருேம்' என்ற கருத்துப்பட அமைந்துள்ள,

நெஞ்சத்தார் காத லவராக வெய்துண்டல்
அஞ்சுதும் வேபாக்கு அறிந்து.

என்ற திருக்குறளில் காணலாம்,

'மை தீட்டும் நேரத்தில் தீட்டும் கோலைக் காணுத கண்களைப் போல், காதலனைக் கண்டபோது மட்டும் அவருடைய குற்றத்தை நினைக்காமல் மறந்து விடுகின்றேன்' என்ற கருத்தைத் தரும்,

**எழுதுங்கால் கோல்காணுக் கண்ணேபோல் கொண்கன்**
**பழிகாணேன் கண்ட விடத்து.**

என்ற குறள் காதலின் உயர்வினைக் காட்டும் அருமைக் குறள் களில் ஒன்ருகும்.

இதுகாறும் கண்டவற்ருல் திருக்குறள் ஓர் அறிவுப் பெட்டகமாக—களஞ்சியமாகத் திகழ்வதனைக் காணலாம். இது குறித்தே,

**பாலெல்லாம் நல்லாவின் பாலாமோ? பாரிலுள்ள**
**நூலெல்லாம் வள்ளுவர்செய் நூலாமோ?**

என்ற கேள்வி பிறந்தது. மேலும்,

**எல்லாப் பொருளும் இதன்பாலுள; இதன்பால்**
**இல்லாத எப்பொருளும் இல்லையால்**

என்றும் பழந்தமிழ்ப் புலவர் ஒருவர் திருக்குறளைப் போற்றினர். திருவள்ளுவர் சொல்லாத பொருளில்லை; அவ்வாறு சொல்லவந்த பொருளை அழகுபடுத்தாமல் விட்ட தில்லை. திருக்குறளின் பெருமையறிந்தே இந் நூலுக்குப் பலர் உரை கண்டனர்; தமிழ் கற்ற பிற நாட்டவரும் தத்தம் மொழிகளில் மொழிபெயர்த்து நின்றனர். சுருங்கச் சொன்ஞல் திருவள்ளுவர் இயற்றியருளிய திருக்குறள் வாழ்க்கையின் அனைத்தொழுக்கங்களையும் நயம்படப் போதிக்கும் ஓர் அற நூலாய், உயர் அறிவுக் களஞ்சியமாய்த் திகழ்கிறது என்பது ஒருதலை.

# 10. சிலம்பில் வேடுவர் குறவர்

## முன்னுரை

'உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர்' என்னும் தம் கொள்கையை நிறுவவே, இளங்கோ அடிகள் தம் நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரத்தில் வேடுவர், குறவரையும் படைத்திருக்கிறார் எனலாம். வேட்டுவ மகள் சாலினி வாயி லாகக் கண்ணகியை,

இவளோ கொங்கச் செல்வி குடமலை யாட்டி
தென்தமிழ்ப் பாவை செய்தவக் கொழுந்து
ஒருமா மணியாய் உலகிற் கோங்கிய
திருமா மணி

எனப் போற்றிய ஆசிரியர், இறுதியில் குன்றக்குறவர் வழி யாகவே பத்தினிக் கோட்டத்திற்கு வித்திட்டிருப்பது இங்கே சுட்டத்தக்கது.

இவள்போலும் நங்குலக்கோர் இருந்தெய்வம்
இல்லையாதலின்
சிறுகுடி யீரே சிறுகுடி யீரே
தெய்வம் கொள்ளுமின் சிறுகுடி யீரே

என அக் குறவர்கள் கூறுவது அவர்தம் சிறு குடியினருக்கு மட்டுமல்லாமல், தமிழ்க் குடிக்கே ஆகும் என்பதைச் சேரன் செங்குட்டுவன் பத்தினிக் கோட்டம் அமைத்து நிறுவுவதன் மூலம் அறியலாம். இவ்வாறு காவியத் தலைவியின் ஏற்றத்திற்

குக் காரணமாகிய இவ்விரு இனத்தவரைப் பற்றி விரிவாகக் காண்போம்.

## வேடர் குறவர் வாழ்நிலம்

இளங்கோ அடிகள் வேடர் வாழ்வினை வேட்டுவ வரியில் விரித்துக் கூறி, குறவரைக் குன்றக் குரவை முழுவதிலும், காட்சிக் காதையின் முதற் பகுதியிலும் கூறியிருக்கிறார். முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்த பாலை வெளிகளிலே வேடர் வாழ்ந்திருந்தனர். மாரி வளம்பெறு அப்பாலை வெளிகள், கடுங்கதிர் திருகலின் கொடிய வெம்மையுடையனவாயிருந்தன. முள்வேலிகளைச் சூழ்ந்து காவல் செய்யப் பெற்ற மன்றங்களில் வேடர்கள் ஒருங்கு கூடி வாழ்ந்தனர் என்பதை, 'இடுமுள் வேலி எயினர் கூட்டுண்ணும் நடுவூர்' (வல்வில் எயினர் மன்று) என்ற அடிகளால் அறிய முடிகிறது. இவர்கள் தனித்தனியே இல்லங்கள் அமைத்தும் வாழ்ந்தனர் என்பதை, 'நரை முதுதாடி எயினர் எயிற்றியர் முன்றில்' எனவரும் பாடல் அடியால் அறிய முடிகிறது.

தொல்காப்பியர் கூறும் மைவரை குன்றமே குறவர்கள் வாழ்விடமாகும். 'குலமலை உறைதரு குறவர்,' 'மலைமிசை மாக்கள்' என்னும் அடிகளைக் காண்க.

## தொழில்

வேடுவரை இளங்கோ அடிகள் 'வில்லேர் உழவர்' என்று குறிப்பிடுகின்றார். மாரி வளம் நிறைந்த மருதநிலங்களில் வாழும் உழவர்கள், கலப்பை கொண்டு ஏர் ஓட்டிப் பயிர் விளைத்து வாழ்வார்கள். மாரி வளம் பெறாத பாலைகளில் வாழும் இவ் வேடுவர்கள், வில்லை ஏராகக் கொண்டு, வழிச் செல்வோரை வருத்தலாகிய உழவைச் செய்து, பொருள்

கொண்டு வாழ்பவர். ஆகையால், இவரை இளங்கோ அடிகள் 'வில்லேருழவர்' என்று சிறப்பிக்கின்றார். இன்னும் 'விற்றொழில் வேடர்,' 'எய்வில் எயினர்,' 'வேய்வில் எயினர்' என அவர்தம் தொழிலுக்கு உறுதுணையாகிய வில்லைப் பல விடங்களாலும் சிறப்பித்துப் பேசுகின்றார். வருத்தும் தொழில் செய்து வாழும் இவர்கள் அருள் சிறிதும் இல்லாதவர் என்பதை, 'பொருள் கொண்டு புண்செயின் அல்லதை யார்க்கும் அருளில் எயினர்' என்று குறிப்பிடுகின்றார். இவர்கள், பாலை வழிச் செல்லும் மருதநிலத்து மக்களின் ஆநிரைகளைக் கவர்வார்கள். ஆக்களைக் கவர்வதும், அவற்றை உடையாரை அலறத் தாக்குவதுமே இவருடைய இன்றியமையாத தொழிலாகும். 'அயலூர் அலற எறிந்த நல் ஆனிரைகள்' என்னும் பாடற் பகுதியால் இவர்தம் தொழில் தெளிவாகும். ஏனம், புலி முதலிய விலங்குகளை இவர் வேட்டையாடும் தொழிலுடையவர் என்பது,

ஏனத்து வளைவெண் கோடு பறித்து
மறங்கொள் வயப்புலி வாய்பிளந்து

என வரும் அடிகளால் அறியலாகும்.

இனி, இவ்வாறல்லாமல் குன்றம் வாழ் குறவர்கள், குன்றங்களில் தினை விளைத்து வாழும் அருள் வாழ்க்கை வாழ்பவர்களே. தினையுண்ண வரும் குருவிகளைத் துரத்தியும், கிளிகளைக் கவண்கொண்டு கடிந்தும் அவர்கள் வாழ்கிறார்கள். இவர்களும் வீரத்தில் சிறந்தவர்களே. அவ் வீரத்தை வழிச் செல்வோரை வருத்தப் பயன்படுத்தாமல், குன்றம் வாழ் புலிகளை வேட்டையாடவும், யானைகளைப் பிடிக்கவுமே பயன் படுத்துகின்றார்கள். மேலும் தேனெடுப்பது அவர்களின் தொழில்களில் ஒன்று. குன்றங்களில் முழவின் ஒலியாகி, அருவிகள் இடைவிடாது முழங்கிக் கொண்டிருக்கும். மலைபடு

பொருள்களாகிய அஞ்சனம், அரிதாரம், சிந்துரம் ஆகியன கலக்கப் பெறுதலான் அவ் வருவி, இந்திர வில்லைப் போன்று பலநிறம் உடையதாய் நறுமணம் நாறி வீழ்ந்து கொண் டிருக்கும். அவ்வருவிகளிலும், சுனைகளிலும் நீராடிக் களிப்பதும் இக் குறவர்தம் தொழில்களாம்.

குருவி யோப்பியும் கிளிகடிந்தும் குன்றத்துச் சென்றுவைகி
அருவி யாடியும் சுனைகுடைந்தும் அலவுற்று வருவேம்

எனக் குறவர்கள் கூறும் கூற்றின் துணைகொண்டும்,

செந்தூரச் சுண்ணம் செறியத்தூய்த் தேங்கமழ்ந்து
இந்திர வில்லின் எழில்கொண் டிழுமென்று
வந்தீங் கிழியும் மலையருவி ஆடுதுமே

எனக் குறமகள் ஒருத்தி தன் தோழியை அழைப்பதன் துணை கொண்டும், மலைவளம் காணவந்த சேரன் செங்குட்டுவனும் அவனுடன் வந்தோரும்,

நறவுக்கண் ணுடைத்த குறவர் ஓதையும்
.............................................
புலியொடு பொரூஉம் புகர்முக ஓதையும்
.............................................
பயம்பில் வீழ் யானைப் பாகர் ஓதையும்

கேட்டதாக வரும் பகுதி கொண்டும் குறவரின் தொழிலை அறிவது எளிதாகிறது.

## உணவு உடை அணிகள்

வேடுவர்கள், வேட்டையாடிய விலங்குகளின் நிணங் கலந்த சோற்றையே பெரிதும் விரும்பி உண்பார்கள். அவரை, துவரை முதலியவற்றின் அவியலையும் உண்ணுவார்கள்.

புழுக்கலும் நோலையும் விழுக்குடை மடையும்

எனவரும் அடியால், அவருடைய உணவுகளை அறிய முடிகிறது. அவர்கள் கள்ளும் விரும்பி அருந்துவார்கள். 'மட்டுண் வாழ்க்கை' என்ற தொடரால், வேடுவர் தம் வாழ்க்கையைச் சிறப்பிக்கிறார் இளங்கோ அடிகள். எயினர் வாழிடங்களில் கள் விற்பதற்கெனப் பெண்கள் பலரும் இருந்தனர். அவர்களைக் 'கள் விலையாட்டிகள்' என ஆசிரியர் குறிப்பிடுகின்றார்.

இவ் வேடுவர்கள், தாம் வேட்டையாடிக் கொன்ற யானை மற்றும் புலிகளின் தோல்களையே ஆடைகளாய் உடுத்து, அவற்றையே தாம் வணங்கும் தெய்வத்திற்கும் அணிவித்தனர். ஆனைத்தோல் போர்த்துப் புலியின் உரியுடுத்தே இவர்கள் வாழ்ந்தனர்.

பாம்பின் வடிவில் செய்யப்பெற்ற பொன் அல்லது வெள்ளி நாணை இவர்கள் அணிந்து கொண்டதோடு, பன்றியின் வெள்ளிய பற்களைப் பிறையெனத் தலைகளில் சூடிக் கொண்டனர். இவர்கள் புலிப்பல் தாலிகளை விரும்பிக் கழுத்தில் அணிந்துகொண்டனர். வேட்டுவப் பெண்கள் மேகலையாக, புள்ளிகள் நிறைந்த புலித்தோலையே உடுத்துக் கொண்டனர். சாலினியெனும் வேட்டுவ முதுமகளுக்குக் கலையமர் செல்வியின் கோலம் புனையும்போது, மேற்கூறிய அணிகளை அணிவித்து அழகு செய்தனர் என்பதால், அவ் வணிகளையே வேட்டுவ மகளிரும் அணிய அறிந்திருந்தனர் எனத் தெரிகின்றோம்.

தொல்குடிக் குமரியைச்
சிறுவெள் ளரவின் குருளைநாண் சுற்றிக்
குறுநெறிக் கூந்தல் நெடுமுடி கட்டி
இளைசூழ் படப்பை இழுக்கிய ஏனத்து
வளைவெண் கோடு பறித்து மற்றது
முளைவெண் திங்க ளென்னச் சாத்தி

மறங்கொள் வயப்புலி வாய்பிளந்து பெற்ற
மாலை வெண்பல் தாலிநிரை பூட்டி
வரியும் புள்ளியும் மயங்கு வான்புறத்து
உரிவை மேகலை உடீஇ

எனவரும் பகுதி, வேடுவர் அணிகளை விளக்குகிறது. இவர்கள் காலில் கழலும், சிலம்பும் அணிந்தமையை

சிலம்பும் கழலும் புலம்பும் சீறடி

என்பது கொண்டும் அறியலாம்.

குறவர்கள் குன்றத்தில் பயிராகும் தினையைக் குற்றிச் சமைத்து உண்பார்கள். தேனும், மதுவும் இவர்கள் குடித்துக் களிப்பார்கள். மலையில் விளையும் பலவின் கனி, மாவின் கனி, வாழைக்கனி, தேங்காய் இவைகளும் இவர்தம் உணவே யாகும். மலைவளம் காணவந்த செங்குட்டுவனுக்குக் காணிக்கையாகக் குறவர்கள் வழங்கிய பொருள்களை ஆசிரியர் குறிப்பிடுவதன் துணைகொண்டு, குறவர்கள் உணவுப் பொருள் களையும் அணியும் அணிகலன்களையும் அறிய ஏதுவாகிறது.

யானைவெண் கோடும் அகிலின் குப்பையும்
மான்மயிர்க் கவரியும் மதுவின் குடங்களும்
சந்தனக் குறையும் சிந்துரக் கட்டியும்
அஞ்சனத் திரளும் அணியரி தாரமும்
ஏல வல்லியும் இருங்கறி வல்லியும்
கூவை நூறும் கொழுங் கொடிக் கவலையும்
தெங்கின் பழனும் தேமாங் கனியும்
பைங்கொடிப் படலையும் பலவின் பழங்களும்
காயமும் கரும்பும் பூமலி கொடியும்

கொழுந்தாட் கமுகின் செழுங்குலைத் தாறும்
பெருங்குலை வாழையின் இருங்கனித் தாறும்

என இளங்கோஅடிகள் பட்டியல் இட்டுக் காட்டும் பொருள்களின். துணைகொண்டு, மதுவின் குடங்களைக் குறவர்கள் குடித்துக் களித்ததையும், வாழை, பலா, மா முதலான முக்கனிகளைச் சுவைத்ததையும், தேங்காயையும் கரும்பையும் சுவைத்து, கமுகம் பாக்கினை உண்டதையும் அறியமுடிகிறது.

குறவர்தம் ஆடை பற்றிய குறிப்பு யாண்டும் கூறப்படவில்லையாயினும், அவர்தம் அணிகளை அறியும் குறிப்புகள் பல உள. இறைவளை, ஆய்வளை, செறிவளை என வரும் குறிப்புகளால், குறமகளிர் கைகளில் செறிய வளைகளை அணிந்திருந்தமை புலனாகிறது. 'நேரிழை நல்லாய்' எனவரும் குறிப்பால் அவர்கள் வேறுபல அணிகளை அணிந்திருந்தமை புலனாகும். 'அளந்து கடை அறியா அருங்கலம்' எனக் குறித்த ஆசிரியர் அவற்றைத் தனித்தனியாக விரித்துரையாமையால், குறவர்கள் அணிந்த அணிகளை விரிவாக அறிய இயலவில்லை. அகிலினைக் கொண்டு கூந்தலை மணப்படுத்திக் கொண்டுள்ளனர். அஞ்சனம், அரிதாரம், சந்தனங்களையும் அவர்கள் பயன்படுத்தியுள்ளனர். கடம்ப மலர்களைக் கண்ணிகளாக்கித் தலையில் அணிந்து கொள்வர் என்பதை, 'மன்றலங் கண்ணி மலைநாடன்,' 'கடம்பு சூடி' முதலான நடைமுறைப் பழக்கவழக்கங்களுணர்த்தும் தொடர்களால் உணர்த்துகிறார்.

வேடுவர்கள் ஆறலைத்துண்ணும் தம் தொழில்வளம் பெருகத் தங்கள் குல தெய்வமாகிய கொற்றவையை வணங்கும் பழக்கம் உடையவர்கள். கொற்றவைக்கு உயிர்ப்பலி கொடுக்காவிடில், தம் தொழில்வளம் குறையும் என நம்பினர். 'கலையமர் செல்வி கடனுணின் அல்லது சிலையமர் வென்றி கெடுப்போளல்லள்' என்று நம்பி, அவளுக்கு

விழாவெடுத்து, தம் தலையைத் தாமே வெட்டிப் பலிகொடுத்து வழிபடுவர். தம் வேடர் குலத்தில் சிறந்த ஒரு முதுமகளைக் கொற்றவையின் கோலம் செய்வித்து, அவளுக்கு வண்ணமும் சுண்ணமும் தண்ணறுஞ் சாந்தமும் புழுக்கலும் நோலையும் விழுக்குடை மடையும் பூவும் புகையும் மேவிய விரையும் படைத்து, அவளுடைய புகழைப் பாடியும் ஆடியும் வழிபட்டுத் தம் தொழில் வளம் சிறக்க வேண்டுவர். இளங்கோவடிகள் காட்டும் வேடுவர்கள், தம் தலையைத் தாமே அரிந்து மிடற்றில் பொங்கும் குருதியைக் கொற்றவைக்குக் கொடுத்துத் தொழில் வளம் சிறக்க வேண்டுகிறார்கள்.

ஐயை கோட்டம் இவர்கள் வழிபடும் கோயிலாகும். அக் கோட்டத்தின்கண், வேட்டுவ முதுமகளுக்குக் கொற்றவையின் கோலம் புனைவித்துப் பலிகொடுத்து, இசைக் கருவிகளை முழக்கி ஆடியும் பாடியும் கொண்டாடுவர்.

குறவர்களுடைய பழக்க வழக்கங்களில் குறிப்பிடத்தக்க சில உள. வியத்தகு நிகழ்ச்சியைக் கண்டவிடத்து அதைத் தெய்வச் செயலாக எண்ணிப் போற்றுதலுக்குரியாரை விழா வெடுத்து வழிபடும் வழக்கத்தை அவரிடம் காண முடிகிறது. ஒரு முலையிழந்த திருமா பத்தினியாகிய கண்ணகி, வேங்கை மரத்து நிழலில் தங்கியிருந்து, வானவர் அனுப்பி வைத்த தேரில், கொழுநனோடு சென்றமையை நேரில் கண்ட குறவர், கண்ணகியைத் தம் குலத்துதித்த வள்ளியாகவே எண்ணி வழிபடுவது இங்கே குறிப்பிடத்தக்கது. பெருமலை வளஞ்சுரக்க, ஒரு முலை இழந்த நங்கைக்குப் பூப்பலி செய்து, விரவு மலர் தூவி அவர்கள் விழா வெடுக்கின்றனர்.

**வானக வாழ்க்கை யமரர் தொழுதேத்தக்**
**கான நறுவேங்கைக் கீழாளோர் காரிகையே**
**கான நறுவேங்கைக் கீழாள் கணவனொடும்**

வானக வாழ்க்கை மறுதரவோ வில்லாளே
மறுதர வில்லாளை ஏத்திநாம் பாட

எனவரும் குன்றக் குரவைப் பகுதி, கண்ணகியைக் கண்ட குறவர்தம் வியப்பும், வணக்கமும் கூறுவதாகும். மலைவளம் காண வந்த செங்குட்டுவனைக் கண்டு வணங்கி, அவனிடம் அவ்வியத்தகு நிகழ்ச்சியைக் கூறுகிறார்கள் :

கான வேங்கைக் கீழோர் காரிகை
தான்முலை இழந்து தனித்துய ரெய்தி
வானவர் போற்ற மன்னொடும் கூடி
வானவர் போற்ற வானகம் பெற்றனள்
எந்நாட் டாள்கொல், யார்மகள் கொல்லோ?

என அவர்கள் உரைக்கும் உரையிலும் வியப்பே மேலிடுகிறது. வியத்தகு செயல் புரிந்த கண்ணகியை முதற்கண் தெய்வமாகத் தொழுது வழிபட்டவர் குறவர்களே. பின்னுள், சேரன் செங்குட்டுவன் பலர்தொழு பத்தினிக் கோட்டம் அமைத்திட வித்திட்டவர்களும் அவர்களே. இளங்கோவடிகள், தீந்தமிழ்க் காப்பியமாம் சிலம்பை இயற்ற, வித்திட்ட நற்றவத்தரும் இக் குறவர்களே.

தங்கள் மலைப்பகுதிக்கு மன்னன் அல்லது அவனைச் சார்ந்தோர் வருவராயின், அவரைக் கண்டு மலைப்பொருள் களைக் காணிக்கையாக்குவதும் அவர்தம் பழக்கமாகும். அப் பழக்கத்தின்படி யானைவெண்கோடு முதலாக வாழையின் இருங்கனித்தாறு ஈருக உணவுப் பொருள்களையும் மணப் பொருள்களையும் வழங்கியமையை ஏற்கெனவே எடுத்துக் காட்டினேம். அவற்றோடு ஆளிக்குட்டி, சிங்கக் குட்டி, புலிக் குட்டி, மதயானைக்கன்று, குரங்குக்குட்டி, கரடிக்குட்டி, மான் குட்டி, கத்தூரிக்குட்டி, கீரி, மயில், புழுகுப் பூனை, கானக்கோழி ஆகியவைகளையும் செங்குட்டுவனுக்குக் குறவர்கள் வழங்கு

வதால், தங்கள் வேந்தருக்கும் வேண்டியவருக்கும் சிறந்த பொருள்களை வழங்கி மகிழும் பழக்கம் குறவர்களுக்கு உண்டு என்பதைத் தெளிய முடிகிறது.

## நெஞ்சப் பாங்கும் பண்பாடும்

வழிச்செல்வோரின் பொருள்கொண்டு புண்செயும் அருளில் எயினர்களாக இருந்தாலும், அருளற்ற அவர்களுக்கும் ஒருவகையில் அருளிருக்கவே செய்கிறது. அவ்வருளால் அவர்களும் ஈகைசெய்து வாழ்கின்றனர். ஆறலைத்துக் கவர்ந்த ஆனிரைகளைத் தங்களுக்குக் கருவி வடித்துக் கொடுத்த கொல்லருக்கும், விழாக்களில் துடிகொட்டும் புலையருக்கும், யாழ்மீட்டிப் பாடவல்ல பாணருக்கும், ஆநிரை அவர்தம் பாலைவழிச் செல்வதை ஒற்றறிந்து கூறிய ஒற்றருக்கும், புள் முதலாக நல்நிமித்தம் பார்த்துக் கூறிய கணியருக்கும், கள் விலையாட்டிகளுக்கும் தரும் நெஞ்சப் பாங்கினைக் கொண்டிருந்தனர் அவ் வேடுவர்கள். வயது முதிர்ந்த தம் குலத்து வேடுவர்கள், வேட்டத்தொழில் செய்து வாழ இயலாத இயலாமையை அறிந்த அவ் வேடுவர்கள், அம் முதுவேடுவர்களும் வேடுவச்சிகளும் வாழும் பொருட்டு அவர்களுக்கும் ஆநிரைகளை வழங்குகின்றனர்.

தலைநாளை வேட்டத்துத் தந்தநல் ஆநிரைகள்
கொல்லன் துடியன் கொளைபுணர் சீர்வல்ல
நல்லியாழ்ப் பாணர்தம் முன்றில் நிறைந்தன.

சுரந்தை யலறக் கவர்ந்த இனநிரைகள்
கள்விலை யாட்டிநல் வேய்தெரி கானவன்
புள்வாய்ப்புச் சொன்னகணி முன்றில் நிறைந்தன.

அயலூர் அலற எறிந்தநல் ஆனிரைகள்
நயனில் மொழியின் நரைமுது தாடி
எயினர் எயிற்றியர் முன்றில் நிறைந்தன.

எனவரும் வேட்டுவவரிப் பகுதிகளால் வேடுவர் நெஞ்சப் பாங்கினையும், பண்பாட்டையும் அறிய முடிகிறது. கொற்றவைக்குப் பலியாகத் தம் தலைகளைத் தாமே அரிந்து வைக்கும் வேடுவர் செயல், அவர்தம் நெஞ்ச உறுதிப்பாட்டைக் காட்டுகிறது.

குறவர்கள் பிறர் துன்பம் கண்டவிடத்து வாளாவிராது, அவர்தம் துன்பத்தை அறிந்து, அகற்ற முயலும் நெஞ்சப் பாங்கு உடையவர் என்பதை, வேங்கை மரத்து நிழலில் வந்து நிற்கும் கண்ணகியை நோக்கி,

> மலைவேங்கை நறுநிழலின் வள்ளிபோல்வீர் மனநடுங்க
> முலையிழந்து வந்துநின்றீர் யாவிரோ

என வினவுவதிலிருந்து அறியலாம். கொண்ட கொழுநனோடு கண்ணகி வானுலகம் செல்வதைத் தம் கண்களால் கண்டு, அவளைத் தம் குலத்துதித்த வள்ளியாகவே எண்ணித் தொழுவதும், அவர்தம் சிறந்த நெஞ்சப்பாங்கைக் காட்டும்.

மேலும் கண்ணகியை வணங்கும் அக் குறமகளிர், கண்ணகியைப் போன்றே கற்பினைப் போற்றும் சிறந்த பண்பாடு உடையவர்கள். குறமகள் ஒருத்தி, தன் காதலன் மலை தீண்டி வந்த புனலில் தன்னையல்லாத மற்றொருத்தி நீராடுவதையும் பொறாதவளாய் இருக்கிறாள். இதனை,

> என்னொன்றும் காணேம் புலத்தல் அவர்மலைப்
> பொன்னாடி வந்த புதுப்புனல்
> பொன்னாடி வந்த புதுப்புனல் மற்றையார்
> முன்னாடி னோம்தோழி நெஞ்சன்றே

என்ற குன்றக்குரவைப் பகுதியால் அறியலாம். மேலும் தாம் விரும்பிய காதலரை மணக்க அருள்புரியுமாறு அவர்கள் தாம் வணங்கும் முருகனை வேண்டுகிறார்கள்.

'அயல்மணம் ஒழியருள்' என வேண்டும் அவர், 'அயல் மணமாயின் அது பிழை மணம், அவரை மணப்பதே நன்மணம்' என்று கூறி, நன்மணம் புரிய அருளும்படி முருகனை வேண்டுகின்றனர்.

## கலைச் சிறப்பு

துடி, யாழ், பறை முதலாகிய இசைக்கருவிகளை இயக்கும் கலைஞர்களுமாவர் இவ் வேடுவர்கள். வழிப்போக்கரை அலைத்து அவர் பொருளைக் கவரும்போது பறைகளைக் கொட்டு வார்கள்; களவு கொளும்போது சின்னம் என்கிற இசைக் கருவியை ஊதுவார்கள். துத்தரிக் கொம்பு, குழிக் குழல், மணி ஆகியனவும் அவர்தம் இசைக்கருவிகளே. கொற்றவையை வணங்கும்போது அவ்விசைக்கருவிகளையும் முழக்கி இறைவியின்முன் வைத்து வணங்குவர்.

**ஆறெறி பறையும் சூறைச் சின்னமும்**
**கோடும் குழலும் பீடுகெழு மணியும்**
**கணங்கொண்டு துவைப்ப அணங்குமுன் னிறீஇ**

அவர்கள் வழிபடுவர்.

இவர்கள், உறங்குகின்ற ஊர்களிடைச் சென்று, அவர்கள் நடுங்கும்படி, துடியை முழக்கிப் பொருள்களைக் கவர்வர் என்பதை,

**துண்ணென் துடியொடு துஞ்சூர் எறிதரு**
**கண்ணில் எயினர்**

எனவரும் தொடர் கொண்டு அறியலாம். இவர்களே துடியும், யாழும் இசைக்க அறிந்திருந்தனர் எனினும், இவர் தம் கூட்டத்தில் துடியை முழக்கத் தனியே புலையர்களும், யாழை மீட்டத் தனியே பாணர்களும் இருந்தனர்.

குறவர்கள் குறிஞ்சிப்பண் பாடவும், இசைக் கருவிகளை இயக்கவும் அறிந்திருந்தனர்.

தொண்டகம் தொடுமின் சிறுபறை தொடுமின்
கோடுவாய் வைம்மின் கொடுமணி இயக்குமின்

எனவரும் பகுதி, குறவர்தம் இசைக்கருவிகளைக் கூறுவதாகும், குரவைக் கூத்தும், வெறியாடலும் இவர்கள் அறிந்திருந்தனர்.

குரவைக் கூத்தொன்று ஆடுகம்.
கொண்டு நிலைபாடி ஆடும் குரவை.

என வரும் பகுதிகள், குரவைக் கூத்தினைப் பற்றியவை.

குறமகள் கொண்ட காதல்நோயை அறியாத அவள் அன்னை, கடம்பனால் ஏற்பட்டது அந் நோய் என்று, அதைத் தீர்க்க வெறியாடும் வேலனை அழைப்பாள். ஆகவே குன்றங்களில் வெறியாடும் வேலர்களும் உண்டு.

மலைவளம் காண வந்த செங்குட்டுவனை முதற்கண் வரவேற்றது குறவர்தம் குரவைக் கூத்தின் ஒலியும், குறிஞ்சிப் பண்ணின் ஒலியும், தினைகுற்றும் மங்கையரின் வள்ளைப் பாட்டின் ஒலியுமே யாகும்.

குன்றக் குரவையொடு கொடிச்சியர் பாடலும்
வென்றிச் செவ்வேள் வேலன் பாணியும்
தினைக்குறு வள்ளையும்

குறிஞ்சிப் புலங்களில் மிகுந்தொலிப்பதைக் கூறுகிறார் இளங்கோ அடிகள்.

## பிற மக்களுடன் தொடர்பு

அலைக்கும் தொழில் வேடுவரோடு அயலார் தொடர்பு கொள்ள விழையாததில் வியப்பொன்றுமில்லை. ஆயினும் இவ் வேடுவர் அயலூர்களுக்கு இரவில் சென்று, அவர்களின் ஆநிரைகளைக் கவர்ந்து வந்தனர். அவ்வகையில் வேடுவர்தம் அயலவர் தொடர்பு, இனிய நல் தொடர்பாக இருக்கவில்லை. வேந்தனுக்கும், வேடுவர்க்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. வேற்று நாட்டின்மீது, படையெடுக்க விழையும் வேந்தன்,

போரின் முதற்கண் நிகழும் வெட்சியாகிய ஆநிரை கவர்தலுக்கு, இவ் வேடுவரையே துணைகொள்வான். வேட்டுவ வரியில் இளங்கோ பாடியிருப்பது பாண்டிய நாட்டு பாலை வேடுவர்களை. ஆகவே அவர்கள் பிறநாட்டு ஆநிரை வளம் பாழ்படும்படி, பாண்டி மன்னன் வெட்சி சூடுக என வாழ்த்து கின்றனர்.

> பொறையுயர் பொதியிற் பொருப்பன் பிறநாட்டுக்
> கட்சியும் கரந்தையும் பாழ்பட
> வெட்சி சூடுக விறல்வெய் யோனே

என்னும் வேட்டுவ வரிப் பகுதியினைக் காண்க.

இனி, குறவர்கள் மன்னவரோடும் மற்றவரோடும் தொடர்பு உடையவர் என்பதை மலைவளம் காணவந்த செங்குட்டுவனை வஞ்சியிற்கண் கண்டு, பல பொருள்களை வழங்குவதிலிருந்து அறியலாம். மலை விளைந்த சந்தனம் முதலிய மணப்பொருள்களும், மணிகளும் மற்றை நில மக்களிடத்து வழங்கியமையை ஆசிரியர் பலவிடங்களில் கூறியிருப்பதால், வணிகம் காரணமாகவும் தொடர்பு குறிஞ்சி நில மக்களுக்கும் மற்றவர்க்கும் இருந்தமை தெளிவாகிறது.

## முடிவுரை

இதுகாறும் வேடரும், குறவரும் மேற்கொண்ட உழைப்பு, அவர்தம் உணவு, உடை, நடைமுறைப் பழக்க வழக்கங்கள், கொண்டாட்டங்கள், நெஞ்சப்பாங்குகள் பண்பாடுகள், கலைச்சிறப்பு வகைகள், பிறமக்களுடன் தொடர்பு ஆகியவற்றை விரித்துக் கண்டோம். அவர்தம் குற்ற உணர்வு, தண்டனை முறைகளை அறிய நூலுள் சான்றுகள் இல்லையெனினும், அவை அவர்களிடையே இல்லாமல் இருந்திரா என்பதை உறுதியாக நம்பலாம்.

# 11. மணிமேகலை காட்டும் பண்புகள்

தமிழ்மொழியில் வழங்கும் ஐம்பெருங் காப்பியங்கள் சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி என்பனவாகும். 'ஐம்பெருங் காப்பியங்கள்' என்னும் வழக்கு, பண்டு தொட்டே இருந்து வருகிறது. இவற்றுள் நமக்கு முழுமையாகக் கிடைக்கும் காப்பியங்கள் சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி ஆகிய மூன்றுமே ஆகும். வளையாபதி, குண்டலகேசி ஆகிய இரு நூல்களில் சில பகுதிகளும் பாடல்களுமே கிடைக்கின்றன. சிலப்பதிகாரம், சிந்தாமணி, வளையாபதி ஆகிய மூன்றும் சமணசமயக் காப்பியங்களாகும். மணிமேகலையும் குண்டலகேசியும் பௌத்த சமயக் காப்பியங்களாகும்.

சிலப்பதிகாரமும் மணிமேகலையும் கதைத் தொடர்பு உடையன. சிலப்பதிகாரத்தின் தொடர்ச்சி மணிமேகலை எனலாம். சிலப்பதிகாரத்தின் கதைத்தலைவனை கோவலனுக்கும் பரத்தையர் குடியிற்பிறந்த அவன் காதலி மாதவிக்கும் மகளாகப் பிறந்தவளே மணிமேகலை ஆவள். மணிமேகலையின் மாண்புறு வாழ்வினை வடித்துரைப்பது மணிமேகலைக் காப்பியமாகும். 'மணிமேகலை மேல் உரைப் பொருள் முற்றிய சிலப்பதிகாரம்' என்பர் இளங்கோவடிகள். எனவே, சிலப்பதிகாரமும் மணிமேகலையும் 'இரட்டைக் காப்பியங்கள்' என வழங்கப்படும்.

தமிழில் தோன்றிய முதற்காப்பியம் சிலப்பதிகாரம் என்றால், தமிழில் தோன்றிய முதல் சமயக் காப்பியம்

மணிமேகலை எனலாம். 'மணிமேகலை துறவு' என்ற பெயரும் இக் காப்பியத்திற்கு உண்டு என்பதை,

> **பூத்தபுனல் பூம்பொய்கைப் பூம்புகார் மாதவிக்கு**
> **வாய்த்த மணிமேகலை துறவு**

என்னும் பழைய வெண்பா ஒன்றன் தொடரால் அறியலாம். மேலும் சிவஞான சித்தியார்க்கு உரை எழுதிய ஞானப் பிரகாசர் என்பாரும் இந் நூலை 'மணிமேகலை துறவு' என்றே குறிப்பிட்டுள்ளார்.

மணிமேகலை ஒரு புரட்சிக் காப்பியம் எனலாம். பரத்தையர் குடியிலே பிறந்து, ஆயினும் அக் குலவொழுக்கத்திற்கு இயைய வாழாமல், அதற்கு மாறாகத் தன் வாழ்க்கையினையே துறந்து, தனக்கென வாழாது பிறர்க்கென வாழும் பெற்றியளாய் வாழ்ந்த அறச்செல்வி மணிமேகலையின் பீடுடைய பெருவாழ்வினை இக காப்பியம் உணர்த்தி நிற்கிறது எனலாம். 'மக்கட் சமுதாயத்தை அல்வழி நீக்கி நல்வழிப்படுத்த எழுந்த ஒரு சீர்திருத்தக் காவியம் மணிமேகலை. இலக்கியவுலகில் இந் நூலின் தனிச் சிறப்பு இது' என்பர் அறிஞர். மணிமேகலை மாபெரும் பத்தினி கண்ணகியின் மகளாகவே கூறப்படுகின்றாள். மாதவியின் வாக்காலேயே இவ்வுண்மை புலப்படுகின்றது.

> **மாபெரும் பத்தினி மகள்மணி மேகலை**
> **அருந்தவப் படுத்தல் அல்லது யாவதும்**
> **திருந்தாச் செய்கைத் தீத்தொழிற் படாஅள்**
>
> *(ஊரலருரைத்த காதை 55—57)*

பெருங்காப்பியத்தின் தலையாய பண்பு ஒப்பாரும் மிக்காரும் இல்லாத் தலைமகனைப் பெற்றுத் திகழ்தலே ஆகும். மணிமேகலை காப்பியத்தின் தலைவி மணிமேகலை, அழகு, பண்பு முதலியவற்றால் தனக்கு ஒப்பாரும் மிக்காருமின்றித் திகழ்கிறாள்,

மணிமே கலைதன் மதிமுகம் தன்னுள்
அணிதிகழ் நீலத் தாய்மலர் ஓட்டிய
கடைமணி யுகுநீர் கண்டன னாயின்
படையிட்டு நடுங்கும் காமன்; பாவையை
ஆடவர் கண்டால் அகறலும் உண்டோ?
பேடியர் அன்றோ பெற்றியின் நின்றிடின்!

(மலர்வனம்புக்க காதை 20—25)

இவ்வளவு அழகுச் செவ்வி வாய்ந்த மணிமேகலையும், உதயகுமரனுக்கு அஞ்சிப் பளிக்கறையில் ஒளிந்து கொண்ட போது, அவன் அவளை எய்தப் பெறுமல் திட்டிவிட்டுச் சென்று விட்டபொழுது, பள்ளத்திற் பாயும் வெள்ளம் போல் புதுவோன் பின்னர்த் தன் நெஞ்சம் போய்விட்டதாகப் புலம்பி யுரைத்திருப்பதனைப் பின்வரும் தொடர் கொண்டு தெளியலாம் :

கற்புத் தானிலள் நற்றவ வுணர்விலள்
வருணக் காப்பிலள் பொருள்விலையாட்டி யென்று
இகழ்ந்தன னாகி நயந்தோன் என்னாது
புதுவோன் பின்றைப் போனதென் நெஞ்சம்
இதுவோ அன்னாய் காமத் தியற்கை
இதுவே யாயின் கெடுகதன் திறமென
மதுமலர்க் குழலாள் மணிமே கலைதான்
சுதமதி தன்னொடு நின்ற எல்லையுள்

(மணிமேகலா தெய்வம் வந்து தோன்றிய
காதை 86—93)

உலகவியற்கையோடும் உளவியற்பாங்கோடும் மேற் கண்டவாறு மணிமேகலையின் மனநிலை சுட்டப்பட்டுத் தானே தன் ஓடும் நெஞ்சினைத் திருத்தி நிறுத்திச் செம்மை செய்து கொண்டு துறவு நிலையில் தூயளாய் நின்று, அறச் செல்வியாய்த் திகழும் மணிமேகலை தன்னேரில்லாத் தலைவி யாய் மணிமேகலைக் காப்பியத்தில் ஒளிர்கின்றாள். அவள் தன்

பண்பு நலன்களோடு மணிமேகலைக் காப்பியத்தின் வழி, அக் காப்பியத்தின் ஆசிரியராம் சீத்தலைச் சாத்தனார் காட்டும் பண்புகள் சிலவற்றைப் பாங்குறக் காண்போம்.

மணிமேகலைக் காப்பியம் வற்புறுத்தும் தலையாய அறப் பண்பு பசிப்பிணி யொழிப்பாகும். 'கொடிது கொடிது வறுமை கொடிது' என்பர்.

> இன்மை எனஒரு பாவி மறுமையும்
> இம்மையும் இன்றி வரும்

(குறள் : 1042)

பசிப்பிணி என்பது ஒரு பாவி. அதைப் போலக் கொடுமைப் பிறவி பிறிதொன்றுமே இல்லை. உயர்ந்த குடியிலே பிறந்தவராயினும் அவர்களைப் பசிப்பிணி பற்றிக்கொண்டால் அவர்களது மனிதத்தன்மை மாறிவிடும். அவர்தம் குடிப் பிறப்பின் பெருமை குன்றிவிடும். பரம்பரைப் பெருமை பறந்து போகும். தீமைக் கடலைக் கடப்பதற்குத் தெப்பமாக உதவும் புணையாம் கல்வி என்னும் தெப்பத்தினையும் பசிப்பிணியாற் பதறுவோர் கைவிட்டு விடுவர். பின் தீமைக்கடலில் ஆழ்ந்து நலிப்பர். மக்களுக்கு அழகு தரும் அணியாம் நாணமும் பசிப்பிணி வந்துற்றால் அவரை விட்டு நீங்கிவிடும். எத்தகைய இழிசெயலையும் இயற்றத் தூண்டும். அழகை அகற்றும். அழகிய இளம் மனைவியரோடும் பிறன்கடை வாயிலிற் சென்று இரந்து நிற்கவும் செய்யும். இவ்வளவு கொடுமைகளுக்கு மேலும் ஒருவனைப் பசிப்பிணி துன்பத்தில் ஆழ்த்தும் தகையதாகும். இதனைச் சாத்தனார் வாய்மொழியாகவே கேட்போம் :

> குடிப்பிறப்பு அழிக்கும்; விழுப்பங் கொல்லும்;
> பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்;
> நாணணி களையும் மாணெழில் சிதைக்கும்
> பூண்முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும்
> பசிப்பிணி யென்னும் பாவி

(பாத்திரம் பெற்ற காதை : 76—80)

மேலும் சாத்தனர் பசிக்கொடுமையினை விவரிப்பதற்குப் பஞ்ச காலத்தில் உணவேதும் கிடைக்காத நிலையில் நாய்க்கறி உண்ணத் தலைப்பட்ட விசுவாமித்திர முனிவனையும், பெற்ற பிள்ளையையே உண்ண ஒருப்பட்ட தாயையும் காட்டுவர்.

எனவே, இவ்வுலகில் உள்ள உயிர்களுக்கெல்லாம் உண்ண உணவளிப்பதே அறத்தினும் அறம்; தலையாய அறம் என்று அழுத்தந் திருத்தமாக வற்புறுத்துகின்றார் சாத்தனர்.

மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே
(பாத்திரம் பெற்ற காதை 95—96)

மணிமேகலைக்குப் பௌத்த தருமத்தை உபதேசித்த அறவண அடிகளும், மக்கள், தேவர் ஆகிய இருவர்க்கும் ஏற்ற முடிவான அறம் பசிப்பிணி யொழிப்பே என்றும், அதுவே மிகப்பெரிய நல்லறம் என்றும் நவின்றதாக அறிகிறோம்.

மக்கள் தேவர் எனஇரு சார்க்கும்
ஒத்த முடிவின் ஓரறம் உரைக்கேன்
பசிப்பிணி தீர்த்தல் என்றே அவரும்
தவப்பெரு நல்லறம் சாற்றினர்
(அறவணர்த் தொழுத காதை 116—119)

மேலும், 'அறம்' என்ற சொல்லுக்கே விளக்கம் அளிப்பது போல மணிமேகலைக் காப்பியத்தில் அமைந்துள்ள பின்வரும் தொடர்கள் உன்னியுணரத் தக்கனவாகும்.

அறமெனப் படுவது யாதெனக் கேட்பின்
மறவாது இதுகேள்; மன்னுயிர்க் கெல்லாம்

**உண்டியும் உடையும் உறையுளும் அல்லது**
**கண்டது இல்.**

*(ஆபுத்திரனோடு மணிபல்லவ மடைந்த*
*காதை 228—31)*

எனவே ஒருவன் உயிர்வாழ இன்றியமையாத் தேவையாய் இலங்கும் உண்டி, உடை, உறையுள் ஆகிய மூன்று 'உ'க்களும் இவ்வுலகிற் பிறந்த ஒவ்வொருவர்க்கும் கிடைக்கப்பெற வேண்டும். காலங்கள் கடந்து வாழும், காலத்தில் நின்று வாழும் இவ்வுயரிய கருத்தினை முதன் முதலாகத் தமிழிலக் கியத்தில் தெளிவாக வற்புறுத்திக் கூறுவது மணிமேகலைக் காப்பியமே யாகும்.

அடுத்த அறமாகச் சாத்தனார் சாற்றுவது சாதியொழிப் பாகும். 'சாதி களைந்திட்ட ஏரி நல்ல தண்டமிழ் நீரினை ஏற்கும்' என்று இக்காலக் கவிஞர் ஒருவர் குறிப்பிட்டார். மனிதர் செத்தபிறகு அவர்களை அடக்கம் செய்யும் இடத்தின் மேல் எழுந்த சமாதிகளைக் கொண்டே செத்தவர் இன்ன சாதியினர் என எளிதில் அறிந்துகொள்ளும் வண்ணம் மணிமேகலை காலத்தில் காவிரிப்பூம்பட்டினத்தில் இடுகாடு அமைந்திருந்தது.

**அருந்தவர்க் காயினும் அரசர்க் காயினும்**
**ஒருங்குடன் மாய்ந்த பெண்டிர்க் காயினும்**
**நால்வேறு வருணப் பால்வேறு காட்டி**
**இறந்தோர் மருங்கின் சிறந்தோர் செய்த**
**குறியவும் நெடியவும் குன்றுகண் டன்ன**
**சுடுமண் ஓங்கிய நெடுநிலைக் கோட்டமும்**

*(சக்கரவாளக் கோட்ட முரைத்த காதை 54—59)*

ஆபுத்திரன் பிறப்பை இழிந்த பிறப்பென்று கூறி அந்தணர்கள் எள்ளி நகையாடிய பொழுது, ஆபுத்திரன் தன்கண் வெகுளியேதுமின்றி அந்தணர்களைப் பார்த்துப் பின் வருமாறு பேசினான் :

'வேதியர் பிறந்த குலத்தைக் கேளுங்கள்; நான்முகனிடத்திலே பிறந்த வேதங்களை அறிந்த முதல்வர்களாக விளங்கும் வசிட்டரும் அகத்தியரும் யாவர்? தேவதாசியாகிய திலோத்தமையின் பிள்ளைகள் பூணூலை அணிந்த வேதியர்களே! இது பொய்யா?' என்று புகன்றான்.

> ஆபுத் திரன்பின்பு அமர்நகை செய்து
> மாமறை மாக்கள் வருங்குலம் கேண்மோ?
> முதுமறை முதல்வன் முன்னர்த் தோன்றிய
> கடவுட் கணிகை காதலம் சிறுவர்
> அருமறை முதல்வர் அந்தணர் இருவரும்
> புரிநூல் மார்பீர் பொய்யுரை ஆமோ?
>
> (ஆபுத்திரன் திறமறிவித்த காதை 92—97)

இவ்வடிகள் பிறப்பால் உயர்வு தாழ்வு இல்லை; ஒழுக்கமே உயர்குலம் என்னும் உண்மையை உணர்த்தி நிற்கின்றன.

> பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும் சிறப்பொவ்வா
> செய்தொழில் வேற்றுமை யான்
>
> (குறள். 972)

என்னும் திருக்குறள் கருத்தினை மணிமேகலை அரண் செய்கின்றது.

மதுவொழிப்பு அடுத்து மணிமேகலையிற் பேசப் பெறுகின்றது. கலம் கடலில் உடைந்துபோக நீந்தித் தப்பி நாகர்மலையை அடைந்த சாதுவன் என்னும் சான்றோன், கள்ளடு குழிசியும் கழிமுடை நாற்றமுங் கொண்டு, பெண்டிரோடு இருந்த குருமகனைக் கண்டு, மயக்கந்தரும் கள்ளையும், மன்னுயிர் நீக்கும் கொலையையும் தவிர்த்தவரே மக்கள் எனக் குறித்தற்குரியர் என்று குறிப்பிட்டுத் திருத்தினான்.

**மயக்குங் கள்ளும் மன்னுயிர் கோறலும்**
**கயக்கறு மாக்கள் கடிந்தனர் கேளாய்**

*(ஆதிரை பிச்சையிட்ட காதை 84—85)*

சிறையொழிப்புச் சீர்திருத்தமும் மணிமேகலை காட்டும் அறநீதியாகும். தன் மகன் உதயகுமரன் இறப்புக் கண்டு பேதுற்ற பெருநெஞ்சினளாம் இராசமாதேவி, மணிமேகலைக்கு மயக்க மருந்து தந்து பித்தேறச் செய்து, அவளைக் கீழ் மகனொருவனால் கெடுக்க நினைக்கிறாள். ஆனால் மணிமேகலை யின் தவம் அவளை அவ் அவத்திலிருந்து காப்பாற்றுகின்றது. இராசமாதேவியை அணுகி அவளுக்கு அறவுரை பகருகின்றாள்:

'அம்மா, இராசமாதேவியே! உயிர் துறந்துபோன உதயகுமரன் உடலுக்காகக் கலங்கி நீ அழுகின்றாயா? அல்லது அவன் உயிருக்காக அழுகின்றாயா? உடலுக்காக என அழுவாயேயாயின் அவன் உடலை நீயே உன்னிடத்து வைத்துக் கொள்ளாமல் சுடுகாட்டுக்கு எடுத்துக்கொண்டு சென்று சுடச் சொன்னது யார்? உயிர்க்காக அழுவாயேயானால் தோன்றிய அந்த உயிர் அழிந்து விடவில்லை. வேறோர் உடலில் அது இப்பொழுது புகுந்து உலவுகின்றது. எனவே இவ்வுகில் நீ காணும் உயிர்களுக்கெல்லாம் அன்பு செலுத்துவாயேயானால் அவ்வுயிர்களுள் ஒன்று உன் ஆருயிர் மகன் உதயகுமரனின் உயிராக இருக்கலாம் அல்லவா?' என்றாள்.

**உடற்கழு தனையோ உயிர்க்கழு தனையோ**
**உடற்கழு தனையேல் உன்மகன் தன்னை**
**எடுத்துப் புறங்காட்டு இட்டனர் யாரே**
**உயிர்க்கழு தனையேல் உயிர்புகும் புக்கில்**
**செயப்பாட்டு வினையால் தெரிந்துணர் வரியது**
**அவ்வுயிர்க் கன்பினை யாயின் ஆய்தொடி**
**எவ்வுயிர்க் காயினும் இரங்கல் வேண்டும்**

*(சிறைவிடு காதை 73—79)*

இவ்வாறு மணிமேகலை, இராசமாதேவியிடம் கூறி அவள் மனத்தில் இரக்கத்தைத் தோற்றுவித்து, அதனால் அந் நாட்டு மன்னன் சிறைக் கோட்டத்தை அறக்கோட்டமாக ஆக்கச் செய்தாள்.

இவ்வுடம்பு முன் செய்த வினையால் பிறந்தது; நல்வினை தீவினைகளைச் செய்வதற்குக் காரணமாக இருப்பது. புனுகு முதலான பூசுபொருள்கள் இன்றேல் புலால் நாற்றம் வீசுவது. எஞ்ஞான்றும் இளமையுடன் இருக்கும் என்று இயம்ப முடியாதது; மூப்பும் சாக்காடும் முன்தோன்ற நிற்பது; கொடிய நோய்களுக்கு இருப்பிடமாக இலங்குவது; ஆசைகள் அலைக் கழிக்கும் கடல்; குற்றங்கள் நிறைந்திருக்கும் ஒரு பாண்டம். புற்றிலே பாம்பு தங்கியிருப்பது போலக் கோபம் உறையும் ஓர் இடம்; துன்பம், திகைப்பு, மூர்ச்சையடைதல், வாய்விட்டு அழுதல் முதலான பல தன்மைகளை எப்போதும் தன்னகத்தே கொண்டுள்ள உள்ளத்தையுடையது; மக்கள் உடம்பின் இயற்கை இத்தகையதுதான் என்று மணிமேகலை தெளிவுறப் புலப்படுத்துகின்றது :

> வினையின் வந்தது வினைக்குவிளை வாயது
> புனைவன நீங்கின் புலால்புறத் திடுவது
> மூப்புவிளி வுடையது தீப்பிணி யிருக்கை
> பற்றின் பற்றிடம் குற்றக் கொள்கலம்
> புற்றடங்கு அரவின் செற்றச் சேக்கை
> அவலம் கவலை கையாறு அழுங்கல்
> தவலா வுள்ளம் தன்பால் உடையது
> மக்கள் யாக்கை யிது

(பளிக்கறை புக்க காதை **113—120**)

இது போன்றே சாவு, உறங்குவதைப் போன்றது; பிறப்பு, உறங்கி விழிப்பதைப் போன்றது என்னும் குறட்கருத்து, மணிமேகலையில் பின்வரும் தொடர்களில் எதிரொலிக்கக் காணலாம்.

பிறந்தவர் சாதலும் இறந்தவர் பிறத்தலும்
உறங்கலும் விழித்தலும் போன்ற துண்மையின்
நல்லறஞ் செய்வோர் நல்லுலகு அடைதலும்
அல்லறஞ் செய்வோர் அருநரகு அடைதலும்

(ஆதிரை பிச்சையிட்ட காதை 86—89)

மணிமேகலை நவிலும் நற்கருத்தாகும்.

யாக்கை நிலையாமை போன்றே இளமையும் நிலையாது என்பது மணிமேகலை உணர்த்தும் மற்றோர் அரிய பாடமாகும். அழியக்கூடிய அழகை மணிமேகலை மனங்கொளும்படி வற்புறுத்தியிருக்கும் பாங்கு உன்னி உணரத்தக்கது;

'கருமணல் போன்ற கூந்தல், வெண்மணல் போல் வெளுக்கும் காலம் வந்துற்றது; பிறைபோலும் நெற்றி, வெளுத்துச் சுருங்கும் தன்மை வந்தடைந்தது. வெற்றி நல்கும் வில்போல் விளங்கும் புருவம், இறால் மீனின் வற்றலைப் போல் வற்றி அழகிழந்தது; செங்கழுநீர்ப் பூப்போன்ற கண்கள், இப்போது நீர் நிறைந்து கண்ணீரை வடிக்கின்றது. குமிழம் பூப்போன்ற மூக்கு, தானே ஒழுகும் சீழ்போன்ற சளி நிறைந்து விளங்குகிறது. நிரல்பட முத்துப்போல் ஒளியுமிழ்ந்த பற்கள், இப்போது சுரைவிதையைப் போல் மாறி அழகையிழந்தன. இலவம் இதழ்போல் சிவந்திருந்த வாய் இப்பொழுது நாறிப் போன புண்ணைப்போல் புலால் நாற்றம் வீசி நிற்கின்றது. வள்ளைக்கொடி போன்ற காதுகள், காய்ந்து வற்றிய மாமிசத் துண்டுகள் போலக் காட்சி தருகின்றன. கொள்ளை அழகு குலவிய தனங்கள் இன்று உள்ளீடு இல்லாத வெறும் பைகள் போல நீண்டு தொங்குகின்றன. அழகிய இளைய மூங்கில் குருத்தைப் போன்று குளிர்ச்சியும் வழவழப்பும் திரட்சியும் கொண்டிருந்த தோள்கள், இப்பொழுது ஒசிந்து தாழ்ந்து தொங்குகின்ற தென்னை மட்டைபோலச் சுருங்கி அழகிழந்துள்ளன. விரல்கள், வற்றிச் சுருங்கிப் போய் வனப்பிழந்து

விட்டன. வாழைத் தண்டைப்போற் செழித்து வனப்புடன் விளங்கிய துடைகள் இரண்டும் இப்போது வற்றிக் காய்ந்த தாழைத் தண்டைப் போல மாறிவிட்டன. அம்புப் புட்டில் என்று ஒரு காலத்தில் நயமுடன் வருணிக்கப்பட்ட கணைக்கால் கள் இன்று நரம்புகளை வெளியே காட்டிக் கொண்டிருக்கின் றன. தளிர் போலத் துலங்கிய பாதங்கள் முற்றி முதிர்ந்து தானே உதிர்கின்ற நெற்றுத் தேங்காய்களைப்போல வற்றி விட்டன. இத்தகைய உடம்பைத்தான் முன்பு பூவாலும், நறுமணப் பொருளாலும் நாற்றம் வீசாமல் மறைத்தனர். ஆடைகளும் அணிகளும் கொண்டு காண்போர் மனத்தைக் கவரும் வகையில் முன்னையோர் அழகு செய்து கொண்டனர். இந்த வஞ்ச நிகழ்ச்சியை நீ அறிவாயாக' என்று மணிமேகலை தன்னை விரும்பிய உதயகுமரனுக்கு, ஒரு நரை மூதாட்டியைக் காட்டித் தோன்றி மறையும் அழகின் திறத்தினைத் தெளிவுறுத் தினாள்:

உதைய குமரன் தன்பாற் சென்று
நரைமூ தாட்டி ஒருத்தியைக் காட்டித்
தண்ணறல் வண்ணம் திரிந்துவே றாகி
வெண்மண லாகிய கூந்தல் காணாய்
பிறை நுதல் வண்ணம் காணாயோ நீ
நரைமையில் திரைதோல் தகையின் றாயது
விறல்விற் புருவம் இவையும் காணாய்
இறவின் உணங்கல் போன்று வேறாயின
கழுநீர்க் கண்காண் வழுநீர் சுமந்தன
குமிழ்மூக் கிவைகாண் உமிழ்சீ யொழுக்குவ
நிரைமுத் தனைய நகையும் காணாய்
சுரைவித் தேய்ப்பப் பிறழ்ந்துவே றாயின

இலவிதழ்ச் செவ்வாய் காணு யோநீ
புலவுப் புண்போற் புலால்புறத் திடுவது
வள்ளைத் தாள்போல் வடிகா திவைகாண்
உள்ளூன் வாடிய உணங்கல் போன்றன
இறும்பூது சான்ற முலையும் காணாய்
வெறும்பை போல வீழ்ந்துவே றுயின
தாழ்ந்தொசி தெங்கின் மடல்போல் திரங்கி
வீழ்ந்தன இளவேய்த் தோளும் காணாய்
நரம்பொடு விடுதோ லுகிர்த்தொடர் கழன்று
திரங்கிய விரல்க ளிவையுங் காணாய்
வாழைத் தண்டே போன்ற குறங்கிணை
தாழைத் தண்டின் உணங்கல் காணாய்
ஆவக் கணைக்கால் காணு யோநீ
மேவிய நரம்போ டென்புபுறங் காட்டுவ
தளிரடி வண்ணம் காணு யோநீ
முளிமுதிர் தெங்கின் முதிர்கா யுணங்கல்
பூவினும் சாந்தினும் புலால்மறைத்து யாத்து
தூசினும் மணியினும் தொல்லோர் வகுத்த
வஞ்சம் தெரியாய் மன்னவன் மகனென
விஞ்சை மகளாய் மெல்லியல் உரைத்தலும்

*(உதயகுமரனை வாளாலெறிந்த காதை : 39-70)*

மணிமேகலை ஆசிரியர் சீத்தலைச் சாத்தனார், இவ்வுலகில் தோன்றிய உயிர்கள் அனைத்தும் ஒருநாள் மடிதல் உறுதி என்பதனை மிகவும் நயம்படக் கிளத்தியுள்ளார்.

தவத்துறை நிற்கும் தவச்சிரேட்டர்கள், பெருஞ் செல்வர் கள், கருவுயிர்த்த பெண்கள், தாமே நடப்பதற்கு வலுவற்ற இளஞ்சிறுவர்கள் ஆகிய அனைவரும் மடிந்து போனதைக்

காண்கிறோம். கொடுந்தொழில் கொண்ட எமன், முதியவர், இளையவர் என்று பார்ப்பதில்லை. எல்லோரையும் காலம் முடிந்தபின் கொன்று குவிப்பான். இவ்வாறு எமனுல் உயிர் குடிக்கப்பட்டு முடிந்துபோன வெற்றுடம்புகளை, நெருப்பாகிய வாயையுடைய இச் சுடுகாடு தின்று மகிழ்வதை எவரும் கண் கூடாகக் காண்கின்றனர். இவ்வாறு கண்டும், மிகப் பெருஞ் செல்வமாகக் கள்ளைக் கருதிக் குடித்து விளையாடுகின்றனர். மிகச்சிறந்த நல்லறங்களை ஆற்றத் தலைப்படாமல் நிற்கின்றனர். இத்தகு தன்மை வாய்ந்த மக்களைக் காட்டிலும் மடமை வாய்ந்தோர் எவரேனும் உண்டோ?'' என்று வினு வெழுப்பி, 'எல்லோர்க்கும் இறப்பு உறுதி; இறப்பிலிருந்து விலக்குப் பெற்றவர் எவரும் இல்லை' என்று தமக்கே உரிய முறையில் அறச்சான்றோராம் சீத்தலைச் சாத்தனர் செப்பமுறப் புலப்படுத்துகின்றார் :

தவத்துறை மாக்கள் மிகப்பெருஞ் செல்வர்
ஈற்றிளம் பெண்டிர் ஆற்றுப் பாலகர்
முதியோர் என்னுன் இளையோர் என்னுன்
கொடுந்தொழி லாளன் கொன்றனன் குவிப்பவிவ்
அழல்வாய்ச் சுடலை தின்னக் கண்டும்
கழிப்பெருஞ் செல்வக் கள்ளாட் டயர்ந்து
மிக்க நல்லறம் விரும்பாது வாழும்
மக்களின் சிறந்த மடவோர் உண்டோ!

(மணிமேகலை : சக்கரவாளக்கோட்ட
முரைத்த காதை : 97-104)

எனவே இவ்வுலகில் ஒழுக்கமே உயர்வு தரும், அறமே விழுத்துணையாக நிற்கும் என்பதனைப் பின்வரும் பகுதி கொண்டு மேலும் தண்டமிழ்ச் சாத்தனர் தெளிவுறுத்து கின்றார்.

முடிபொருள் உணர்ந்தோர் முதுநீர் உலகில்
கடியப்,பட்டன ஐந்துள அவற்றில்
கள்ளும் பொய்யும் களவும் கொலையும்
தள்ளா தாகும் காமம் தம்பால்
ஆங்கது கடிந்தோர் அல்லவை கடிந்தோர்

*(மணிமேகலை :*
*சிறைசெய் காதை : 169-173)*

வித்தி நல்லறம் விளைந்த அதன்பயன்
துய்ப்போர் தம்மனைத் துணிச்சிதர் உடுத்து
வயிறுகாய் பெரும்பசி அலைத்தற்கு இரங்கி
வெயிலென முனியாது புயலென முடியாது
புறங்கடை நின்று புன்கண் கூர்ந்துமுன்
அறங்கடை நில்லாது அயர்வோர் பலர்.

*(மணிமேகலை: பாத்திரம்*
*பெற்ற காதை : 108-113)*

*இவ்வாறு காப்பியப் பண்புகளைக் கவினுற விளக்கிக் காட்டும் மணிமேகலை,*

பசியும் பிணியும் பகையும் நீங்கி
வசியும் வளனுஞ் சுரக்கென வாழ்த்தி

*(ஊரலருரைத்த காதை : 70-71)*

*நிற்கிறது. மனிதன் வையத்து வாழ்வாங்கு வாழ வகை செய்யும் வண்டமிழ் நூலாக மணிமேகலை, குன்றின் மேலிட்ட விளக்காக ஒளிர்ந்து ஒளி பரப்புகின்றது.*

# 12. மகளிரும் விருந்தும்

தமிழ்நாட்டிற்குப் பெருமை சேர்ப்பவர்கள் பெண்கள்; வாழையடி வாழையாகத் தமிழ்ப் பெண்டிரின் பண்புகள் இலக்கியங்களின்வழி படிக்கப் பெறும் பொழுது மாண்பு நிறைந்தனவாகவே காணப்படுகின்றன. பெண்ணின் பெரும் பண்புகள் ஒரு குடும்ப முன்னேற்றத்திற்கு அரணாக இருந்து அக்குடும்பத்தை வாழ்விக்கக் காண்கிறோம். திருவள்ளுவரும்,

> **இல்லதென் இல்லவள் மாண்பானல் உள்ளதென்**
> **இல்லவள் மாணுக் கடை**

*(குறள் : 5)*

என்று இல்லாளின் இனிய சிறப்பினை எடுத்து மொழிந்திருக்கக் காணலாம்.

பிறந்த வீட்டிற்குப் பெருமை சேர்க்கும் நிலையில் புகுந்த வீட்டில் அவர்கள் வாழ்வு துலங்குதல் வேண்டும். தலைவன் நல்ல செல்வம் பெற்று மகிழ்ந்து வாழ்வதற்குத் தலைவி காரணமாக அமைகிறாள் :

> **யாய் ஆகியளே விழவுமுத லாட்டி .**

*(குறுந்தொகை : 10-1)*

மேலும் தலைவி பொருத்தி புகுந்த வீட்டிற்கு வருமுன்னர், அவ் வீடு ஒரே ஒரு பசுவைக் கொண்டு, அப் பசுவால் வரும் வருவாயைக் கொண்டு வாழும் எளிய செல்வ நிலையினையுடைய தாக இருந்தது. ஆனால் இப்போதோ எனில் நாள்தோறும் திருவிழா நடைபெறும் ஊரினைப்போல அப் பெண் புகுந்த மனை பூத்துப் பொலிகின்றது என்று தூங்கலோரி என்னும் புலவர் குறிப்பிடுகின்றார் :

உடுத்தும் தொடுத்தும் பூண்டும் செரீஇயும்
தழையணிப் பொலிந்த ஆயமொடு துவன்றி
விழவொடு வருதி நீயே; இஃதோ
ஓர்ஆன் வல்சிச் சீரில் வாழ்க்கை
பெருநலக் குறுமகள் வந்தென
இனிவிழ வாயிற்று எண்ணுமிவ் வூரே.

*(குறுந்தொகை : 295)*

*விருந்து போற்றுதல் மகளிர் கடமைகளில் தலையாய ஒன்றாக இருந்தது. தொல்காப்பியனார் தலைமகளின் பண்புகளைக் குறிப்பிட வந்தவிடத்து,*

விருந்துபுறந் தருதலும் சுற்றம் ஓம்பலும்
பிறவும் அன்ன கிழவோன் மாண்புகள்

*(தொல். கற்பியல், 11)*

*என்று விருந்து போற்றும் விழுப்பப் பண்பினைப் போற்றி யிருக்கக் காணலாம்.*

*திருவள்ளுவர் 'விருந்தோம்புதல்' என்றோர் அதிகாரத்தினை அறத்துப் பாலில் அமைத்திருக்கும் திறம், பண்டைத் தமிழர்தம் வாழ்வில் விருந்தோம்புதல் பெற்றிருந்த இடத்தினை எடுத்துக்காட்டும்.*

செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு

*(குறள் : 86)*

*என்ற குறள் விருந்தோம்பற் சிறப்பினை நன்கு எடுத்துக் காட்டும்.*

*சிலப்பதிகாரத்தில் விருந்து போற்றும் நிலை, பெருமை யுடைய வாழ்வாகக் குறிக்கப்பெற்றுள்ளது.*

மறப்பருங் கேண்மையொடு அறப்பரி சாரமும்
விருந்துபுறந் தரூஉம் பெருந்தண் வாழ்க்கையும்

*(சிலம்பு : 11 : 85-86)*

வறுமையுற்ற எளிய காலத்திலும்கூட விருந்து போற்றும் பண்பினைப் பாணர் குடும்பம் ஒன்று மறந்துவிட வில்லை என்பதனைச் சிறுபாணாற்றுப்படை கொண்டு அறியலாம்.

'பாணன் மனைவி பசியால் வருந்துகின்றவள்; மெல்லிய இடை வாய்ந்தவள்; வளையணிந்த கையினள்; கிணைவாசிப் போனின் இல்லக்கிழத்தி அவள்.

அறுசுவை உணவு சமைப்பதற்குரிய பண்டம் ஒன்றும் வீட்டில் இல்லை. மனைத் தோட்டத்தே விளைந்துள்ள குப்பைக் கீரையினைத் தன் கூர்மை படைத்த நகத்தால் கிள்ளினாள். கீரைக்குப் போட உப்புக்கூட இல்லை. எனவே உப்பின்றி வேக வைத்தாள். செல்வம் வருவதும் போவதும் உலகியற்கை என்று எண்ணும் தெளிந்த அறிவு இல்லாதவர்கள் இந் நிலையினைப் பார்த்தால் நகைப்பார்களே என்று நாணங் கொண்டாள். ஆதலால் தெருவாயிற் கதவைச் சாத்தித் தாளிட்டாள். தனது நிறைந்த சுற்றத்தினரை வரவழைத்து வீட்டினுள்ளே அழைத்துச் சென்று உட்கார வைத்து, அவர்களுடன் தானும் ஒன்றாகத் தான் சமைத்த கீரையுணவை உண்டாள்.'

ஒல்குபசி யுழந்த ஒடுங்குநுண் மருங்குல்
வளைக்கைக் கிணைமகள் வள்ளுகிர்க் குறைத்த
குப்பை வேளை உப்பிலி வெந்ததை
மடவோர் காட்சி நாணிக் கடையடைத்து
இரும்பே ரொக்கலொடு ஒருங்குடன் மிசையும்—
(சிறுபாணாற்றுப் படை : 135-139)

இப் பகுதி கொண்டு வறிய நிலை வந்துற்ற நிலையிலும் விருந்து போற்ற மறக்காத பழந்தமிழ்ப் பெண்டிரின் பண்பு நலத்தினைப் பரக்கக் காண்கிறோம்.

அமிழ்தத்தைக் தன் சுவையால் வென்ற உணவு; சுவைக்கச் சுவைக்கத் தெவிட்டாத மணம் கமழும் இனிய அட்டில்; நல்ல தாளிப்பு மணம் கொண்டது. இத்தகைய உணவை வந்த விருந்தினர்க்கு வரையாது குறைவில்லாமல் வழங்கி

மகிழ்கிறுர்கள் குற்றமற்ற இல்வாழ்க்கைப் பண்பு நிறையப் பெற்ற குடும்ப மகளிர். இவ்வாறு புறநானூறு விருந்து போற்றும் மகளிரைப் போற்றுகின்றது.

**அமிழ்தட்டு ஆனுக் கமழ்குய் அடிசில்**
**வருநர்க்கு வரையா வசையில் வாழ்க்கை**
**மகளிர்............**

*(புறநானூறு : 10 : 7-9)*

நள்ளிரவு நோமாஞலுங்கூட வந்த விருந்தினரை அகமும் முகமும் கோணுமல் விருந்தயரும் பெண்களே முல்லைக் கற்பு நிறைந்த மகளிராக நற்றிணைப் பாடலொன்று போற்றி நிற்கிறது.

**அல்லி லாயினும் விருந்துவரின் உவக்கும்**
**முல்லை சான்ற கற்பின்**
**மெல்லியல் குறுமகள்**

*(நற்றிணை : 142 : 9-11)*

தலைவனுடன் ஊடிப் பிணங்கி யிருக்கும் தலைவி, விருந்தினரைக் கண்ட அளவில் அவ்வூடலை விட்டுவிடுவாள். வந்த விருந்தினர்க்கு வகையான சமையல் வடித்து நிற்பதிலே கவனம் செலுத்துவாள். ஊடியிருந்த அவள் முகத்தில் புன்முறுவல் தவழும்.

**அட்டி லோளோ அம்மா அரிவை**
**எமக்கே வருகதில் விருந்தே சிவப்பான்று**
**சிறுமுள் எயிறு தோன்ற**
**முறுவல் கொண்ட முகங்காண் கம்மே.**

*(நற்றிணை : 12 : 9-12)*

பரத்தையர்பால் நட்பாடி மகிழ்ந்துவிட்டுத் தன் மனை நோக்கி வருகிறுன் தலைவன். அவன் ஒழுகலாற்றினைக் கண்டித்து அவனேடு ஊடியிருக்கத் தலைவிக்கு நேரமில்லை. காரணம், வீட்டிலே மிகுதியான விருந்தினர் வந்து தங்கிச் சென்ற வண்ணமே உள்ளனர். எனவே ஊடுவதற்கு வழியே இல்லை என்று தலைவி ஒருத்தி கூறிக்கொள்கிறுள்.

நன்மனை நனிவிருந் தயரும்
கைதூ வின்மையின் எய்தா மாறே

(நற்றிணை : 280 : 9-10)

சங்க கால மகள் விருந்தினர் ஓயாது வந்துகொண்டிருந்தாலும் மனங்கோணமாட்டாள். உணவு சமைக்க உதவும் பண்டங்கள் குறைவாயிருந்தாலும் கவலைப்பட மாட்டாள். வந்த விருந்தினர் அனைவரையும் பந்தலிலே வரிசையாக உட்கார வைத்து முறையாக உணவு பரிமாறி உபசரிப்பாள்;

தவச்சிறி தாயினும் மிகப்பலர் என்னுள்
நீள்நெடும் பந்தர் ஊண்முறை ஊட்டும்
இற்பொலி மகடூஉ.

(புறநானூறு : 331 : 7-9)

கொடிச்சியர் குலப்பெண்களிடம் பகுத்துண்டு விருந்து போற்றும் பண்பு விளக்க முற்றிருந்தது. மலைச்சாரலில் கானவனால் அம்பெய்து கொல்லப்பெற்ற முள்ளம் பன்றியின் கொழுவிய இறைச்சியினை அவன் மனைவி மகிழ்ச்சியுடன் வீட்டிற்கு எடுத்துக்கொண்டு வந்து, அவ் இறைச்சியைச் சிற்றூரிலே உள்ள பலருக்கும் பகுத்துக் கொடுத்து நிற்கிறாள்.

கானவன் எய்த முளவுமான் கொழுங்குறை
தேங்கமழ் கதுப்பின் கொடிச்சி கிழங்கொடு
காந்தளம் சிறுகுடிப் பகுக்கும்.

(நற்றிணை : 85 : 7-9)

சிலப்பதிகாரத்திலும் கதைத் தலைவி கண்ணகி, கோவலன் பிரிந்தபொழுது வந்த விருந்தினரைப் போற்ற முடியாமற் போய்விட்டதே என்று எண்ணி நைந்ததாகக் குறிப்பிட்டுள்ளதனின்றும் விருந்தோம்புதலின் மாண்பினை உணரலாம் :

அறவோர்க் களித்தலும் அந்தண ரோம்பலும்
துறவோர்க் கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை.

(சிலம்பு : கொலைக்களக்காதை : 71-73)

கம்பநாடரும் தம் காப்பியமாம் இராமாயணத்தில் கோசல நாட்டுப் பெண்கள் கல்வியும் செல்வமும் கணக்கின்றி வாய்த்தவர்கள் என்றும், எப்போதும் வருந்தி வந்தவர்க்கு வழங்கி, நாள்தோறும் வந்த விருந்தினருடன் கூடி வகையுடன் உண்ணுகின்றனர் என்றும் குறிப்பிட்டுள்ளார் :

> பெருந் தடங்கண் பிறைநுதலார்க் கெல்லாம்
> பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால்
> வருந்தி வந்தவர்க்கு ஈதலும் வைகலும்
> விருந்தும் அன்றி விளைவன யாவையே

(கம்பராமாயணம் : பாலகாண்டம் :
நாட்டுப்படலம், 36)

இருபதாம் நூற்றாண்டின் சிறந்த கவிஞரான பாவேந்தர் பாரதிதாசன் அவர்களும், தாம் இயற்றிய 'குடும்ப விளக்கு' என்னும் நூலில் ஒரு பகுதியினை 'விருந்தோம்பல்' என்று தலைப்பிட்டுச் சிறப்பித்திருக்கக் காணலாம்.

எனவே, விருந்தோம்புதல் என்னும் விழுமிய பண்பு தமிழக மகளிர்மாட்டு வழிவழிச் சிறந்து வந்துகொண்டிருக்கின்றது என்பதனை அறிந்துகொள்ளலாம்.

★

